தரு

இன்னமுது ஆயது இயேசு நாமமே!

கிளை: 18 சிறப்பிதழ் 2016 மலர்: 01

தரு மறுமலர்ச்சி
இருபதாண்டு
1996-2016

நிறுவன ஆசிரியர்
மூதறிஞர்
பொன்னு. ஆ.சத்தியசாட்சி



சீர்திருத்தச் சிற்பி
மார்டின் லூத்தர்

திருச்சபைச் சீர்திருத்தம்
ஐந்நூறாண்டு
1517-2017

உலகக் கிறிஸ்தவத் தமிழ்ப் பேரவை - காலாண்டிதழ்
A quarterly of the World Christian Tamil Academy

தனிச் சுற்றுக்காக FOR PRIVATE CIRCULATION ONLY

கிறிஸ்தவத் தமிழ்க் கோவில்

நியுயார்க்

‘தரு’ ஆய்விதழ்
தழைத்தோங்க
எங்களது
நல்வாழ்த்துகள்!

CHURCH OF SOUTH INDIA - DIOCESE OF MADRAS

The Diocesan Office: 226, Cathedral Road,
Post Box No.4914, Chennai- 600 086.

Phone: Off: 91-44-2811 3929 / 2811 3933
2811 7629

THE RT.REV.DR.J.GEOEGE STEPHEN
BISHOP IN MADRAS

Res: 91-44-2811 5804
Fax: 91-44-2811 0608



அன்புடைய உலகத் தமிழ்ப்பேரவைப் பொறுப்பாளர்களுக்கு தென்னிந்தியத் திருச்சபை சென்னைப் பேராயத்தின் உளம் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதுபெரும் பேராயர் சாலமன் துரைசாமி மற்றும் கிறிஸ்தவத் தமிழ் அறிஞர் பொன்னு ஆ. சத்தியசாட்சி போன்ற தகைமைமிகு தலைவர்களால் தொடங்கப்பட்ட பேரவை கடந்த 36 ஆண்டுகளாக செய்து வரும் அரிய தமிழ் தொண்டுக்காகக் கடவுளைப் போற்றுகிறேன். தமிழிலக்கியம் கலை மற்றும் பண்பாட்டு வளர்ச்சிக்கு உள்நாட்டிலும் அயல்நாட்டிலும் பேரவையின் ஊக்கமிகு நடப்புகளுக்காக பொறுப்பாளர்கள் அவைரையும் நான் பாராட்டுகிறேன்.

இவ்வமயம் பேரவையின் சார்பாக வெளிவரும் 'தரு' இதழ் தொடங்கப் பெற்று 20 ஆண்டுகள் நிறைவு பெறுவதை பேராயக் குடும்பத்தின் சார்பாக வாழ்த்துவது எனக்குக் கிடைத்த அரும் வாய்ப்பாகக் கருதுகிறேன்.

இறை இலக்கியப் பணிகளைத் தாங்கிச் செல்லும் கலனாக 'தரு' இதழ் பயன் தரும் என்பதில் ஐயமில்லை.

உலகக் கிறிஸ்தவத் தமிழ்ப் பேரவையின் பன்முகப் பணிகளுக்குச் சென்னைப் பேராயத்தின் நல்லாதரவு என்றுமுண்டு என்பதை உறுதிப்படுத்தி மீண்டும் உங்களை வாழ்த்துவதில் மகிழ்கிறேன்.

இறைப்பணியில்

பேரருள்திரு. அறிவர் **ஜெ. ஜார்ஜ் ஸ்டீபன்**
சென்னைப் பேராயர்

Church of South India

DIOCESE OF VELLORE

Post Box No. 140, Vellore.
3/1, Anna Salai, VELLORE - 632 001.
Res.: 13, Filterbed Road, Vellore - 632 001.

Off : 0416 - 2232160
0416 - 2220212
Res : 0416 - 2216324
Mobile : 94424 53845
email : bishoprajavelu@gmail.com

Rt. Rev. Dr. A.RAJAVELU
Bishop in Vellore
Head of All Diocesan Institutions

‘தருவினில் மாண்டோய் நமஸ்காரம்’

நற்செய்தியை மக்களிடம் கொண்டுசெல்லும் ஆற்றல் சான்ற சாதனம் இதழ்கள். அதனால்தான் நம் மிஷனெரிமார்கள் கைப்பிரதிகளைக் கருவியாகக் கொண்டு சுவிசேஷம் அறிவித்தனர். அந்த நன்னோக்கில் உலகக் கிறிஸ்தவத் தமிழ்ப் பேரவை, ‘தரு’ என்னும் கிறிஸ்தவத் தமிழ் ஆய்வு இதழினைத் தொடர்ந்து 20 ஆண்டுகளாக வெளியிட்டு வருவதனை அறிந்து மகிழ்கிறேன். இருபது ஆண்டுகளை நிறைவு செய்யும் ‘தரு’ இதழுக்கு எம் இதயம் நிறைந்த பாராட்டுகள்.

‘தரு’ என்பதற்கான பொதுப்பொருள், மரம் என்பதாகும். பேரவைத் தரு, சிலுவை மரத்தைக் குறிக்கும் சிறப்புச் சொல். கிறிஸ்தவக் கீர்த்தனைக் கவிஞர் அருள்திரு. ம. வேதமாணிக்கம் ஐயர் ‘தருவினில் மாண்டோய் நமஸ்காரம்’ என்று ஆண்டவரைப் போற்றிப் பாடுகிறார். இந்தத் தரு, ஏசுவின் மீட்பின் அருஞ்செயலை ஆன்மாக்களுக்கு என்றென்றும் அறிவிப்பது. எல்லா மரத்திற்கும் வேர் உண்டு, ஆனால் சிலுவை மரத்திற்கு வேர் இல்லை. இம்மரம் மனித நேயத்தின் உச்சம். அனைத்துச் சபைகளைச் சார்ந்த அன்பர்களின் முயல்வினால் வெளியிடப்படும் இத்‘தரு’ தொடர்ந்து நலஞ்சார்ந்த நற்கனிகளை அளித்திட வேண்டும் என விழைகிறேன்.

உலகத் கிறிஸ்தவத் தமிழ்ப் பேரவையின் இரண்டாம் மாநாடு வேலூரில் 1981 ஆம் ஆண்டு நடைபெற்றது. இம்மாநாட்டில் தமிழ் அறிஞர்களும், கிறிஸ்தவத் தமிழ் அறிஞர்களும் பங்கேற்றுச் சிறப்பித்தனர். அம்மாநாட்டு ஆய்வரங்குகளில் அளிக்கப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு, தமிழ் வரலாற்றில் கிறிஸ்தவம் என்ற பெயரில் நூலாகப் பேராயத்தால் வெளியிடப்பட்டது. இன்றும் உலகக் கிறிஸ்தவத் தமிழ்ப் பேரவையின் சார்பாக கருத்தரங்கு, படைப்பிலக்கியப் பட்டறை முதலிய நிகழ்வுகள் வேலூர்ப் பேராயத்தில் நடத்தப்பட்டுவருகின்றன. பேரவை நிர்வாகப் பொறுப்பிலும் ‘தரு’ இதழ்க் குழுவிலும் எம் பேராயப் பேராசிரியர்கள் அங்கம் வகித்துப் பங்களித்து வருகின்றனர்.

நம் தமிழ்மொழிச் சிறப்பினையும், கிறிஸ்தவத் தமிழ் இலக்கியத் திறனையும் தரு இதழ் மேலும் வெளிக்கொணர வேண்டும் என ஆண்டவர் ஏசு எம்பெருமான் திருப்பெயரால் ஆசி வழங்குகிறேன்.

வேலூர்
14.03.2017

பேரருள்திரு. அறிவர் A. ராஜவேலு
பேராயர்.
தென்னிந்தியத் திருச்சபை, வேலூர்ப் பேராயம்
BISHOP IN VELLORE
C.S.I. DIOCESE OF VELLORE

தந்தை பேராயர்
M. எஸ்றா சற்குணம்

FATHER BISHOP
M. Ezra Sargunam

வாழ்த்துரை

அன்புடையீர்,

தேனினும் தேனடையினின்று சிந்தும் தெளி தேனினும் அமுதாகிய இறைமைந்தன் இயேசுவின் திருப்பெயரால் வாழ்த்துகிறேன்.

தருவினில் மாண்டவரும் என்றென்றும் வாழ்பவருமாகிய இயேசு பிரானின் சீடருள் ஒருவராகிய தோமா, நமது தமிழகத்துக்கு முதல் நூற்றாண்டிலேயே வந்து அருட்பணியாற்றி இரத்த சாட்சியாய் உயிர் துறந்ததினாலும், 18 ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் டென்மார்க் தேசத்திலிருந்து வந்த அருட்பணியாளர்கள் தமிழகத்தையே தெரிந்துகொண்டு, தமிழைக் கற்றுணர்ந்து, விவிலியத்தை மொழிபெயர்த்து திருச்சபைகளை நிறுவியபடியானாலும் தமிழ்நாடு பெருமையுடைத்தது.

இங்ஙனம், அருட்பணியாளர்கள் தமிழகத்தில் நற்செய்தியைஅறிவித்ததினால் தமிழ்நாட்டில் 'காரிருளில் இருந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள். சாவின் நிழல் சூழ்ந்த நாட்டில் சுடரொளி உதித்துள்ளது'. (மத்.4:16). நம் மக்களுடைய அறிவுக் கண்களையும் அகக் கண்களையும் திறந்து வைத்தவர்கள் இவர்களே, தமிழ் மொழிக்கும் தமிழ் நாட்டிற்கும் மட்டுமல்லாது இந்திய மக்கள் மத்தியில் அளப்பரிய சேவைகளைக் கிறித்தவச் சான்றோர்கள் இன்றளவும் தொடர்ந்து செய்து வருகின்றனர் என்பதை யாரும் மறக்கவோ மறுக்கவோ மறைக்கவோ இயலாது. இப்படிப்பட்ட நற்செய்திகளை உலகுக்கு அறிவிக்கிற இதழ்களுள் 'தரு'வும் ஒன்று.

உலகக் கிறித்தவத் தமிழ்ப் பேரவை சார்பாக காலஞ்சென்ற மூதறிஞர் பொன்னு. ஆ. சத்தியசாட்சி அவர்களாலும், மூதறிஞர் பேராயர் சாலமோன் துரைசாமி அவர்களாலும் தொடங்கப் பெற்ற 'தரு' ஆய்விதழுக்கு 20 ஆண்டுகள் நிறைவு பெற்றதையொட்டி வெளியிடப்படும் இச்சிறப்பிதழுக்கு வாழ்த்துரை வழங்குவதில் உவகையடைகிறேன்.

அறிவர் மோசசு மைக்கேல் பாரடே மற்றும் டாக்டர் ப. டேவிட் பிரபாகர் ஆகிய தமிழ் அறிஞர்கள் 'தரு' எப்புயலிலும் சாய்ந்து விடாமலும் வீழ்ந்து விடாமலும் தொடர்ந்து காத்து வருகிறதை அறிந்து பெருமைப்படுகிறேன். இவர்கள் சீரிய பணி தொடரவும். ஆய்வுப் பணிகளோடு சமூக சீர்திருத்தப் பணிகளை மேற்கொள்ளவும் நற்செய்தியை அறிவிக்கும் திருப்பணியைத் தொய்வின்றி நிறைவேற்றவும் என்னுடைய சார்பாகவும், நான் சார்ந்து நிற்கும் இந்திய சுவிசேஷ திருச்சபையின் சார்பாகவும் என் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிறிஸ்துவின் பணியில்,

ம. எஸ்றா சற்குணம்,
தந்தை பேராயர், இசிஐ

சென்னை : 600 010.
பிப்ரவரி 1, 2017.

Residence: 13-14, Waddels Road, Kilpauk, Chennai - 600 010, India.

Phone : (00-91-44) 26413178, 26427574, 26428955
E-mail : bishopsargunam.eci@gmail.com, ecindia@vsnl.com

The House of Judah will take root below and bear Fruit Above - Isaiah 37:31
..கீழே வேர்பற்றி மேலே கனிகொடுப்பார்கள் – ஏசாயா 37:31
Evangelical Church of India

The Most. Rev. Dr. D. SUNDAR SINGH
Bishop-President, ECI All India Conference

வாழ்த்துரை

கிறிஸ்து பெருமானின் நற்செய்தியைத் தமிழகத்தில் அறிவிக்க வந்த அயல்நாட்டு அருள் தொண்டர்கள், அந்த நற்செய்தியை அறிவித்து நம் மக்களின் ஆன்மிகக் கண்களைத் திறந்து வைத்ததோடு, நம் மக்களுடைய கல்விக்கண்களையும் தம் திருப்பணிகளால் திறந்து வைத்தனர். அதற்கும் மேலாக, உலகின் மூத்த மொழியாக அறிஞர்களால் போற்றப்படும் நம் அன்னைத் தமிழை வளப்படுத்தவும் வாழ்விக்கவும் அவர்கள் அளித்த அருங்கொடைகள் அளப்பரியன. அத்தகைய அரும்பணிகளையெல்லாம், கிறித்தவத் தொண்டர்களின் உன்னத சேவைகளும் உயர்ந்த பணிகளும் மறைக்கப்பட்டும் மறக்கப்பட்டும் வரும் இக்காலக் கட்டத்தில் தொடர்ந்து வெளிப்படுத்துவதற்கும், அவர்கள் செய்து வந்த தொண்டுகளையெல்லாம் தொடர்ந்து செய்வதற்கும் இப்படிப்பட்ட உயரிய நோக்கங்களோடு முது பேராயர் சாலமன் துரைசாமி, மூதறிஞர் பொன்னு ஆ. சத்தியசாட்சி போன்றோரால் தொடங்கப்பட்டு, இந்நாட்களில் டாக்டர் மோசஸ் மைக்கேல் பாரடே, டாக்டர் டேவிட் பிரபாகர் போன்ற கிறிததவத் தமிழறிஞர்களால் உலகக் கிறித்தவத் தமிழ்ப்பேரவை சார்பாக, தொடர்ந்து சிறப்பாக நடத்தப்பட்டுவரும் **"தரு"** என்ற ஆராய்ச்சிக் காலாண்டிதழ், தன் மறுமலர்ச்சி வரிசையில் இருபதாவது ஆண்டு நிறைவை நினைவூட்டும் சிறப்பு மலராக வெளிவருவது கண்டு இதயம் பூரித்து இறைவனுக்கு நன்றி செலுத்துகிறேன். இத்திருப்பணி இன்னும் பல்லாண்டுகள் நம் ஆண்டவரின் வருகைவரை தொய்வின்றித் தொடரவும், அதன் மூலம் நம் தாய்த்தமிழும் கிறித்துவின் நற்செய்தியும் வளர்ந்து பெருகவும் ஆண்டவர் இயேசுவை வேண்டி, விரும்பி, இ.சி.ஐ. திருச்சபையின் சார்பில் என் நெஞ்சம் நிறைந்த நல் வாழ்த்துக்களை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இறையாசி இத்தூய திருப்பணியுடன் என்றும் இருப்பதாக.

தே. சுந்தர்சிங்,
தலைமைப் பேராயர்
இ.சி.ஐ. திருச்சபை

சென்னை -10
1/2/2017

No.1, Second Street, Ormes Road, Kilpauk, Chennai : 600 010.
Ph: 26427574, 26413178 - Fax: 26411803 - Email: ecicdc@gmail.com, bishopsundarsingh_eci@yahoo.com



அருள்திரு அறிவர் **சுந்தர் தேவபிரசாது**

பன்னாட்டுத் தலைவர் உலகக் கிறித்தவத் தமிழ்ப் பேரவை

தலைமை ஆயர், நியுயார்க் கிறிஸ்தவத் தமிழ் கோவில்



அன்புடையீர்,

எல்லாம் வல்ல இறைமைந்தன் இயேசுவின் திருப்பெயரில் வாழ்த்துதலையும் வணக்கத்தினையும் தெரிவித்துக்கொள்கிறேன். தரு இதழ் (மறுமலர்ச்சி வரிசை) தொடங்கி இருபது ஆண்டுகள் நிறைவு பெறுவதை முன்னிட்டு சிறப்பு மலர் வெளியிடுவது அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன்,

உலகக் கிறித்தவத் தமிழ்ப் பேரவை தொடங்கி 36 ஆண்டுகளாகக் கிறித்தவத் தமிழ் இலக்கியத்திற்கும், கலை பண்பாட்டு வளர்ச்சிக்கும் பெரிதும் பணி செய்துள்ளது. இந்தியா உட்பட உலகநாடுகள் பலவற்றில் மாநாடுகளை நடத்திய சிறப்பினைப் பெற்றுள்ளது.

உலகக் கிறித்தவத் தமிழ்ப் பேரவையின் செய்திகளை வெளியிடவும், தமிழ் அறிஞர்களின் ஆய்வுக்கருத்துக்களை அறிந்துகொள்ளவும், பயனுள்ள நூல்களை அறிமுகப்படுத்தவும் இறைவனடி சேர்ந்த பேராசிரியர் பொன்னு ஆ. சத்தியசாட்சி அவர்களால் தரு என்ற ஆய்விதழ் தொடங்கப்பட்டு வளர்க்கப்பட்டது. தரு இதழ் தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருப்பதற்குக் காரணமாக உள்ள ஆசிரியர்கள், பேரவைப் பொறுப்பாளர்கள், செயற்குழு உறுப்பினர்கள் அனைவரையும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

தரு இதழ்ப் பணி இறையாசியுடன் தொடர்க!

வளர்க! வாழ்க!

சுந்தர் தேவபிரசாது

பத்மஸ்ரீ அறிஞர் ஔவை து. நடராசன்
மேனாள் துணைவேந்தர்,
அரசு செயலர் (ஓய்வு)

‘சத்தியத் தரு’



என் நெஞ்சுக்கினிய நண்பர் பேராசிரியர் சத்தியசாட்சி உண்மைக் கிறித்தவனாகவே உருக்கம் பரிவு இரக்கம் என்ற உயர் குணங்களின் வடிவாக வாழ்ந்தவர். எவரையும் தம் உடன்பிறந்தவராகக் கருதி உதவி செய்வதற்கு ஓடி வருபவர். ஓய்வு பெற்ற நாள் முதல் எளிய பிள்ளைகளுக்குக் கல்வி ஒளியூட்டவும் விவிலிய அறம் காட்டவும் முன்னின்றவர். ‘தரு” என்னும் கிறித்தவ ஆய்விதழை எழுத்துக்கு எழுத்து இனிப்பாகும்படி எழுதிக் காட்டியவர். ‘தரு” முதல் இதழ் வெளியிட்டதை நான் இன்றும் நினைத்துப் பார்க்கிறேன். இருபதாண்டுகள் கரைந்துவிட்டன. பேராசிரியர் சத்தியசாட்சி மறைந்துவிட்டார். ‘தரு” இருபதாண்டுகளாகத் தழைத்து நிற்கிறது. தரு வளர்ப்போம். நல்ல தமிழ் வளர்ப்போம். விவிலியத் தகுதியை எங்கும் விதைப்போம் என்ற நோக்கத்தோடு இருபதாம் ஆண்டில் இவ்விதழ் மலர்வதைக் கண்டு நான் மனம் நெகிழ்கிறேன்.

தன்னலமில்லாத தமிழ்ப் பேரவை ‘தரு”வைத் தொடர்ந்து வளர்த்து நானிலம் முழுவதும் நல்லறம் நிலவச் செய்ய வேண்டுமென்று மகிழ்ந்து வாழ்த்துகிறேன். புகழ்ப்பணிகளை நாளும் போற்றுவது தமிழ் மக்களின் தலையாய இயல்பாகும். பேராசிரியர் சத்தியசாட்சியின் மாட்சிக்கு சான்று கூறுவதாக ‘தரு” தழைத்தோங்க வேண்டும். இயேசுபிரானின் நல்லருளை வேண்டி நிற்கும் கோடிக்கணக்கான மக்கள் ‘தரு”வை தமக்கு நிழல்தரும் பழ மரமாக பயன் மரமாகக் கருதி ஊக்கம் காட்டுவார்களாக !

சென்னை
டிசம்பர் 2016

அன்புடன்
ஔவை து. நடராசன்

தரு

இன்னமுது ஆயது இயேசு நாமமே!

கிளை: 18 சிறப்பிதழ் 2016 மலர்: 01

திருச்சபைச் சீர்திருத்த வரலாறும் தமிழ்ச் சூழலும்

மார்டின் லூத்தர் சிந்தனைகளும் செயற்பாடுகளும் ஐரோப்பியத் திருச்சபையின் அதிகார பீடங்களைக் கலங்கச் செய்து அதிரடி மாற்றங்களை நிகழ்த்தின. உயிருள்ள திருச்சபைக்கு மாற்றங்களும் சீராக்கமும் எப்பொழுதும் தேவை என்பதே திருச்சபை சீர்திருத்த வரலாறு உணர்த்தும் உண்மை.

கிறிஸ்துவை முதன்மைப்படுத்தியும் திருமறையை மையப்படுத்தியும் திருச்சபையை மக்களை நோக்கி நகர்த்தியதில் லூத்தருக்குப் பெரும்பங்கு உண்டு. தமிழகம் நோக்கி அணி அணியாக வந்த சீர்திருத்த அருட்தொண்டர்களின் செயல்பாடுகள் லூத்தரின் வழியில் இந்தியத் திருச்சபைக்குப் புதிய வரையறையை வழங்கின. வேதக் கல்வி குறிப்பிட்ட சாதியாருக்கு மட்டுமே அனுமதிக்கப்பட்ட சூழலுக்கு மாற்றாக, மக்கள் மொழியிலேயே விவிலியத்தை வழங்கும் முயற்சியைத் தம் முதன்மைப் பணியாகக் கொண்டு சீகன்பால்கு செயல்பட்டார்.

சாதிய ஏற்றத்தாழ்வு, விதி, பிறவி, கர்ம வினை, சடங்கு சார்ந்த மூடப்பழக்கங்கள் நிறைந்திருந்த தமிழ்ச் சூழலில், லூத்தரின் மனித ஈடேற்றம் குறித்த சிந்தனைகள் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தின. இறைப் பற்றுறுதியும் கடவுளின் அருளுமே ஒருவருக்கு ஆன்ம ஈடேற்றத்தை அளிக்க வல்லது என்ற சிந்தனையை உணரச் செய்ததில் சீர்திருத்த அருட்தொண்டர்களுக்கு பெரும்பங்கு உண்டு. குறிப்பாக பெண்கள், தாழ்த்தப்பட்டவர்களின் வாழ்வில் மீட்பு குறித்த புதிய தொடக்கத்தை அவர்கள் ஏற்படுத்தினர்.

திருச்சபையைத் தன்னாட்டு மயமாக்கல் என்பது லூத்தரின் குறிப்பிடத்தக்க பங்களிப்பாகும். திருமறையையும் வழிபாட்டு முறைகளையும் அவரவர் தத்தம் தாய்மொழியில் பெறுவதே இதயப் பூர்வமான பக்தி வளர்ச்சிக்குத் துணைபுரியும். வைதீக சமயப் பனுவல்களில் சமசுகிருதம் பெற்றிருந்த செல்வாக்குக்கு மாற்றாக, விவிலியத் தமிழாக்கத்தில் சமசுகிருதச் சொற்களைத் தவிர்க்கும் போக்கைச் சீர்திருத்த அருட்தொண்டர்கள் முன்னெடுத்துள்ளதை விவிலிய மொழிபெயர்ப்பு வரலாறு நமக்கு உணர்த்துகிறது. சமய நடைமுறைகளில் லத்தீன்மொழியின் மேலாதிக்கத்தை மறுத்த லூத்தரின் நிலைப்பாடு தமிழ்ச் சூழலில், திராவிட தேசிய இன எழுச்சிக்கும் தனித்தமிழ் வளர்ச்சிக்கும் வழிவகுத்துள்ளது. அருட்தொண்டர்களின் பார்வையும் பணிகளும் தனிமனித ஈடேற்றத்திற்கு மட்டுமின்றி, ஒட்டு மொத்த தமிழ்ச் சமுதாயத்தின் விடுதலைக்கும் வித்திட்டன.

சீர்திருத்த வரலாற்றின் 500 ஆம் ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ள நாம், இன்றைய திருச்சபையில் எதேச்சதிகாரப் போக்கும் முறைகேடும் தலையெடுக்கும் போதெல்லாம், அதனை மறுத்து கிறித்துவின் வழியில் திருச்சபையைச் சீரமைக்க மார்டின் லூத்தரை முன்மாதிரியாகப் பெற்றுக்கொள்வது நமது கடமை.

டே.பி.

தலையங்கம்...

கிறிஸ்துவின் உயிர்ப்பு: மானுடத்தின் தொடர் நம்பிக்கையின் அடையாளம்

இவ்விதழ் தயாரிப்புப் பணி நிறைவெய்துகிற கட்டத்தில், ரோமை மாநகரின் வாட்டிகனில் உள்ள புனித பேதுரு தேவாலயத்தில் மரபு வழியாக நிகழும் கிறிஸ்துவின் உயிர்ப்புத் திருநாள் சிறப்பு வழிபாட்டில் போப்பாண்டவர் பிரான்சிஸ் அடிகளார் நிகழ்த்திய உள்ளத்தைத் தொடும் உருக்கமான அருளுரையைச் செய்தித்தாள்களில் கண்ணுற நேர்ந்தது. கிறிஸ்துவின் சிலுவைத் தியாகமும், உயிர்ப்பின் வெற்றியும், ஒரு தனி மனிதனின் அல்லது தனி விசுவாசியின் ஆன்மிக ஈடேற்றத்துக்கான அல்லது மேம்பாட்டுக்கான நம்பிக்கைக் கோட்பாடுகளாக மட்டும் கருதப்படலாகாது. உலகளாவிய மானுட சமுதாயத்தின் நிகழ்கால அவலங்களிலிருந்தும், அநீதிகளிலிருந்தும் மானுடத்துக்கு மீட்பும் விடுதலையும் கிட்டும். அப்படிப்பட்ட மீட்புப் பயணத்தில் – விடுதலைப் போராட்டத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வோருக்குக் கிறிஸ்துவின் தியாக மரணமும் உயிர்ப்பு வெற்றியும் ஊக்கமும் உரமும் ஊட்ட வேண்டும். ஊட்டும் என்கின்ற புத்துணர்வையும் புதுப்பரிமாணத்தையும் வழங்குவதாக போப் அவர்களின் எழுச்சியுரை அமைந்திருந்தது.

அடிகளாரின் அருட்செய்தியின் முற்பகுதியில், நெஞ்சை நொறுக்கும் உலகியலின் இன்றைய நடப்புகளைப் பற்றிய கவலை தோய்ந்த ஏக்கக் குரல் எதிரொலித்தது. உலகெங்கும் அநீதியும் ஊழலும் அரசியலாளரால் ஏழை எளிய மக்கள் சுரண்டப்படுதலும், தாண்டவமாடும் கொடுமையும் இவற்றின் விளைவாக ஏழை எளிய மக்களின் கண்ணியமும் மனித மாண்புகளும் நாடோறும் சிலுவையில் அறையப்படுதலும் அன்றாட நிகழ்ச்சிகளாகிவிட்ட அவலத்தை அவ்வுரை வெளிப்படுத்துகிறது. மேலும், சிரியாவில் நடைபெறும் போரால் மக்கள் சீரழிந்து, திகிலுக்கும் மரணத்துக்கும் உள்ளாகி நிற்கிற வேதனை, ஏன் புனித நிலம் (இஸ்ரேல்) தொடங்கி ஈராக், ஏமன் போன்ற நாடுகளிலும் பரவிக்கிடக்கும் அமைதியற்ற வாழ்வுச் சூழல், ஆப்பிரிக்காவின் பல பகுதிகளில் அச்சுறுத்தும் கொடிய பஞ்சம் இவற்றைப் பற்றியெல்லாம் அடிகளார் தம் உரையில் கவலை தெரிவிக்கிறார்.

எனினும் தம் அருளுரையின் பிற்பகுதியில், உலகளாவிய மனித சமுதாயத்துக்கு நம்பிக்கையையும் ஆறுதலையும் மறு வாழ்வையும் தருகிற மீட்புப் பணிகளில், விடுதலைப் பணிகளில் ஈடுபட்டுள்ளோர், கிறிஸ்துவின் உயிர்ப்பின் வெற்றியால் ஊக்கமும் உரமும் பெற்று தம் புனிதத் தொண்டைத் தொய்வின்றி தொடர வேண்டும். நம்பிக்கையூட்டும் புதிய எதிர்காலமும் புதிய மானுடமுமே கிறிஸ்தவ விசுவாசத்தின் அடித்தளமும் ஆதாரமுமாகும் என்று நம்பிக்கை விதைகளைத் தூவி நிறைவு செய்துள்ளார்.

இத்தலையங்கக் கட்டுரை 'தரு" வாசகர்களுக்கு நல்கிட விழையும் செய்தியும் அதுவேயாகும். 'புதிய வானம் புதிய பூமியை நிறுவிட வரவிருக்கும் (II பேதுரு 3:13) கிறிஸ்துவின் மறு வருகையை" எதிர் நோக்கியுள்ள விசுவாசக் கூட்டமே, கிறிஸ்துவின் திருச்சபை. அம்மாபெரும் வரலாற்று நிகழ்வுக்கு முன்னர் உலகில் அநீதியும், அக்கிரமங்களும் அறக்கேடுகளும் உச்சநிலையில் இருக்கும் – நடக்கும் என இறைவாக்கு முன்னுரைத்துள்ளதை நாம் மறந்திடலாகாது. சுற்றி நெருக்கும் மரண அலைகளுக்குள் மூழ்கடிக்கப்படாது, கடல்மேல் நடந்த பேதுரு, கண்களைக் கர்த்தர் மேல் வைக்க அழைக்கப்பட்டதைப் போல் (மத்தேயு 14:29–31) கிறிஸ்துவின் அடியார்களும் தமக்குமுன் வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையை மட்டுமே (எபிரேயர் 12:1) நோக்கியவர்களாக, தொடர் பயணம் மேற்கொள்ள வேண்டியதே, இன்றைய உலகச் சூழலில் கிறிஸ்துவின் உயிர்ப்பு நிகழ்வு வழங்கும் அறைகூவல் ஆகும்.

– மோ.மை.பா.

திருமறை தியானப் பகுதி

மாமறைத்திரு. **எட்வின் ஜெயக்குமார்**
பேராயர்,
தமிழ் சுவிசேஷ லுத்தரன் திருச்சபை





"இயேசுகிறிஸ்து தொண்டு ஏற்பதற்கு அல்ல; தொண்டு ஆற்றுவதற்கும், பலருடைய மீட்புக்கு ஈடாக தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்" மாற்கு 10:45

''For the Son of man came not to be served but to serve and to give his life a ransom for many" Mark: 10:45

தூய மாற்குவின் நற்செய்தி நூலில் இயேசு கிறிஸ்து யார் என்ற கேள்விக்கு கடவுளின் மகனாகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தி என்ற தொடக்க வரிகள் விடையாக அமைகிறது.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஏன் வந்தார் என்ற வினாவிற்கு இன்றைய தியானப்பகுதி (மாற்கு 10:45) விடையளிக்கிறது.

1. தொண்டாற்ற வந்த இயேசு – Service
2. மீட்பராக வந்த இயேசு – Salvation
3. தன் உயிரைத் தந்த இயேசு – Sacrifice

இயேசுவின் திருத்தொண்டும் திருச்சபையின் தொடர் பணியும் (Service)

தங்களின் அழைப்பையும் பொறுப்பையும் உணராது சுயநலமாய் வாழவும் இறுதி கால அரசாட்சியின் போது இடது வலது ஆசனங்களில் அமர மட்டுமே ஆசைப்பட்ட சீடர்களுக்கு இயேசு கற்பித்த பாடமே இப்பகுதி. இயேசுகிறிஸ்து செய்த தொண்டுகளை தொடர் பணியாகச் செய்ய நியமிக்கப்பட்டதே திருச்சபை. அன்று இயேசுவின் அடியவர்களிடத்தில் காணப்பட்ட சுய நல சிந்தனைகளே இன்றும் திருச்சபைகளில் நிலவுகிறது. இந்நிலைமாறி "கிறிஸ்துவின் சிந்தையே உங்களில் இருக்கக்கடவது" என்ற பவுல் அடிகளின் கருத்தும் நினைவில் கொள்ள வேண்டியவை. இயேசுவின் ஊழியம் ஜாதி, மத, பேமின்றி நடைபெற்றது. இன்றும் அவர் காட்டிய முன்மாதிரியான தொண்டுகளை திருச்சபை பின்பற்றி, தேவையில் உள்ள அனைவருக்கும் தொண்டாற்றும் திருச்சபையாகச் செயல்பட புது மனுகுலம் அமைந்திட வழிவகுக்க வேண்டும். இயேசு சீடர்களுடைய கால்களைக் கழுவின நிகழ்வும் நல்ல சமாரியனுடைய உவமையும் எருசலேம் பவனியும் மற்ற போதனைகளும் நினைவு கூரத்தக்கவை.

மார்ட்டின் லுத்தர் வாழ்ந்த நாட்களில் திருச்சபை, வேதத்தின் படி வாழவில்லை வழிகாட்டவில்லை என்று கூறி Scripture alone "கடவுளின் வார்த்தையால் மட்டுமே'' என்று வீர முழக்கமிட்டார். இன்றும் இறைவார்த்தையின் படி "பிறர் அன்பே இறையன்பு" என்ற நிலையில் தொண்டாற்ற அழைக்கப்பட்ட திருச்சபையே இயேசுவின் திருச்சபை.

மீட்பராக வாழ்ந்த இயேசுவும், மீட்புப் பணியைத் தொடரும் திருச்சபையும் (Salvation)

அவருக்கு இயேசு என்று பெயரிடுவார்கள்; ஏனென்றால் அவர் ஜனங்களின் பாவங்களை மன்னித்து இரட்சிப்பார் (Saviour) என்ற நிலைமட்டுமல்லாமல் சமுதாய விடுதலை, பொருளாதார விடுதலை, அரசியல் விடுதலை, வியாதியிலிருந்தும் பாவக்கட்டுப்பாடுகளிலிருந்தும் விடுதலை, மரணத்திலிருந்து விடுதலை, ஏழ்மை, பஞ்சம் போன்ற அனைத்துப் பிரச்சனைகளிலிருந்தும் மக்களுக்கு விடுதலை என்ற செயல் திட்டத்தை முன் அறிவித்து தன் மீட்புப் பணியைத் தொடங்கினார்.

லூக்கா 4:16:21 இல் ஏழைகள் , சிறைப்பட்டவர்கள், இருதயம்

நொறுங்குண்டவர்கள், பார்வையற்றவர்கள் இவர்களுக்கு மகிழ்ச்சி, விடுதலை, ஆரோக்கியம் போன்ற முழுமை வாழ்வு என்பது இயேசுவின் மீட்புத் திட்டம்.

இறைவன் மனிதனுக்குக் கொடுத்த ஆவி, ஆத்துமா, சரீரம் என்ற முப்பரிமாணங்கள் கொண்ட நமது வாழ்வில் அனைத்தும் குறையில்லாமல் நிறைவாக இருப்பது இறைத்திட்டம். முழுமையான வாழ்வை நோக்கி மானிடம் பயணிக்க வேண்டும். அதற்கான இயேசுவின் விடுதலைப் பணிகளாக பாவ மன்னிப்புப் பெற உறுதி, இறைவன் மனுக்குல ஈடேற்றத்திற்கு செய்த மீட்பு, ஆரோக்கிய வாழ்வு நிறைவான வாழ்வு இவைகளைப் பெற்றுள்ள திருச்சபை, தொடர்ந்து இத்தகைய இறைப்பணிகளை இறைவனின் மீட்பு பணிகளை 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற நிலையில் பிறருக்கு வாழ்வுக் கொடுத்துக் கொண்டே இருக்க இறைவன் தரும் வல்லமையைப் பெற்றுச் செயல்பட அழைக்கப்பட்டதுதான் திருச்சபை.

தன்னைத் தந்த இயேசுவும் தன்னைத்தரும் திருச்சபையும் (Sacrifice)

தன்னையே தருவது இறைவனின் பண்பு (giving is the nature of God)

மனிதர்களும், இறைவனுக்கு தருவது அன்று தொடங்கி இன்றும் என்றும் நடைபெறுவது. இறைவன் உலகிற்கு தனது திருக்குமாரனை நம் அனைவர் மீது வைத்த அன்பால் தந்தார். இயேசுவும் தனது இன்னுயிரைத் தருவினில் தந்தார். இயேசுவும் நீங்கள் உலகிற்கு வெளிச்சமாக, உப்பாக இருங்கள் என்றார். உப்பு நீரோடு கலந்து, கரைந்து கடந்து செல்லும் தன்மையுள்ளது. இயேசுவின் பிறப்பின் நோக்கம் பிறருக்கு நன்மை செய்வதே. நாமும் பிறர் நலத்தை மட்டுமே மனதில் வைத்துக் கொண்டு வாழ அழைக்கப்படுகிறோம்.

கனிகள் '**தரு**'ம் மரங்கள் போன்று
மழை '**தரு**'ம் மேகங்கள் போன்று
ஒளி '**தரு**'ம் சூரியன் போன்று
பால் '**தரு**'ம் பசுவைப் போன்று
சேயைக்காக்க தன்னைத் '**தரு**'ம் தாயைப் போன்று

தன்னைத் தந்த இயேசு போல, இன்றைய திருச்சபை திருச்சபை மக்களாகிய நாம் நம்மையும் நமக்கு இறைவன் தந்த அனைத்தையும் பிறருக்குத் தருவதில் தான் தருமம் அடங்கியுள்ளது.

கருவில் இருந்த நம்மைத் தருவாய் மாற்றி தொடர்ந்து கனிதரும் ஆவியின் கனிதரும் தருவாக மாற்றியுள்ளார். மரம் தன்னலமற்று வாழ்ந்து தனது கனிகளை இறைவனுக்கும் மனிதர்களுக்கும் காணிக்கையாகப் படைப்பது போல நாமும் நமது வாழ்க்கையை இறைவனுக்கும் மற்ற மனிதர்களுக்கும் படைத்து வாழ்வோமாக!

"தருவினில் மாண்டோய் நமஸ்காரம்" ஆமேன்.

உலகக் கிறித்தவத் தமிழ்ப் பேரவை பொறுப்பாளர்கள்

நெறியாளர்கள்

முனைவர் **ப.ச.ஏசுதாசன்**
முனைவர் **மு.தெய்வநாயகம்**
புலவர் **ஆர்.எஸ்.ஜேக்கப்**
புலவர் **சே.சுந்தரராசன்**
முனைவர் **மோசசு மைக்கேல் பாரடே**

பன்னாட்டுத் தலைவர்

அருள்திரு.அறிவர் **சுந்தர்தேவபிரசாது**

தலைவர்

முனைவர் **தே.செல்லையா**

துணைத் தலைவர்கள்

முனைவர் **ஒய்.டென்னிசன்**
அருள்தந்தை முனைவர் **மணிவளன்**
முனைவர் **எஸ்தர் கதிரொளி**
அருள்திரு.**ஜே.பி.ஏசுபாதம்**

பொதுச் செயலர்

முனைவர் **ப.டேவிட் பிரபாகர்**

இணைச்செயலர்கள்

முனைவர் **ஸ்வீட்லின் பிரபாகரன்**
முனைவர் **ஜான்சன் தங்கையா**

பொருளாளர்

முனைவர் **சாமுவேல் கொர்னேலியஸ்**

செயற்குழுவினர்

திரு.**தே.சுவாமிநாதன்**
பேரா.**பி.ஏ.தாவீது**
முனைவர் **ச.ஸ்டீபன் ஜெபநேசன்**
முனைவர் **யோ.ஞானசந்திர ஜாண்சன்**
அருள்பணி **பென்சமின் இன்பராசா**
(பொதுச் செயலர், சி.எல்.எஸ்.)
முனைவர் **டி.மத்தியாஸ்**
அருள்திரு.**லாசரஸ் செல்வநாதன்**
முனைவர் **திருஇன்ப எழிலன்**
திரு.**எம்.ஜீவகுமார்**
முனைவர் பால்சந்திரமோகன்
திரு.எஸ்.பி.தயாளன்

உலகக் கிறித்தவத் தமிழ்ப் பேரவை

பேரவையின் தோற்றம்

தமிழ்க் கிறித்தவரிடையே கிறித்தவத் தமிழ் இலக்கியங்களை அறிமுகப்படுத்தி, அவர்தம் ஆர்வத்தையும் படைப்புத் திறனையும் வளர்த்திடவும், கிறித்தவம் தமிழுக்கு ஆற்றியுள்ள அருந்தொண்டுகளை உலகறிய உணர்த்திடவும் வேண்டும் எனும் உயரிய நோக்கங்களைக் கொண்ட கிறித்தவத் தமிழ் அறிஞர்கள், பல்வேறு நிலைகளில் பற்பல தளங்களில் தத்தம் முயற்சியால் சிறு சிறு அமைப்புகளைத் தொடங்கிச் செயல்பட்டு வந்தனர். இத்தகைய உணர்வுடைய மக்கள் இணைந்து ஒரு பேரியக்கம் உருவாக வேண்டும் என்ற அவாவும் அவர்களுக்கு இருந்து வந்தது.

இவ்வகையில், தென்னிந்தியத் திருச்சபையின் தலைமைப் பேராயர் டாக்டர் சாலமன் துரைசாமி அவர்களின் அரு முயற்சியால் பெங்களூர் யுனைடெட் தியாலஜிக்கல் கல்லூரியிலும் மற்றும் பல்வேறு கிராமங்களிலும், நகரங்களிலும் மகாகவி கிருட்டினப் பிள்ளை நினைவாகவும் சுவிசேடக் கவிராயர் சாஸ்திரியார் நினைவாகவும் தமிழ்க் கிறித்தவர்கள் விழாக்கள் எடுத்து வந்திருக்கிறார்கள். 1974 ஆம் ஆண்டு முதல் சென்னையில்,பேராயர் சுந்தர் கிளார்க் அவர்கள் வழங்கிய ஆக்கத்தினாலும் ஊக்கத்தினாலும் சென்னைத் திருமண்டிலத்தின் ஆதரவில் 'கிறிஸ்தரசர் தமிழ்ப் பேரவை' என ஓர் இயக்கம் நடைபெற்று வந்தது. மேலும், பேராயர் டாக்டர் சாலமன் துரைசாமி அவர்களுடைய பேருழைப்பின் காரணமாகத் திருச்சி,தஞ்சைத் திருமண்டிலம் மகாகவி அவர்களின் நினைவாகவும், கவிராயர் அவர்களின் நினைவாகவும் சிறப்புமிக்க விழாக்களை நடத்தி வந்தது. சங்கிலித் தொடர் போன்ற இவ்விழாக்களின் விளைவாக 1981இல் திருச்சியில் பேராயர் சாலமன் துரைசாமி அவர்களின் தலைமையில் 'உலகக் கிறிஸ்தவத் தமிழ்ப் பேரவை' நிறுவப்பட்டது. இப்பேரவைக்குத் தென்னகத்திலும்,உலகின் பிற இடங்களிலும் பணியாற்றி வந்த பேராயர்களும் திருச்சபை ஊழியர்களும் கிறித்தவத் தமிழறிஞர்களும், புரவலர்களாகவும், துணைத் தலைவர்களாகவும், செயலாளர்களாகவும், செயற்குழு உறுப்பினராகவும் அமைந்தனர்.

பேரவையின் நோக்கம்

இப்பேரவையின் குறிக்கோள்களாகவும் நோக்கங்களாகவும் பின்வரும் செய்திகள் முன்னிறுத்திக் கொள்ளப்பட்டன.

இயல் இசை நாடகம் ஆம் முத்தமிழ் வாயிலாகக் கிறித்துவின் நற்செய்தியை அனைத்து மக்களுடனும் பகிர்ந்து கொள்வது.

கிறித்தவத் தமிழ் இலக்கியங்களைக் கற்கவும், அவற்றில் திளைக்கவும், திறனாய்வு செய்யவும்,அவற்றைப் பற்றிப் பெருமை கொள்ளவும் தக்க வாய்ப்புகளைத் தமிழ்க் கிறிஸ்தவர்கட்கு ஏற்படுத்திக் கொடுப்பது.

கிறித்தவ மக்கள் தாய்மொழியாம் தமிழின்பால் கொண்டுள்ள தாழ்வுணர்ச்சியை உதறித் தள்ளிட வேண்டுமெனவும், தமிழ்க் கவிதை களையும் உரைநடைக் கோவைகளையும் நன்கு கற்று அவற்றைத் துய்த்து மகிழ்ந்திட வேண்டு மெனவும் அவர்களை அறைகூவி அழைப்பது.

கடந்த நூற்றாண்டுகளில் கிறித்தவம் தமிழுக்குச் செய்துள்ள தொண்டுகள் குறித்தும், அவற்றைத் தொடர்ந்து ஆற்றி வருகின்றவர்களும் அத்தகைய ஆற்றலுடையவர்களும் இக்காலத்தும்



கடந்த நூற்றாண்டுகளில் கிறித்தவம் தமிழுக்குச் செய்துள்ள தொண்டுகள் குறித்தும், அவற்றைத் தொடர்ந்து ஆற்றி வருகின்றவர்களும் அத்தகைய ஆற்றலுடையவர்களும் இக்காலத்தும் இருக்கின்றார்கள் என்பது குறித்தும் கிறித்தவ மக்களுக்கும் ஏனைய பெருமக்களுக்கும் உணர்த்திடுவது.

இருக்கின்றார்கள் என்பது குறித்தும் கிறித்தவ மக்களுக்கும் ஏனைய பெருமக்களுக்கும் உணர்த்திடுவது.

இதுகாறும் வெளியிடப்படாத, தகுதி வாய்ந்த பழைமையான கிறித்தவத் தமிழ்ப் படைப்புகளை அச்சிடுவதுடன், மறைந்த நூல்களை மறுபதிப்பு செய்வதும் மேலும் பழைமையும் அருமையும் வாய்ந்த ஏடுகளைப் பாதுகாத்து வைப்பதற்கு ஆவன செய்வது.

தமிழில் எழுதும் ஆற்றலுடைய இக்கால கிறிஸ்தவ எழுத்தாளர்களுக்கு, அவர்கள் புதிய காட்சிகளைக் கண்டு எழுதுவதற்கேற்ற வாய்ப்புகளை உண்டாக்கிக் கொடுப்பதுடன், அவர்களால் படைக்கப்படுகிற இலக்கியங்களை வெளியி டுவதற்கான முயற்சிகளையும் மேற்கொள்வது.

பேரவையின் சாதனைகள்

மேற்சுட்டப்பெற்ற உன்னத நோக்கங்களின் செயல் வடிவங்களாக, இப்பேரவை தனது நீண்ட சாதனைப் பயணத்தில் பின்வரும் அருஞ் செயல்களை நிகழ்த்தியுள்ளது.

1 இப்பேரவை தொடங்கப்பெற்ற ஆறுமாத காலத்திற்குள் தனது முதற் சாதனையாக, முதல் உலகக் கிறித்தவத் தமிழ் மாநாட்டினை *1981* டிசம்பர் *28,29,30* ஆகிய நாட்களில் திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரியில் சீரோடும் சிறப்போடும் நடத்திக் காட்டியது. மேனாள் திருச்சிதஞ்சைத் திருமண்டிலப் பேராயர் டாக்டர் சாலமன் துரைசாமி அவர்களின் சீரிய தலைமையில், பேராசிரியர் பொன்னு. ஆ.சத்தியசாட்சி, பேராசிரியர் ப.ச.ஏசுதாசன், முதல்வர் பேராசிரியர் தே.சுவாமிராஜ் முதலி யோரின் ஆற்றல்மிகு செயல்திறனால் நிகழ்ந் தேறிய இம்மாநாட்டில் ஆழமான ஆய்வுரைகள் வழங்கப்பட்ட கருத்தரங்குகள், சுவைமிக்க கவியரங்கம், விறுவிறுப்பான பட்டிமண்டபம், இனிய இசைப் மொழிவுகள், கலைநிகழ்ச்சிகள், நூல் வெளியீடுகள், முதுபெரும் கிறிஸ்தவத் தமிழ் அறிஞர்களுக்குப் பட்டமளிப்பு முதலிய பல்வேறு சிறப்பு நிகழ்வுகள் இடம் பெற்றன.

இந்நிகழ்வுகளில் பல்வேறு திருச்சபைகளின் பேராயர்கள் உள்ளிட்ட கிறித்தவத் தலைவர்களும் முன்னணிக் கிறித்தவத் தமிழ் அறிஞர்களும், கிறித்தவக் கவிஞர்களும், கலைஞர்களும் பங்கேற்றதோடு, மேனாள் நீதியரசர் மு.மு.இஸ் மாயில், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவ நாதம், தவத்திரு. குன்றக்குடி அடிகளார், சென்னை மாநகர மேனாள் செரிபு டாக்டர் பி.எம்.ரெக்ஸ் உள்ளிட்ட தமிழ்ச் சான்றோர்கள் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

2 முதல் மாநாட்டைத் தொடர்ந்து, திருப்பத்தூர் கிறிஸ்து குல ஆசிரம நிறுவனர் ‘பெரியண்ணன்’ சவரிராயன் ஏசுதாசன் அவர்களின் நூற்றாண்டு விழாவை, சென்னை வேப்பேரி தூய பவுல் மேனிலைப் பள்ளியில் *1982* நவம்பர் *20* அன்று பேரவை சிறப்புற நடத்திக்காட்டிற்று. பெரியண்ணன் அவர்களுடைய பன்முக இலக்கியப் படைப்புகளைப் பற்றிய சிறந்த ஆய்வுரைகள் இவ்விழாவில் வழங்கப்பட்டன.

3 பேரவையின் இரண்டாம் ஆண்டு விழா *1982* டிசம்பர் திங்களில் தஞ்சை லுத்தரன் பெண்கள் மேனிலைப் பள்ளியில் பேரவைப் பொறுப்பாளர்களோடு இணைந்து அருள்திரு. இலாரன்சு அடிகளாரின் செயலூக் கத்தால் சிறப்புற நடைபெற்றது. பல்வேறு சிறப்பு நிகழ்வுகள் இடம்பெற்ற இவ்விழா,பேரவையின் வரலாற்றில் ஒரு மைல்கல்லாகத் திகழ்ந்தது.

4 பேரவையின் இரண்டாவது மாநாடு, *1984* பிப்ரவரியில் வேலூர் மாநகரின்கண் ஊரீசு கல்லூரி வளாகத்தில்,தெ.இ.தி.வேலூர்த் திருமண்டிலத்தின் ஆதரவுடன் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இம்மாநாட்டின்கண், தமிழ்க் கிறிஸ்தவ இலக்கியங்கள் தொடர்பான

பல்வேறு ஆய்வுக் கட்டுரைகள் வழங்கப்பட்டன. கவியரங்கம், பட்டிமண்டபம், இசைப்பொழிவு, நாடகம் முதலிய பல்வேறு சிறப்பு நிகழ்வுகளும் இடம் பெற்ற இம்மாநாட்டில்,தவத்திரு.குன்றக்குடி அடிகளாரால் கிறித்தவத் தமிழ் அறிஞர்கள் பலரும் 'தமிழ் மாமணி','அருட்கலைஞர்' முதலான பல்வேறு விருதுகள் வழங்கிப் பாராட்டப்பட்டனர். இம் மாநாட்டைப் பேராயர் சாம் பொன்னையா அவர்களும் பேராசிரியர் தாவீது அதிசயநாதன் அவர்களும் முன்னின்று நடத்தியது போற்றுதற் குரியது. முந்தின திருச்சி மாநாட்டில் படிக்கப்பெற்ற கருத்தரங்கக் கட்டுரைகள் இம்மாநாட்டில் நூலாக வெளியிடப் பெற்றது குறிப்பிடத்தக்கது.



பேரவை முன்னோடி
முனைவர் **ப.ச. ஏசுதாசன்**
நிறுவனப் பொருளர்

இம் மாநாட்டில் வழங்கப்பட்ட 131 ஆய்வுரைகள் 'செம்மொழித் தமிழ் வளர்ச்சியில் கிறித்தவம்' எனும் தலைப்பில் இரண்டு தொகுதிகளாக வெளியிடப்பட்டன. சிறப்பு மலரும் வெளியிடப்பட்டது.

5 இப்பேரவையின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்க பெருநிகழ்வாக நடந்தேறிய மூன்றாவது உலகக் கிறிஸ்தவத் தமிழ் மாநாடு,சென்னை,பெயின் மேனிலைப்பள்ளியில் 1986 டிசம்பர் 27,28,29 ஆகிய நாட்களில், தெ.இ.தி. சென்னைப் பேராயத்தின் ஆதரவுடன் பேராயர் சுந்தர்கிளார்க் அவர்களின் சீரிய தலைமையில் பேராசிரியர் பொ.ஆ.சத்திய சாட்சி, பேராசிரியர் ப.ச.ஏசுதாசன், அருள்திரு. டாக்டர் தயானந்தன் பிரான்சிஸ் ஆகியோரின் வழிநடத்துதலோடு நெஞ்சில் நிலைக்கும் வண்ணம் சிறப்பாக நடந்தேறியது. இம்மாநாட்டில் மிதவை ஊர்வலம், நற்செய்திப் பொழிவுகள், இலக்கியப் பேருரைகள், நுண்கலை நிகழ்வுகள், பட்டிமண்டபம், கவியரங்கு, சிறப்பு விருதுகள் வழங்கல் முதலிய பல்வேறு நிகழ்வுகள் இடம் பெற்றன. வரலாற்றுச் சிறப்பு மிக்க இம்மாநாட்டில் பல்வேறு கிறித்தவத் தலைவர்கள், கிறித்தவத் தமிழ் அறிஞர்கள்,தமிழ்ச் சான்றோர்கள் ஆகியோர் கலந்து கொண்டதோடு, இந்திய நடுவணரசின் அமைச்சர் திரு.ப.சிதம்பரம், மேனாள் தமிழக நிதியமைச்சர் நாவலர் நெடுசெழியன், கவிஞர் புலமைப்பித்தன், டாக்டர் அவ்வை நடராசன், அறிஞர் சிலம்பொலி செல்லப்பன் முதலிய பெருமக்களும் பங்கேற்று அணி சேர்த்தது குறிப்பிடத்தக்கது.

6 உலகக் கிறித்தவத் தமிழ்ப் பேரவையின் பத்தாவது ஆண்டு நிறைவு விழா,தமிழ்க் கிறித்தவ இலக்கிய முப்பெரும் விழாவாகவும் பேரவையின் நான்காவது மாநாடாகவும் மதுரை தமிழ்நாடு இறையியல் கல்லூரி வளாகத்தில் 1991 நவம்பர் 8,9,10 ஆகிய நாட்களில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. கல்லூரி முதல்வர் அருள்திரு.கம்பர் மாணிக்கம் அவர்களின் வழிநடத்துதலில் நடைபெற்ற இவ்விழாவில், நூல் வெளியீடுகள், இலக்கியப் பேருரைகள்,கலை நிகழ்ச்சிகள் இசைப்பொழிவுகள்,சிறப்புக் கருத்தரங்குகள், பாராட்டு நிகழ்வுகள் பட்டமளிப்பு, வழக்காடு மன்றம், தவத்திரு. குன்றக்குடி அடிகளார், தமிழறிஞர் சி.பா., டாக்டர் ரெக்ஸ் முதலியோர் வழங்கிய முத்திரைப் பொழிவுகள் உள்ளிட்ட பல்வேறு சிறப்பு நிகழ்வுகள் விழாவின் வெற்றிக்கு வழிவகுத்தன.

7 இப்பேரவையின் வரலாற்றில் ஒரு திருப்பு முனையாகவும், இப்பேரவை உலகமெல்லாம் பரவிப் பணியாற்றும் ஓர் உலக அமைப்பு என்பதை உறுதிப்படுத்தும் வகையிலும் பேரவையின் ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு, அமெரிக்கத் திருநாட்டில் நியுயார்க் மாநகரில்,அங்குள்ள கிறித்தவத் தமிழ்க் கோவிலின் ஆதரவுடன், அக்கோவிலின் நிறுவன ஆயர் அருள்திரு அறிஞர் சுந்தர் தேவப்பிரசாது அவர்களின் வழிநடத்து தலில், அரிய நிகழ்வுகளோடு 1996 ஆகஸ்டு திங்களில் சிறப்புற நடந்தேறியது. பேரவை மாநாடுகட்கே உரிய பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகளோடு உலகளாவிய பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்க நடைபெற்ற இப்பெரு விழாவில், பேரவையின் பொறுப்பாளர்களாகத் தமிழகத் திலிருந்து அறிவர் தயானந்தன் பிரான்சிஸ், பேரா சிரியர் பொ.ஆ.சத்தியசாட்சி, டாக்டர் சூ. இன்னாசி, டாக்டர் மோசஸ் மைக்கேல் பாரடே, டாக்டர் தே.செல்லையா ஆகியோர் பங்கேற்றனர்.

8 இதனைத் தொடர்ந்து புத்தாயிரமாம் 2000 ஆம் ஆண்டில், சென்னையிலுள்ள மேற்குத் தாம்பரம் தெ.இ.தி. இயேசுநாதர் ஆலய ஒத்துழைப்போடு அவ்வளாகத்தில் ஒரு நாள் நிகழ்வாக, 'நற்செய்திப் பெருவிழா' ஒன்றைப் பேரவை நடத்தியது. நற்செய்திப் பணிக்குச் சிறப்பிடம் தரப்பட்ட இவ்விழாவில் நற்செய்திப் பேருரைகள், இலக்கியப் பேருரைகள், பட்டமளிப்பு முதலிய பல்வேறு சிறப்பு நிகழ்வுகள் இடம் பெற்றன. இவ்விழாவில் சென்னைப் பேராயர் அறிவர் வே. தேவசகாயம் அவர்களும் தமிழ்நாடு இறையியல் கல்லூரி மேனாள் முதல்வர் அறிவர் ஞான இராபின்சன் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்றனர்.

9 இவை மட்டுமல்லாது, சென்னை கீழ்ப்பாக்கம் இறையியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற கிறித்துமஸ் தொலைக்காட்சி சிறப்புப் பட்டிமண்டபம், சென்னை சாந்தோம் கலைத் தொடர்பு நிலைய அரங்கில் 2008 இல் நடைபெற்ற முப்பெரும் கிறித்தவ அறிஞர்களின் நினைவுப் படைப்பாய்வரங்கம் உள்ளிட்ட பல்வேறு அரிய இலக்கிய இறையியல் நிகழ்வுகளைப் பேரவை நடத்தியுள்ளது.

10 இந்த அரிய சாதனை நிகழ்வுகளின் வரிசையில், ஒரு முத்தாய்ப்பான மணிமுடி நிகழ்வாக, பேரவையின் ஆறாவது உலகக் கிறித்தவத் தமிழ் மாநாடு, 2010 மேத் திங்கள் 21,22,23 ஆகிய நாட்களில் தெ.இ.தி.திருச்சி தஞ்சைத் திருமண்டிலமும் திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரியும் இணைந்து நடத்தும் மாபெரும் விழாவாகத் திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரி வளாகத்தில் நடை பெற்றது. இம்மாநாட்டில் ஆய்வரங்குகள், கவியரங்கம், பட்டிமண்டபம், புத்தகக் கண்காட்சி போன்றவை இடம் பெற்றன. அமைச்சர்கள், துணை வேந்தர்கள், பேராயர்கள், தமிழ் அறிஞர்கள் பலரும் இம்மாநாட்டில் பங்கேற்றனர். இம் மாநாட்டில் வழங்கப்பட்ட 131 ஆய்வுரைகள் 'செம்மொழித் தமிழ் வளர்ச்சியில் கிறித்தவம்' எனும் தலைப்பில் இரண்டு தொகுதிகளாக வெளியிடப்பட்டன. சிறப்பு மலரும் வெளியிடப்பட்டது.

11 பேரவையின் ஏழாம் உலகக் கிறித்தவத் தமிழ் மாநாடு, மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் உள்ள மலாயா பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. மலேசியத் தமிழ்க் கிறித்தவ எழுத்தாளர் சங்கத்தின் ஆதரவோடு நடைபெற்ற இம்மாநாடு, 2012 ஜூன் 19 21 ஆகிய நாட்களில் நடைபெற்றது. மாநாட்டு மலரும், மாநாட்டில் வழங்கப்பட்ட 91 ஆய்வுரைகள் அடங்கிய 'கிறித்தவமும் தமிழியல் பண்பாடும்' எனும் தலைப்பிலான நூலும் இம்மாநாட்டில் வெளியிடப்பட்டன. இம்மாநாட்டிற்கு, பேராயர் இராபர்ட் செல்லதுரை, திரு. அந்தோணிசாமி, முனைவர் சிசில் சந்திரன், பேராசிரியர்கள் குமரன், கிருஷ்ணன் மணியன் ஆகியோர் முக்கியப் பங்களிப்பை வழங்கினர்.

12 பேரவையின் எட்டாம் உலகக் கிறித்தவத் தமிழ் மாநாடு இலங்கையில் கண்டியிலுள்ள பொல்லகொல்ல என்னுமிடத்தில் 2014 ஆகஸ்டு 11–14 ஆகிய நாட்களில் நடைபெற்றது. இலங்கை கிறிஸ்தவத் தமிழ்ப் பேரவை, பிமதலாவை இலங்கை இறையியல் கல்லூரி தமிழ் கலா மன்றம் ஆகியன இணைந்து இம்மாநாட்டினை நடத்தின. 'திருச்சபையும் சமூகப் பணியும்' எனும் பொருண்மையில் நடைபெற்ற இம்மாநாட்டில் வழங்கப்பட்ட 29 கட்டுரைகள் சிறப்பு மலராக வெளியிடப்பட்டது. இம்மாநாட்டிற்கு, அருட்பணி. ஸ்டீபன் அருளம்பலம், திரு. கிறிஸ்ரி சாமுவேல் ஆகியோர் முக்கியப் பங்களிப்பை வழங்கினர்.

தரு இதழ்ப் பணி, கருத்தரங்குகள், பயிலரங்குகள் என பேரவையின் பணிகள் தொடர்கின்றன.

– ப.டேவிட் பிரபாகர்

'தரு'

1831 இல் 'தமிழ் பத்திரிக்கை' என்னும் தலைப்பில் முதன்முதலில் தமிழ்க் கிறித்தவ இதழ் வெளிவந்ததாக அறியமுடிகிறது. அதனைத் தொடர்ந்து நூற்றுக்கணக்கான இதழ்கள் கிறித்தவம் சார்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றன. அவற்றுள் மிகுதியானவை சமயச் செய்தியை உள்ளடக்கமாகக் கொண்டவை. கிறித்தவச் சமயமும் இலக்கியமும் கலந்து வெளிவந்தவை, தொடர்ந்து வெளிவருகின்றவை; நற்போதகம், தேசோபகாரி, நண்பர் வட்டம், தரு முதலியன அவற்றுள் சிலவாகும். அவ்வகையில் சமயமும், இலக்கியமும், ஆய்வும் இணைந்த நிலையில் தனி அடையாளத்துடன் வெளியிடப்படுவது 'தரு' என்னும் ஆய்வு இதழாகும்.

தமிழ்க்கிறித்தவ இதழ்களின் வரிசையில் தரு இதழ் உலகக் கிறித்தவத் தமிழ்ப் பேரவையின் காலாண்டு ஆய்வு இதழாக 1987 முதல் வெளிவருகிறது. தரு கிறித்தவ இதழுலகில் தனக்கென ஒரு சிறப்பான எல்லையை வகுத்துக் கொண்டு சமயம், கலை, இலக்கியம், சமுதாயம் எனப் பல்வேறு நிலைக்களன்களைக் கொண்டதாய் அமைந்துள்ளது. அதன் உள்ளடக்கமாய் தலையங்கம், அருளுரை, இலக்கியத் திறனாய்வுக் கட்டுரைகள் (சமயம், இலக்கியம், பொது, வாழ்வியல், ஒப்பாய்வு) நூலறிமுகம், இலக்கியர் வரிசை எனத் தனித்துவமிக்க சிறப்புக்கூறுகள் அமைந்துள்ளன. தரு வெளியிடப்படுவதின் நோக்கத்தினை இதழ்க்குழுவினர் தெள்ளத் தெளிவாய் முதல் இதழில் குறிப்பிடுகின்றனர்.

"தான் இதழ்ப்பணி செய்வதற்கென ஒரு நிலம் கிடக்கிறது அதனை வெறுமையாக விடுதலை நன்றன்று என உணர்ந்தே தரு ஒரு கன்றாக ஊன்றப்படுகிறது. நற்செய்திப் பணிவிடை, இறையியல், சமய ஒப்பாய்வு, சமுதாயம், இலக்கியம் ஆகிய துறைகளில் நன்கு ஆய்வு செய்து உருவாக்கப் படுகின்ற எழுத்தோவியங்களைத் தருவின் வாயிலாக அன்பர்கள் நல்கிட வேண்டும் என்பதே பேரவையின் நோக்கமாகும்" (தரு மழை இதழ் 1987,ப.7) 1987இல் வெளியிடப்பட்ட தரு இதழின் ஆசிரியராக பொன்னு. ஆ. சத்தியசாட்சி அவர்களும், துணை ஆசிரியராக மோசஸ் மைக்கேல் பாரடே அவர்களும் அமைந்தனர்.

பேராயர் சாலமோன் துரைசாமி, பேராயர் சுந்தர் கிளார்க் ஆகியோர் சிறப்பாசிரியர்களாகவும் மூத்த கிறித்தவத் தமிழறிஞர்கள் இதழ்க் குழுவினராகவும் அமைய இதழ் வெளிவரத் தொடங்கியது. நான்கு இதழ்களுக்குப் பின் தொடர்ந்து வெளிவராமல் இருந்த இதழ் 1996இல் மறுபடியும் மறுமலர்ச் சியுடன் தளிர்விடத் தொடங்கியது. அது முதல் பொது பொறுப்பாசிரியராக பொன்னு. ஆ. சத்தியசாட்சி அவர்களும் இணை ஆசிரியராக மோசஸ் மைக் கேல் பாரடே அவர்களும் துணை ஆசிரியராக ப. டேவிட் பிரபாகர் அவர்களும் அமைய புரவலர்கள், உறுப்பினர்கள் என மூத்த கிறித்தவத் தமிழறி ஞர்கள் குழாத்தோடு இதழ் வெளிவந்து கொண்டி ருக்கிறது. இதழின் நிறுவன ஆசிரியர் பொ.ஆ.ச., அவர்களின் மறைவுக்குப்பின் அருள்திரு. டாக்டர் சுந்தர் தேவபிரசாது அவர்களைப் புரவலராகவும் முனைவர் மோசஸ் மைக்கேல் பாரடே, முனைவர் ப. டேவிட் பிரபாகர் ஆகியோரை ஆசிரியர்களாகவும் கொண்டு இதழ் வெளிவருகிறது.

இதழ் ஆலோசகர்களாக டாக்டர் ப.ச. ஏசுதாசன், டாக்டர் தே. செல்லையா, புலவர் சே.சுந்தரராசன், டாக்டர் ஜி. ஜான் சாமுவேல், புலவர் ஆர்.எஸ். ஜேக்கப், திரு. பாண்டித்துரை, டாக்டர் தாமஸ் எட்மண்ட்ஸ் ஆகியோரும், இதழ் உறுப்பினர்களாக டாக்டர் எஸ். ஸ்டீபன் ஜெப நேசன், டாக்டர் த.அருள் பத்மராசன், டாக்டர் து.மேஷாக், டாக்டர் அ.இராசராசன்,

டாக்டர் ரேவதி கிருபாகரன், கவிஞர் ஞான கிரு பாகரன், முனைவர் ஸ்டீபன் இரவிக்குமார் ஆகி யோரும் அமைந்து செயலாற்றி உள்ளனர்.

தரு இதழ் அமைப்பு

முதல் சிறப்பிதழ் ஐம்பது பக்கங்களைக் கொண்டதாய் வெளியிடப்பட்டது. பின்னர் பொருளாதார நிலைக்கருதி தன் அள வினைச் சுருக்கிக்கொண்டது. இதழ் பக்கங் களைச் சுருக்கிக் கொண்டாலும் தரத்தில் சுருங்காது வெளிவந்து கொண்டிருக்கிறது.

முதல் பகுதி தலையங்கம், நிகழ்காலச் சிக்கல்களைக் கிறித்தவச் சார்போடும் பொது நிலையிலும் சுட்டும் ஆசிரியர்களின் எழுத்துரைகள். இறையியல் அறிஞர்களும், அருட்தொண்டர்களும் அருளும் அருளுரை அடுத்து இடம்பெறுகிறது. கிறித்தவ இலக்கியம் சார்ந்த கட்டுரை, வாழ்வியல், கலை, இலக்கியம் சார்ந்த கட்டுரை இரண்டு அல்லது மூன்று கட்டுரைகள் நான்கு பக்க அளவில் அமைகிறது.

தரு இதழ் நூல் அறிமுகத்திற்கு இரண்டு பக்கங்களை ஒதுக்கி நான்கு நூல்களை மதிப்புரை செய்கிறது. தரு அன்பர்கள் கவனிக்க என்னும் பகுதியில் இதழ் பற்றிய விவரம், சந்தா, அட்டைப்பக்க விளம்பரத்தொகை, இதழ்க் குழாம் ஆகியவை ஒருபக்க அளவில் வெளியிடப்படுகிறது.

1998முதல் வெளிவருகின்ற இதழ்களில் கிறித்தவ இலக்கிய அறிஞர்களை அறிமுகப்படுத்தும் இலக்கியர் வரிசை ஒரு பக்க அளவில் இடம்பெறுகிறது. 2003 முதல் வெளிவந்த இதழ்களில் முனைவர் வீ.ஞானசிகாமணியின் 'யாத்திரிக மலர்ச் சோலை' தொடர்க்கட்டுரை வெளிவந்துள்ளது. இறுதிப் பக்கத்தில் தமிழகத்திலும் வெளியேயும் நடைபெற்ற கிறித்தவ நிகழ்ச்சிகளைப் பற்றிய செய்திக் கட்டுரையைப் படத்துடன் வெளியிடுகிறது.

இதழின் உட்பகுதியில் இதழுக்கு சிறப்பு சேர்க்கும் வண்ணமாகக் கவிதைகள், துணுக்குச் செய்திகள், வாழ்த்துச்செய்திகள், வருத்தச் செய்திகள், அறிவிப்புகள் முதலியவை இடம்பெறும். அட்டைப் படம் இதழ் வெளியாகும் பருவத்துக்கு ஏற்றவாறு தலைவர்கள், இயற்கை, ஓவியம் ஒன்றினை மையமிட்டதாக அழகுற அமைக்கப்படுகிறது.

தொடக்கத்தில் வெளிவந்த நான்கு இதழ்களில் 'மறைத்திருவாளர் டாக்டர் நீ.பொன்முடி அவர்கள்' என்னும் தலைப்பில் ஆசிரியர் பொ.ஆ.ச., அவர்களின் தொடர்கதை இடம்பெற்றுள்ளது. தொடக்க இதழ்களின் இறுதிப்பகுதி Points from pages என்னும் தலைப்பில் இதழின் பக்கத்தோறும் இடம்பெறும் செய்திகளை ஆங்கிலத்தில் தொகுத்துக் கூறுவதாய் அமைந்துள்ளது.

தரு உள்ளடக்கம்: தலையங்கம்

இதழ் வெளியாகும் பருவத்தில் நிகழும், விவாதிக்கப்படும் நிகழ்கால பிரச்சினையை மையமிட்டதாய் தலையங்கம் அமையும். அவை உலகளாவிய நிலையில் எழும் சிக்கல்களையும் வெளிப்படுத்த தயங்குவதில்லை. எளிதில் புரிந்து கொள்ள இயலாத விவாதங்களையும் தெளிவாய் விளங்கச் செய்வதாய் அமைவது ஆசிரியர்களின் தனித்துவத்தைப் புலப்படுத்துகிறது.

அருளுரை

சமயம் மக்களை நெறிப்படுத்துவது. நெறிப்படுத்து வதற்கு ஏதுவான சமயச் சிந்தனைகளை வாழ்வியல் யதார்த்தப் போக்கோடு உணர்த்துகின்ற அருளு ரைகள் ஒவ்வொரு இதழிலும் வெளி வந்துள்ளன.

கட்டுரைகள்

இதழ் கிறித்தவ அமைப்பினரால் நடத்தப் படுவதாக இருந்தாலும் உள்ளடக்கமாக அமையும் கட்டுரைகள் பன்முகப்பார்வை கொண்டதாய் அமைந்துள்ளன. சமயம் சாராத தமிழறிஞர்களின் கட்டுரைகள் சமநிலையில் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். தருவில் வெளியிடப்படுகின்ற கட்டுரைகளைக் கிறித்தவ இலக்கியக் கட்டுரைகள், பொதுக்கட்டுரைகள், வாழ்வியல் முன்னேற்றம் குறித்த கட்டுரைகள், கலை தொடர்பான கட்டுரைகள், இலக்கிய ஒப்பீட்டுக் கட்டுரைகள் எனப் பகுக்கலாம்.

நூல் மதிப்புரை

1996க்குப் பின் வெளிவந்துள்ள இதழ்களில் நூல்களின் மதிப்புரைகள் இடம்பெற்றுள்ளன. இதழாசிரியர்கள் உட்பட தமிழறிஞர்கள் நூல்களின் தரத்தினை மதிப்பீடு செய்துள்ளனர். கிறித்தவத்தைப் பின்புலமாகக் கொண்டு படைக்கப் பெறும் கவிதை, சிறுகதை, நாவல், ஆய்வு நூல்கள் வாழ்வியல், இறையியல் நூல்கள் மதிப்புரைக்கு ஆசிரியர்களால் தெரிவுசெய்யப்பெறுகிறது. அவை தக்க துறைசார்ந்த திறனாய்வாளர்களிடம் மதிப்புரை பெற்று வெளியிடப்படுகின்றன.

இலக்கியர் வரிசை

இது மூத்த கிறித்தவத் தமிழறிஞர்களை அறிமுகப் படுத்தும் பகுதியாகும். 1998இல் வெளியான மலர் இரண்டில் டாக்டர் தி.தயானந்தன் பிரான்சிஸ் அவர்களின் அறிமுகத்தோடு இப்பகுதி தொடங்குகிறது. அவரைத் தொடர்ந்து மூதறிஞர் வீ.ப.கா., பேரறிவர் இன்னாசி, முனைவர் ப.ச.ஏசுதாசன், முனைவர் வீ. ஞானசிகாமணி, புலவர் சே.சுந்தர ராசன், புலவர் ஆர்.எஸ். ஜேக்கப், முனைவர் மு.தெய்வநாயகம், பேரா. சி.தேவராசன், முனைவர் கிரேஸ் செல்வராஜ், திரு. தே. சுவாமிநாதன், திரு சாம் ஜெபதுரை ஆகியோரை உரிய முறையில் தமிழுலகிற்கு அறிமுகப்படுத்தும் பணியை நிறைவாய்ச் செய்துவருகிறது.

– முனைவர் **து.மேஷாக்**

கீர்த்தனை: விளக்கம்



கீர்த்தனை: ஆசிரமப் பாமாலை 49 கண்ணி 1

தோடி **ரூபகம்**

அந்திவேளை யில்வனமதி நேரத்திலன்பே நின் வதனத்தொளி
பந்தமாய முகிலினாலிருள் மாற்றியீ ந்தருள் செய்குவாய்
இந்தநாட் பகலுன்னை நான் மறந்திருந்த பாதகம் உண்டெனில்
தந்தருள் மன்னிப் பெந்தையே திருசாமி இயேசு தயாபரா!

மெட்டு: ஆருந்துணையில்லையே எனக்காதியான் திருப்பாலா

ஆசிரியர் குறிப்பு

வரகவி தி. ஞானானந்தன் (1902 03.03.1968) விருதுநகர் அருப்புக் கோட்டைக்கருகில் அழகியநல்லூர். பெற்றோர் திருவேங்கடகிரி ரெட்டியார், விடியாள். 5ஆம் வகுப்பே படித்த விவசாயி. தாயுடன் காசி சென்று கடவுளைக் காணாது நாத்திகனாய் திரும்பியவர் சுதேசமித்திரனில் மலைப் பிரசங்கம் படித்து விருதுநகர் TELC போதகரிடம் புதிய ஏற்பாடு பெற்று கிறிஸ்தவரானார். இதனால் இவர் வீட்டை ஊரார் கொளுத்தி கொலை செய்ய முயன்றனர். அருகில் பாம்பட்டி கிராமத்தில் ஓர் கிறிஸ்தவ குடும்பத்தில் அடைக்கலம் பெற்று மீண்டும் அங்கு வந்த அதே போதகர் இவரை கடலூர் இறையியற் பள்ளிக்கு அனுப்பினார்.

அங்கு வந்த திருப்பத்தூர் ஆசிரம பெரியண்ணனையும் சின்னண்ணனையும் கண்டு அவர்களுடனே ஆசிரமம் சென்று 7 ஆண்டுகள் தங்கினார். ஆடம்பரம் விரும்பாது தானே கட்டிய குடிலில் வாழ்ந்தார். அவர் நட்ட ஆலமரம் குடிலில் இன்றும் உள்ளது. தாடியுடன் வாழ்ந்ததால் சாமியாரண்ணன் எனப்பட்டார். 1939 இல் ஊர் சென்று ஜெய மணியை மணந்து 4 பிள்ளைகள் பெற்றார்.

மூத்தவர் ஞான சாமுவேல் ஓய்வு பெற்ற ஆசிரியர். அவர் மூலமே இக்குறிப்பு பெறப்பட்டது.

பாடற்குறிப்பு

பார்வையற்ற தன் தந்தையிடம் தமிழ் கற்று பாடலியற்றவும் பாடவும் வில்லுப்பாட்டினால் நற்செய்தி பணியும் செய்தவர். சவரிராயன் ஏசுதாசனாரின் கருத்துக்களைக் கீர்த்தனைகளாக்க உதவியவர் இவர். நானே ஒளி என்றவரை மாலை இருளில் முகம் காட்ட வேண்டுகிறார். அவ்வொளியில் பந்த பாவ இருள் (மாற்ற) நீக்கவும் பகலில் உம்மை மறந்திருப்பின் அது பாவமன்று பாதகம். எனவே அதனை மன்னியும் என்றும் பாடுகிறார்.

4 ஆம் கண்ணியில் 'மரணவாய்ப் பட்டுழன்று சிந்தை மடிந்து மாளும் மாந்தர்க்கு ஆறுதல் தர பாடுகிறார்". இப்பாடல் புற்று நோயால் துன்புற்ற தன் தாய்க்காகப் பாடியதென முனைவர் ப.ச. ஏசுதாசனார் கூறுகிறார். கவி திறனால் மட்டுமன்றி வரத்தாலும் வருவது. எனவே இவரையும் வரகவி எனலாம் அல்லவா?

குறிப்பு: 05.12.1931 இல் எழுதிய பாடல்

அருள்திரு. இலாசரஸ் செல்வநாதன்
சி.எஸ்.ஐ. ஆயர் (ஓய்வு)
காட்பாடி



யாப்பிலக்கணத்தில் சில ஐயங்களும்... தீர்வுகளும்...

முனைவர் **தே.செல்லையா**
தலைவர் உ.கி.த.பேரவை
மேனாள் தமிழ்த்துறைத் தலைவர்
ஊரீசு கல்லூரி, வேலூர்–632001.

தொல்காப்பியர் ஒருவர் எழுதியதைப் பின் னாளில் ஐவர் எழுதினர். பவணந்தி முனிவர் (எழுத்து சொல்) நற்கவிராசநம்பி (நம்பியகப் பொருள்) ஐயனாரிதனார் (புறப்பொருள் வெண்பாமாலை) அமிதசாகரர் (யாப்பருங் கலக்காரிகை) தண்டி (தண்டியலங்காரம்) ஆகிய 5 பெரும் புலவர்களைத் தொல்காப்பியர் உருவாக்கியுள்ளார்.

மிகப் பழைய நூல்கள் எல்லாவற்றிற்கும் பழையது எனக் கருதப்படும் தொல் காப்பியத்திற்கு முன்னே புறநானூற்றுச் செய்யுள்கள் சில தோன்றியுள்ளன என்பார் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை (புறநானூறு முன்னுரை ப.3). இக்கூற்றால் புறநானூற்றுப் பாடல்கள் யாப்பிலக் கணத்தால் கட்டப்பட்டதால் அவை தொல்காப்பியத்திற்கும் முந்தியன என்கிறபோது அவற்றின் தொன்மை நன்கு வெளிப்படுகிறது. தொல்காப்பியர் செய்யு ளியலில்

எழுத்து முதலா ஈண்டிய அடியில்
குறித்த பொருளை முடிய நாட்டல்
யாப்பென மொழிப யாப்பறி புலவர்| (1335)

எனக் குறிப்பிடுகிறார். இந்நூற்பாவின் ஈற்றிலுள்ள யாப்பறி புலவர் என்பதற்கு

யாப்பு அறிந்த புலவர் என்றும் யாப்பறிந்தவரே புலவர் என்றும் பொருள் கொள்ள இடமுண்டு. ஏனெனில் தமிழ் இலக்கணமும் இலக்கியமும் செய்யுளால் ஆனவை. யாப்பிலக்கணம் அறிந்தோரே அவற்றைக் கற்றுப் புதியனவற்றைப் படைக்க முடியும். ஆகவே யாப்பிலக்கணம் தமிழ் கற்பிப்போருக்கு முதுகெலும்பாய்த் திகழ்கிறது.

யாப்பருங்கலக்காரிகை ஒழிபியலில் எவை அலகு பெறா எவை குறைந்தும் தனித்தும் ஒலிக்கும் என்பதற்கான இலக்கணம் வகுக்கப் பட்டுள்ளது. ஒழிபியல் எச்சவியல் முதலியன இலக்கணக் காப்புக்கு இன்றியமையாதன. பாட்டில் சீரும் தளையும் சிதைகின்றபோது

1. குற்றியலிகரம் குற்றியலுகரம் உயிரளபெடை ஆகியன அலகு காரியம் பெறமாட்டா.
2. ஐகாரக்குறுக்கம் குற்றெழுத்தைப் போல அலகிடப்பெறும்.
3. ஒற்றெழுத்து அளபெழுந்தவிடத்து அது நேரசையாகக் கொள்ளப்படும்.

என ஒழிபியலில் குறிப்பிடப்படுகின்றன.

எண்.3இல் ஒற்றெழுத்து நேரசையாகக் கொள்ளப்படும் என்று பொதுவாகக் கூறப்படுகிறதே யன்றி ஆய்தம் சில இடங்களில் குற்றெழுத்தைப் போல அலகிடப் பெறும் என்று கூறப்படவில்லை. (நேரசை தனிக்குறிலுக்கும் தனி நெடிலுக்கும் வரும்).

அற்றால் அளவறிந் துண்க அஃஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கும் ஆறு

இக்குறட்பாவின் முதலடியின் மூன்றாம் சீர் தேமாவாகும். அதற்கு வருஞ்சீர் கூவிளங்காய் ஆகும். இங்கு மா முன் நேர் வந்திருப்பதால் நேரொன்றிய ஆசிரியத்தளை வந்து தளை தட்டு கிறது. வெண்பாவில் பிற தளைகள் வருதல் கூடாது. மேற்கூறிய ஒற்றுகள் அளபெடுப்பதும் இங்குப் பொருந்தாது. இச்சூழலில் உரையாசிரியர்கள் பொருத்தமான விளக்கம் அளிக்கின்றனர்.

அற்றா லளவறிந் துண்க வஃஃதுடம்பு முதலிய இடங்களில் உயிர்போல அலகுபெற்றும் தோன்றிற் புகழொடு தோன்றுக வஃஃதில்லார் முதலிய இடங்களில் மெய்போல் அலகுபெறாமலும் வரும் என்கின்றனர் வை.மு. சடகோப ராமநுஜாசாரியார். சே. கிருஷ்ணமாச்சாரியர் ஆகியோர் (நன்னூல் காண்டிகையுரை நூற்பா 59 சார்பெழுத்தின் வகை 1926 பதினோராம் பதிப்பு).

இங்கு அஃஃதுடம்பு என்பதில் ஆய்தம் குறிலாகக் கொள்ளப்பட்டால் மா நிரை இயற்சீர் வெண்டளையாகி குறட்பா சரியாய் அமைகிறது.

மேற்காட்டப்பட்ட இரண்டு குறட்பாக்களிலும் பயின்று வரும் நான்காம் சீர்கள்தாம் இத்தகைய மாற்றத்தைப் பெறுவதும் குறிப்பிடத்தக்கது.

பாட்டில் ஓசை குறைகின்றபோது இலக்கணப் பிழை ஏற்படுமாயின் நுஞணநமன வயலள ஆகிய ஒற்றுகளோடு ஆய்தமும் (ஃ) சேர்த்து 11 ஒற்றுகள் அளபெடுக்கும் என்கிறார் பவணந்திமுனிவர். இவ்விலக்கணம் மேற்கூறப்பட்ட உண்க அஃஃதுடம்பு என்பதற்கு யாண்டும் பொருந்துவதில்லை.

எனவே ஒற்றளபெடை நூற்பாவிலேயே ஆய்தம் சிற்சில இடங்களில் குறில் போல் அலகிடப்பெறும் என்றதொரு துணை நூற்பா அமைத்திருக்கலாம். இப்புதிய பொருத்தமான நூற்பாவை யார் எழுதுவார்?

ஆய்தக்குறுக்கம்

பவணந்தி முனிவர் ஆய்தக் குறுக்கத்திற்கு
லளவீற் றியைபினா மாய்த மஃகும்
(நன்னூல் 98)

என நூற்பா வழங்குகிறார்.

தனிக்குறிலடுத்த லகர ளகர ஈற்றுப் புணர்ச்சியில் ஆய்தம் தன் மாத்திரையில் குறுகும் என்பது இந்நூற்பாவிற்கான பொருள். இதற்கு எடுத்துக் காட்டாக

அல் + திணை = அஃறிணை
முள் + தீது = முஃறீது

ஆகியன அளக்கப்பட்டுள்ளன. இவற்றில் ல ள இவற்றை ஈற்றில் உள்ள சொற்கள் என்பது வரை சரி. ஆனால் தி தீ ஆகியவற்றை முதலில் கொண்ட சொற்கள் வந்தால் என்று நூற்பாவில் இல்லை. பின் எப்படி அல் + திணை முள் + தீது என எடுத்துக்காட்டு தரப்படுகின்றன? இதற்கு நன்னூலாரே ஏறத்தாழ 130 நூற்பாக்களுக்குப் பிறகு விடை தருகிறார்.

குறில்வழி லளத்துவ் வணையி னாய்தம்
ஆகவும் பெறூஉ மல்வழி யானே (நூற்பா 228)

தனிக்குறிலின் பின் நின்ற லகர ளகர மெய்கள் அல்வழிப் புணர்ச்சியில் தகரம் வருமொழி முதலில் வருமாயின் ஆய்தமாகவும் திரிதலையும் பொருந்தும் என்கிறார்.

இப்படி இலக்கணப் புலவர்கள் மிகவும் கவனமாக நூற்பாக்களை அமைத்திருப்பது வியப்பிற்குரியதாய் உள்ளது.

சங்கப் பாவலர்கள் அத்தகைய அசைச்சீர்களுக்கு ஏகாரம் கொடுத்து ஈரசைச்சீராக்குகின்றனர். அதனால் ஆசிரியப்பா சிறப்படைவதுடன் அதற்கு ஏகாரச் சிறப்பும் ஏற்படுகிறது.

கட்டளைக் கலித்துறை

யாப்பருங்கலக்காரிகை கட்டளைக் கலித் துறைக்குக் கீழ்வருமாறு இலக்கணம் வகுக்கிறது.

1. நெடிலடி (ஐசீர்) நான்கடியாய் வருவது.
2. அடிதோறும் நின்ற முதல் நான்கு சீர்களும் வெண்சீர் வெண்டளை அல்லது இயற்சீர் வெண்டளையான் வரும்.
3. அடிதோறும் இறுதிச்சீராகிய ஐந்தாம் சீர் விளங்காய்ச் சீராக நிற்கும்.
4. நேரசையில் தொடங்கினால் ஒற்றொழித்து ஓரடிக்குப் பதினாறு எழுத்தும் நிரையசையில் தொடங்கினால் ஓரடிக்கு ஒற்றொழித்து பதினேழு எழுத்தும் அமையப்பெறும்.

ஆனால் யாப்பருங்கலக் காரிகைகள் சிலவற்றில் விளங்காய்ச் சீர்கள் அமையப் பெறவில்லை.

(எ:டு)

திருமழை உள்ளார் அகவல்

சிலைவிளங் காகும்வெள்ளை(11)
நேரிசை இன்னிசை போல
நடந்தடி மூன்றின்வந்தால் (26)
அந்தமில் பாத மளவிரண்
டொத்து முடியின்வெள்ளை (27)
கறைதரு காலை யமுதே
விருத்த தனிச்சொல்வந்து (35)

மேற்கண்ட காரிகை அடிகளில் 5ஆம் சீர் விளங்காயாக வருதல் வேண்டும். ஆனால் இங்கு அப்படி வரவில்லை. அடிதோறும் நின்ற 5ஆம் சீர்கள் நாலசைச்சீர்களாகவே உள்ளன.

நாலசை என்பதால் அங்கு விளங்காய்ச் சீருக்கு இடமில்லை. ஆனால் ஊன்றிக் கற்கும்போது ஒவ்வொரு அடியிலும் வகரத்திற்கு முன்நிற்கும் ம் ன் ல் முதலியன கெட்டால் அங்கு விளங்காய்ச் சீர்கள் தோன்றி இலக்கணமும் பிழையாது வரும்.

ஏற்கனவே மரம் + வேர் = 'மரவேர்' தரும் + வளவன் = தருவளவன் என்ற எடுத்துக்காட்டுகளில் வகரத்திற்கு முன்நிற்கும் மகரமெய் கெடுவதுபோல் இங்கும் ம் ன் ல் ஆகிய மெய்கள் கெடுகின்றன.

அசைச்சீர் ஈரசைச்சீர் ஆதல்

ஆசிரியப்பாவில் அசைச்சீருக்கு இடமில்லை. ஆனால் சங்க இலக்கியப் பாடல்கள் பல அசைச்சீர்களால் முடிகின்றன. சங்கப் பாவலர்கள் அத்தகைய அசைச்சீர்களுக்கு ஏகாரம் கொடுத்து ஈரசைச்சீராக்குகின்றனர். அதனால் ஆசிரியப்பா சிறப்படைவதுடன் அதற்கு ஏகாரச் சிறப்பும் ஏற்படுகிறது. இந்த 'ஏ' கார இடைச்சொல் தேற்றம் வினா, பிரிநிலை எண் ஈற்றசை ஆகிய ஐந்து பொருள்களில் வழங்கப்பட்டதாகத் தொல்காப்பியத்தில் அறிய முடிகிறது. நன்னூலார் இவ்வைந்தனோடு இசைநிறை என்ற ஒன்றினைச் சேர்த்து ஏகார இடைச்சொல் ஆறு என்கிறார். "இசைநிறை என்பது எகாரம் பயன்பட்ட முறையேயன்றிப் பொருளல்ல. இசைநிறையாக ஏகாரம் பயன்பட்டது. ஏகாரம் இசைநிறையாகவரினும் ஈற்றசையாகவரினும் ஒரு சொல்லின் இறுதியில் நிற்கும்". (பொற்கோ இலக்கண உலகில் புதிய பார்வை தொகுதி I ப. 150) இப்படிப் பாட்டின் ஈற்றினின்று ஈரசைச் சீர்களாகும் பாங்கினைக் கீழ்வரும் சங்கப் பாடலடிகள் உணர்த்துகின்றன.

நாரை மிதக்கும் என்மகள் நுதலே|(குறுந்.114)
தான் என் இழந்தது இவ்வழுங்கல் ஊரே
(நற்.36)
அவ்வழி நல்லை வாழிய நிலனே| (புறம்.187)
பலரொடு முரணிய பாசறைத் தொழிலே|
(நெடுந.188)
என்னோற் றனையோ மாவின் தளிரே|
(ஐங்கு.365)
மண்ஆர் கூந்தல் மரீஇய துயிலே| (அகம்.223)

மேற்கண்ட எடுத்துக்காட்டுகளின் ஈற்றுச்சீர்கள் அடிப்படையில் நுதல் ஊர் நிலன் தொழில் தளிர் துயில் என அசைச்சீர்களான் வரும். ஆனால் சங்கப் பாவலர்கள் அவற்றிற்கு ஏகாரம் கொடுத்து ஆசிரியப்பா இலக்கணம் பிழையாது அதனைச் சிறப்படையவும் செய்கின்றனர்.

மேற்கண்டவாறு இலக்கணப் புலவர்களும் இலக்கியப் பாவலரும் இலக்கணத்தைக் கட்டிக் காத்து வருகின்றனர். இவை எதிர்கால சந்ததியினருக்கு பெரும் உந்துதலாய் அமையும் என்பது திண்ணம்.

வீரமாமுனிவரின்

மருத்துவ நூல்களும்... மருந்து வகைகளும்...

கிறித்தவ சமயத்தைப் பரப்பும் நோக்கத்தோடு தமிழகம் வந்த வீரமாமுனிவர் அச்சமயப் பணிகளுக்குத் துணை புரியும் வகையில் தமிழ் மொழியைக் கற்றார். பன்மொழிப் புலமை பெற்ற முனைவர் தமிழ் மொழியின் மீது கொண்ட மிகுந்த ஈடுபாட்டால் காப்பியம் இலக்கியம் இலக்கணம் எனத் தமிழ் மொழியின் அனைத்துத் துறைகளிலும் தடம் பதித்தார். தமிழ் இலக்கிய இலக்கணத்தில் ஆழ்ந்த புலமை யுடையோர் வைத்தியம் சோதிடம் முதலானவற்றிலும் புலமை பெற்றிருந்தனர். அவ்வகையில் வீரமாமுனிவரும் 13க்கும் மேற்பட்ட மருத்துவ நூல்களை எழுதியுள்ளார். அம்மருத்துவ நூல்கள் குறித்து விரிவாக ஆய்ந்தவற்றின் சாரத்தை மட்டும் இக்கட்டுரை எடுத்தியம்புகிறது.

வீரமாமுனிவரின் மருத்துவ நூல்கள்

இயேசு கிறிஸ்து மக்களுக்கு இறைச் செய்தியை எடுத்து ரைத்ததோடு அவர்களது நோய்களைக் குணப்படுத்தியுள்ள நிகழ்ச்சிகளை விவிலியத்தில் காணலாம். இயேசுவின் வழியில் வந்த வீரமாமுனிவரும் சமயப் பணியுடன் மருத்துவப் பணியினையும் புரிந் துள்ளார். இரணவாகடம் நசகாண்டம் நவரத்தினச் சுருக்க மாலை மகாவீரியச் சிந்தாமணி வைத்திய சிகாமணி சுரமஞ்சரி பூவரசங்காய் எண்ணெய் மேகனாதித் தைலம் பஞ்சாட்சர மூலி எண்ணெய் சத்ரு சங்கார எண்ணெய் வீரமெழுகு முப்பு சூத்தரம் நவகாண்டம் ஆகியவை வீரமா முனிவரின் மருத்துவ நூல்களாகும். இவற்றைத் தவிர அநுபவ

முனைவர் ஆ.நிர்மலா
முதுமுனைவர் மேலாய்வாளர்,
சமயங்கள் தத்துவம் மற்றும் மனிதநேயச் சிந்தனைப்புலம்.
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

சிந்தாமணி தாயும் சேயும் குணவாகட நிலைக்கண்ணாடி ஆகிய நான்கு நூல்களும் வீரமாமுனிவரால் எழுதப்பட்டவை என்கிறார் அருட்சகோதரி இராணி மார்கிரேட் தெரசா. இம்மருத்துவ நூல்கள் குறித்து வீரமாமுனிவர்

"இந்திய நாட்டில் உள்ள விருடியரு சித்தர்களும்
அந்த விங்கிலாண்டி னறிஞர்களும் தொகுத்தவற்றுள்
தொண்டரு நாற் சூட்சமம் தேர்ந்து" (வை. சிகா.சேய்)

என்று இந்தியா நாட்டுச் சித்தர்களின் நூலை ஆராய்ந்து மருத்துவ நூல் செய்ததாகக் கூறுகின்றார் முனிவர். சித்தர்கள் சமயம் சமுதாயம் இலக்கியம் மருத்துவம் என அனைத்துத் துறைகளிலும் சிறப்பிடம் பெற்றிருந்தது போல வீரமாமுனிவரும் சமயப் பணி தமிழ்ப்பணி மருத்துவப் பணியிலும்ட தேர்ந்திருந்தார் என்பதை அறிய முடிகிறது.

முனிவரது மருத்துவ நூல்களின் அமைப்பும் பாடுபொருளும்

அகத்தியர் முதலான சித்தர்களின் மருத்துவ நூல்களில் காணப்படும் அமைப்பு முறையிலே முனிவரின் மருத்துவ நூல்களும் பாடப்பட்டுள்ளன. இரணவாகடம் நூறு என்ற மருத்துவ நூலில் விருத்தப்பாக்களால் ஆன 100 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. உடலில் ஏற்படுகின்ற பலவிதமான இரணங்களுக்கு மருந்துகள் கூறப்படுகின்றன.

வாடகத் திரட்டு முதல் பாகத்தில் நசகாண்டம் வெண்பா நவரத்தினச் சுருக்கமாலை மகாவீரியச் சிந்தாமணி ஆகிய மூன்று நூல்கள் இடம் பெற்றுள்ளன. வெண்பாவால் பாடப்பட்ட நசகாண்டத்தில் 26 மருந்துகள் கூறப்படுகின்றன. நவரத்தினச் சுருக்கமாலையில் அந்தாதி அமைப்பில் 9 பாடல்கள் பாடப்பட்டுள்ளன. இவற்றில் இடம் பெறும் மருந்துகள் மிகப்பெரிய நோய்களையும் விரைவில் குணப்படுத்தும் தன்மை கொண்டவை. மகாவீரியச் சிந்தாமணி வெண்பாவால் பாடப்பட்டது. இந்நூலில் 46 மருந்துகள் கூறப்பட்டுள்ளன.

வாகடத் திரட்டு இரண்டாம் பாகத்தில் வைத்தியசிகாமணி சுரமஞ்சரி வரசங்காயெண்ணெய் மேகனாதித் தைலம் பஞ்சாட்சர மூலி எண்ணெய் சத்ரு சங்கார எண்ணெய் வீரமெழுகு முப்பு சூத்திரம் ஆகிய எட்டு சிறுநூல்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் வைத்திய சிகாமணி சுரமஞ்சரி தவிர மற்ற ஆறும் தனிமுறை நூல்களாயிருப்பதால் அவை தனிமுறைத் திரட்டு என்று அழைக்கப்படுகின்றன. வைத்திய சிகாமணி எண்சீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தால் பாடப்பட்டுள்ளது. சுரமஞ்சரி என்ற நூல் அனைத்து வகைக் காய்ச்சலுக்கான மருத்துவங்களைக் கூறுகிறது. சுரம் தொடர்பான 38 மருந்துகளை அறுசீர் விருத்தத்தில் கூறியுள்ளது.

வரசங்காயெண்ணெய் என்னும் நூல் கலி வெண் பாவினால் பாடப்பட்ட 56 பாடல் வரிகளைக் கொண்டது. 40 மருந்துப் பொருட்களால் தயாரிக் கப்பட்ட இம்மருந்தானது 36க்கும் மேற்பட்ட நோய்களைக் குணப்படுத்துகின்றது.

மேகனாதித் தைலம் என்னும் நூல் கலி வெண் பாவினால் பாடப்பட்ட 112 வரிகளைக் கொண்டது. பஞ்ஷாட்சர மூலி எண்ணெய் என்னும் நூல் ஆனந்தக் களிப்பு என்னும் இசைப்பாடலால் நான்கு நான்கு வரிகளால் ஆனது. 22 வகை நோய்களுக்கான மருந்துகள் கூறப்படுகின்றன.

சத்ரு சங்கார எண்ணெய் என்ற நூல் நொண்டிச் சிந்து எனும் இசைப்பாடலால் பாடப்பட்ட 160 வரிகளைக் கொண்டது. வீரம் என்ற பாஷாணத்தினை முதன்மைப்படுத்தும் வீரமெழுகு எனும் நூல் 14 சீர் விருத்தத்தினால் பாடப்பட்டது. முப்பு சூத்திரம் என்னும் நூல் நொண்டிச் சிந்துவினால் பாடப்பட்ட 176 பாடல் வரிகளைக் கொண்டுள்ளது.

நவகாண்டம் என்பது வீரமாமுனிவரால் எழுதப்பட்ட மிகப்பெரிய மருத்துவ நூலாகும். இது மாணிக்கம் வைரம் மரகதம் கோமேதகம் பவளம் பச்சை வைடூரியம் நீலம் எனும் நவரத்தினங்களின் பெயரில் அமைந்த ஒன்பது காண்டங்களின் தொகுப்பாகும். இவற்றில் முதல் எட்டுக் காண்டங்களே கிடைத்துள்ளன. அவற்றிலும் எட்டாவது காண்டத்தின் முதல் படலம் மட்டுமே கிடைத்துள்ளது. இதன் இரண்டாவது படலமும் ஒன்பவதாவதுகாண்டமும் கிடைக்கவில்லை. இவை வீரமாமுனிவரின் மருத்துவப் புலமைக்கும் கவிப் புலமைக்கும் சான்றுகளாக அமைகின்றன. மற்ற பாடல்கள் கலிவெண்பா விருத்தம் கலி விருத்தம் ஆசிரிய விருத்தம் முடுகு விருத்தம் மடக்குத் தாழிசை கும்மி ஆகியவற்றால் பாடப்பட்டுள்ளன.

நவகாண்டத்தில் முதல் காண்டமான மாணிக்கக் காண்டத்தில் பற்பம் சுண்ணம் செந்தூரம் என்ற தலைப்புகளில் காணப்படும் 373 மருந்துகளால் 522க்கும் மேற்பட்ட நோய்கள் குணம் பெறுகின்றன. வைர காண்டத்தில் கிருதப்பாகப்படலம் எண்ணெய் பாகப்படலம் தைலப்பாகப்படலம் ஆகியவற்றின் கீழ் கூறப்பட்ட 27 மருந்துகளால் 125க்கும் மேற்பட்ட நோய்கள் குணம் பெறுகின்றன. மரகத காண்டத்தில் குளிகைப் பாகப்படலம் கட்டுவகைப்படலம் மாத்திரைவகைப்படலம் ஆகியவற்றின் கீழ் கூறப்பட்ட 20 வகை மருந்துகளால் 125 வகை நோய்கள் குணமாகின்றன. கோமேதகக் காண்டத்தில்

இன்று முனிவரின் மருந்துகளாகக் கருப்பு விணுசக்கரம் மேகரோக சஞ்சீவி சமய சஞ்சீவி சூரணம் மணப்பொடி பற்பொடி போன்றவை நடைமுறையில் பயன்படுத்தப்பட்டு வருவதை அறிய முடிகிறது.

இடம்பெறும் லேகியப் படலம் மெழுகுப் படலம் ஆகியவற்றில் கூறப்பட்ட 9 வகை மருந்துகளால் 160க்கும் மேற்பட்ட நோய்கள் குணமடைகின்றன. முத்துவகைக் காண்டத்தில் காணப்படும் குடிநீர்ப் படலம் குழம்புவகைப்படலம் சூரண பாகப்படலம் ஆகியவற்றில் கூறப்பட்டுள்ள 76 வகை மருந்துகள் 353க்கும் மேற்பட்ட நோய்கள் குணமாகும் விதம் அறியப்படுகிறது.

வீரமாமுனிவரின் மருத்துவ நூல்களில் குறிப்பாக நவகாண்டத்தில் பவளக் காண்டம் வைடூரியக் காண்டம் ஆகியவற்றில் அவர் ரோமாபுரியில் இருந்து வந்த கத்தோலிக்கக் குரு என்பதையும் சந்தா சாகிபுடன் நட்பு கொண்டிருந்ததையும் காப்பியம் முதலான பல நூல்கள் மட்டுமின்றி மருத்துவ நூல் இயற்றியதையும் இரசவாதக் கலையில் தேர்ந்த ஞானம் பெற்றிருந்தார் என்பதையும் அறிந்துகொள்ள முடிகிறது. இப்பதிவுகளின் வழியாக இவரது சமயப் பற்று நம்பிக்கை சமயப்பணி முதலான இவரது வாழ்க்கை வரலாற்று நிகழ்வுகள் வெளிப்படுவதுடன் இந்நூல்கள் இவரால் எழுதப்பட்டவை என்பதும் இவரது மருத்துவப் பணியும் உறுதி செய்யப் படுகின்றன. மேலும் இந்நூல்கள் அகத்தியர் முதலான பல தமிழ்ச் சித்தர்களின் நூல்களோடு மேலை நாட்டு மருத்துவ நுட்பத்துடன் படைக்கப் பட்டுள்ளன என்பதையும் உணர முடிகிறது.

மேலே கூறப்பட்டுள்ள இம்மருத்துவ நூல்கள் அனைத்திலும் முதலில் காப்புச் செய்யுளும் அடுத்து நூல் பற்றிய செய்தியும் இடம்பெற்றுள்ளன. நூல் பற்றிய செய்திகளில் மருந்து செய்பொருட்கள் செய் முறை குணமாகும் நோய்கள் பத்தியம் என்ற அமைப்பினைக் கொண்டுள்ளன. இவ்வகையில் பிற தமிழ் மருத்துவ நூல்களின் அமைப்பு முனிவரது நூல்களிலும் காணப்படுகிறது என்பது துலக்க மாகிறது.

மருந்து வகைகள்

சித்த மருத்துவத்தில் மருந்து வகைகளை அகமருந்து புறமருந்து என இருவகைப்படுத்துவர். அக மருந்து என்பது உள் (உட்கொள்ளும்) மருத்துவப் பிரிவைச் சார்ந்ததாகும். இம்மருந்துகளை 32 வழிமுறைகளில் தயாரிக்கின்றனர். வீரமாமுனிவர் தமது மருத்துவ நூல்களில் அக மருந்துகள் எனும் பிரிவில் குடிநீர் (18) சூரணம் (56) நெய் (11) லேகியம் (76) தைலம் (27) மாத்திரை (71) குழம்பு (9) மெழுகு (11) பதங்கம் (19) செந்தூரம் (48) பற்பம் (73) கட்டு (12) களங்கு (1) சுண்ணம் (34) ஆகிய 396 வகையான மருந்துகளைக் கூறியுள்ளார்.

அகமருந்து என்பது உள்மருந்து பிரிவினைச் சார்ந்ததாகும். இம்மருந்தினைத் தயாரிக்க 32 வழிகளைப் பின்பற்றுகின்றனர். சான்றாக சூரணம் தயாரிக்கும் முறையில் திப்பிலிச் சூரணம் குறித்துப் பின்வருமாறு கூறியுள்ளார்

"உலர்ந்த குப்பைமேனி யொரு நாங்கு திப்பிலியும்
நலந்தரவு னேர் சமனாய் நவின்றவற்றைக் கலந்தே
சூரணித்து நெய்யிற் றுணிந்துண்ணப் பவுத்திரம் போ
தரணியிலொப்பில்லை சாற்று" (நவ.கா.1725)

இப்பாடலில் உலர்ந்த குப்பை மேனி திப்பிலி இரண்டையும் சம அளவு கலந்து சூரணம் செய்து நெய்யில் கலந்துண்ண பவுத்திரம் எனும் நோய் குணமாகும் என்றும் இதற்கு ஒப்பான மருந்து எதுவுமில்லை என்றும் கூறுகின்றார். மிக எளிய முறையில் தயாரிக்கக் கூடிய இம்மருந்து மிகப்பெரிய நோயைக் குணப்படுத்தக் கூடியது என்று கூறி யுள்ளார். இத்தகைய முறையில் தயாரிக்கக் கூடிய 56 வகை சூரணங்களை முனிவர் தமது மருத்துவ நூல்களில் குறிப்பிட்டுள்ளார்.

புறமருந்து என்பவை உடலுக்கு வெளிப்புறமாகப் பயன்படுத்தப்படக் கூடியனவாகும். இவற்றை 32 முறைகளில் தயாரிக்கின்றனர். வீரமாமுனிவர் தமது நூலில் பற்று (10) கலிங்கம் (1) களிம்பு (3) சீலை (17) நீர் (11) பொடி (8) ஆகியவற்றின் அடிப்படையில் தயாரிக்கப்படக் கூடிய 63 புறமருந்துகளைத் தமது நூல்களில் குறிப்பிட்டுள்ளார். சான்றாக புறமருந்துகளில் ஒன்றான பற்று தயாரிக்கும்

முறையைப் பின்வருமாறு கூறுகிறார்.

"அபின்கடுகு பெருங்காய மறியவாளம் கரும்பவளம்
மருவுமெருக்கன் சாறெடுத்து வாட்டியரைத்து மேற்பூச
கருதுங்கடிகை பிளவை கட்டி கடியசூலைப் பவுத்திரமும்
ஆடியில் வீழ்ந்து மடிந்தேங்கி யகன்றேவழியும் பற்றாகுமே" (இர.வா.88)

என்னும் பாடல் வீக்கம் பிளவை முதலா னவற்றிற்கும் பற்றுத் தயாரிக்கும் முறையினைக் கூறியுள்ளது. அபின் கடுகு பெருங்காயம் நேர்வளம் கரும்பவளம் முதலானவற்றை எருக்கன் சாற்றினால் அரைத்துப் பூச பிளவைக் கட்டி முதலான புண்கள் அகன்றுவிடும் என்கிறது. இவ்வாறு பற்றுத் தயாரிப்பதற்கான மருத்துவப்படி முனிவரின் முறைகள் அமைந்துள்ளன என்பதற்கு இப்பாடல் சான்றாகிறது. இம்முறையில் தயாரிக்கக் கூடிய 10 வகையான பற்றுக்களைத் தமது நூல்களில் கூறியுள்ளார்.

சித்தர்கள் ஏக மூலிகை பிரயோகம் மாரணப் பிரயோகம் திராவகப் பிரயோகம் செயநீர்ப் பிரயோகம் முப்புப் பிரயோகம் எனும் ஐவகை முறைகளைப் பயன்படுத்தியுள்ளனர் பற்றுக்களைத் தமது நூல்களில் கூறியுள்ளார்.

ஏக மூலிகைப் பிரயோகம் என்பது சில சரக்கு களை ஐம்பூதக் கூட்டுறவின்படி மூலிகைகளை முறைப்படி சேர்த்து மருந்தாக முடித்தலாகும். (ஆனைவரி ஆனந்தன் சித்த மருத்துவ வரலாறு ப.167) என்று கூறப்படுகிறது. இம்முறையில் அமைந்த பச தீபாக்கினிச் சூரணம் என்ற மருந் தினை அகத்தியர் கூறியுள்ளார் (அக.வை.வ:137) இவரைப் பின்பற்றியே வீரமாமுனிவரும் பச முகச் சூரணம் (நவ.கா.1717 1720) எனும் மருந்தினை நவகாண்டத்தில் கூறியுள்ளார். பஞ் சசூதமெழுகு எனும் மருந்தினையும் இம்முறையில் கூறியுள்ளார்.

'மாரணப் பிரயோகம்' என்பது 'ஒரு சரக்கின் பகை நட்புச் சரக்குகளையறிந்து முதலில் சரக்கைப் பகைச் சரக்கால் மடித்து பின்பு நட்புச் சரக்கால் உயிர்ப்பித்து வன்மை கூட்டுகிறது' ஆகும். (ஆனை வரி ஆனந்தன் சி.மரு.வா.பக்.167) இம்மருந்துகளை முனிவர் நன்கறிந்துள்ளார் என்பதை இவரது 'அட்டலோக மாரண தினுசுகள்' என்பவற்றில் காணமுடிகிறது. இவற்றில் பாஷாண வகைகள் அவற்றைக் கொண்டு தயாரிக்கும் செந்தூரம் அவற்றின் சிறப்பு முதலியவற்றைக் குறிப்பிட்டுள்ளார். இப்பாஷாணங்களைக் கொண்டு மருந்து தயாரிக்கும் முன் அவற்றின் சத்ரு மித்ரு அதாவது நட்பு பகை சரக்குளை அறிந்து கொள்ள வேண்டும் என்றும் அவற்றின் பட்டியலையும் விளக்கியுள்ளார் (நவ. கா.2210 2211)

'திராவகப் பிரயோகம்' முறையில் தயாரித்தலை (நவ.கா.384 387) (நவ.கா.2204) ஆகிய பாடல்களில் கூறியுள்ளார். இதனைப் போல

'செயநீர்ப் பிரயோகம்' முறையில் தயாரித்லை சிப்பிச் செயநீர் (நவ.கா.30 33) துருசுசெயநீர் (நவ. கா.797 810)ஆகியவற்றில் கூறியுள்ளார்.

முப்புப் பிரயோகம் என்பது 'பூநீறு எனப்படும் ஓர் உப்பைச் சுண்ண வடிவாக்கி உபயோகிக்கும் முறையாகும்.' (குமாரசாமி கற்ப அவிழ்தம் சித்த மருத்துவ மாத இதழ் (செய்.1997 பக்.13) இம்முறையில் அகத்தியர் முப்புச் சூரணங்கள் தயாரிப்பதைக் கூறியுள்ளார். அகத்தியர் முப்புச் சூத்திரம் என்ற நூலும் உள்ளது. வீரமாமுனிவரும் முப்பு என்பது குறித்த தமது நூல்களில் விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். வாகடத் திரட்டு 2ஆம் பாகத்திலுள்ள முப்பு சூத்திரம் நவகாண்டத்தில் 8வது காண்டமாக வைடூரிய காண்டத்தில் சொர்ணப்பாகப்படலம் ஆகிய இரண்டு நூல் களிலும் முப்பு குறித்து விளக்கியுள்ளார்.

இவ்வாறு சித்தர்கள் கையாண்ட முறைகளின் அடிப்படையில் மருந்து தயாரிக்கும் முறையினை முனிவரும் கூறியுள்ளார் என்பதை மேற்கண்ட சான்றுகள் நிரூபிக்கின்றன.

முடிவுரை

சித்த மருத்துவம் என்பது இந்து சமயத்தவருக்குரியது எனக் கருதப்பட்ட காலத்தில் வீரமாமுனிவர் சித்த மருத்துவ நூல்களை ஆய்ந்தறிந்து பலநூல்களை இயற்றியதோடு பல மருந்துகளைத் தயாரித்து வழங்கியுள்ளார் என் பதைக் கள ஆய்வு மற்றும் பிற நேரடிச் சான்றுகள் வழியாக அறிய முடிந்தது.

சகோதரி தெரசிட்டா மற்றும் லூமின் பெல்லா ஆகியோர்களால் தொடங்கப்பட்ட வீரமா முனிவரின் மருத்துவமனைகள் அவ்விடங்களில் வழங்கப்படும் முனிவரின் சில மருந்துகள் மற்றும் மருத்துவர் ராஜகோபாலின் தகவல்கள் ஏலாக்குறிச்சி சாம்பலூர் முதலான முனிவரின் பணித்தலங்களில் கிடைத்த சான்றுகள் விளம்பரங் களில் வெளிவந்த முனிவரின் மருந்துகள் இவற்றுடன் முனிவரின் மருத்துவப் பணி குறித்த கருத்தரங்கம் கட்டுரைகள் ஆகிய அனைத்தும் முனிவர் மருத்துவ நூல்கள் இயற்றியதோடு மருந்து களையும் தயாரித்துள்ளார் என்பதை நிறுவுகின்றன.

இன்று முனிவரின் மருந்துகளாகக் கருப்பு விணுசக்கரம் மேகரோக சஞ்சீவி சமய சஞ்சீவி சூரணம் மணப்பொடி பற்பொடி போன்றவை நடைமுறையில் பயன்படுத்தப்பட்டு வருவதை அறிய முடிகிறது. இவற்றைத் தவிர முனிவரின் பிற மருந்துகளின் பயன்பாடுகள் குறித்து அறிய முடியவில்லை. முனிவரின் மருத்துவ நூல்களை ஆராய்ந்து அதன்படி மருந்துகள் தயாரிக்கச் சித்தமருத்துவர்களும் ஆராய்ச்சிக் கூடங்களும் முன்வந்தால் முனிவரது மருந்துகளின் சிறப்பை அனைவரும் அறிய முடியும். ●

திருவள்ளுவர் ஓர் ஆய்வு

'தமிழ்மாமணி' அறிவர்
சே.சுந்தரராசன் டி.லிட்.

'செய்யும் தொழிலைச் சீர்தூக்கிப் பார்த்தக்கால்
நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை' என்பது ஆன்றோர் வாக்கு.

மயிலாப்பூர் நெசவுத் தொழிலாளி திருவள்ளுவர் ஐயமில்லாமல் உலகத்தில் ஒரு பேரறிஞர். இந்தப் புகழ் தென்னிந்தியாவில் சிறப்பாகத் தமிழ்நாட்டிற்கு மட்டும் உரியதாகும். தமிழ்நாட்டில் இவர் ஒரு பெரிய சந்ததியைச் சேர்ந்தவர். இவர் வணங்கத் தகுந்த ஒரு துறவி. தமிழ் மக்களுக்கு வாழும் அறநெறியாகிய சட்டத்தைத் தந்தவர்.

எம். ஏரியல் என்பவர் புர்னாப் (Burnouf) என்பவருக்கு எழுதிய கடிதம் 1848 ஆம் ஆண்டு நவம்பர் – டிசம்பரில் வணிகச் செய்தித்தாளில் வெளியிடப்பட்டது. அந்தக் கடிதத்தில் 'திருவள்ளுவரின் தமிழ் இலக்கியப் பணி

> போப் அவர்கள் திருக்குறள் மலைப்பொழிவின் எதிரொலி என்கிறார். அருளுரை மலையில் எண்கோண வடிவில் அமைந்த ஓர் ஆலயம் உள்ளது. கலிலேயாக் கடலின் அருகில் அந்த ஆலயம் அழகாகக் காட்சி அளிக்கின்றது.

மிகவும் சிறந்தது' என்று குறிப்பிட்டுள்ளார். திருக்குறள் ஒரு தூய்மையானதும் உயர்ந்ததுமான மனித சிந்தனையின் வெளிப்பாடாகும். எல்லா வற்றுக்கும் மேலாக வியக்கத்தகுந்த உண்மை என்ன வெனில் திருவள்ளுவர் எழுதிய திருக்குறளில் தன்னைப் பற்றியோ தன் சமயத்தைப் பற்றியோ தன்னுடைய நம்பிக்கை பற்றியோ இல்லாமல் எல்லா மனித சமுதாயத்திற்கும் உரிய உண்மையான சிறந்த ஒழுக்க நெறிகளைப் பற்றிக் கூறியுள்ளார். திருவள்ளுவர் இன்றியமையாத சாரமான நிலையானவற்றைப் பிரித்தெடுத்து சுருக்கமாக அறத்தையும் உண்மையையும் குடும்ப வாழ்வுக்கும் சமூக வாழ்வுக்கும் தேவையான உயர்ந்த சிந்தனைக் கருத்துக்களைச் செய்யுள் வடிவில் எடுத்துக் கூறியுள் ளார். மிகப் பெரிய இறைத்தன்மை வாய்ந்த அறிவுக்கு எட்டாத இதனைச் சிந்தனை செய்தல் வேண்டும்.

ஜி.யூ. போப் ஐயர் மயிலாப்பூரில் கண்ட திருவள்ளுவரின் வீடு

'நான் மயிலாப்பூரில் *1840* ஆம் ஆண்டு ஒரு அருள் தொண்டராக என் வாழ்க்கையைத் தொடங்கினேன். திருவள்ளுவரின் வீடு மயிலாப்பூரில் இருந்தது. வீட்டின் சுற்றுப்புறம் அழகாக இருந்தது. என் நினைவில் அந்த இடம் என் மனதைக் கவரக்கூடியதாக விளங்கியது. அந்த இடத்தைச் சுற்றிலும் சென்று பார்த்தேன். மிகப் பெரிய தமிழ்க் கவிஞர் வாழ்ந்த அந்த இடம் ஒரு முக்கியமான தூண்டுதலைத் தந்தது. மயிலாப்பூர் நகரத்தில் ஒரு பழைய கோயிலைச் சுற்றிலும் தென்னந் தோப்புகளும் தோட்டங்களும் இருந்தன என்பது குறிப்பிடத்தக்கதாகும். அவற்றுள் மயில் களும் இருந்தன. அக்கோயில் அருகில் குளம் இருந்தது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஆற்றல் வாய்ந்த கவிஞர் திருவள்ளுவர் வாழ்ந்துள்ளார். இந்த இடத்திற்கு அருகில் வங்கக்கடல் இருக்கின்றது'. அந்தக் கடலின் அலைகளின் ஒலியை ஐயமில்லாமல் திருவள்ளுவர் விருப்பத்துடன் கேட்டிருத்தல் வேண்டும். *149* ஆம் குறட்பாவில் 'நலக்குரியர் யாரெனில் நாமநீர் வைப்பின்' என்று குறிப் பிட்டுள்ளமை நினைவு கூரத்தக்கதாகும் *(*Sacred Kural of Thiruvalluva Nainar Page: II*)*.

இந்தியாவில் தோமா

நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த மிகச் சிறந்த எழுத்தாளர்களாகிய தூய எப்பிராயீம் தூய கிரெகோரி நசியான்சென் தூய ஆம்ரோஸ் தூய ஜெரோம் ஆகியோர் தூய தோமா இந்தியாவில் செயலாற்றினார் என்று உறுதியாகக் கூறியுள்ளனர்.

கேரளாவில் உள்ள சிரியன் கிறித்தவர்கள் தங்கள் முன்னோர்கள் பரம்பரை பரம்பரையாகத் திருச்சபைகளாகவும் குடும்பங்களாகவும் உள்ள யாவரும் தோமாவினால் கிறித்தவரானவர்கள் ஆவார். இந்தத் தலைமுறையினரின் செய்தியின்படி தோமா முதலில் கொடுங்கலூர் *(*Cranganore*)* என்ற இடத்திற்கு முதலாம் நூற்றாண்டில் கி.பி. *52* ஆம் ஆண்டு வந்தார். அங்கும் அதன் சுற்றுப்புறங்களிலும் கிறித்தவச் சமூகத்தை உருவாக்கினார். நிராணம் *(*Niranam*)* கொல்லம் *(*Quillon*)* பாளயூர் *(*Palaiyur*)* முதலிய இடங்களிலும் கிறித்துவச் சபையைத் தோன்றச் செய்தார் *(*Santhom cathedral Church, Basilica, Chennai Page 3*)*.

தமிழ்நாட்டில் தோமா

சென்னையில் தோமா உயர்வகுப்பினர்

பலரைக் கிறித்தவராக்கினார் என்ற காரணத்திற்காகத் தூய தோமா மலையில் ஒருவர் அவரைப் பின்புறமிருந்து ஈட்டியால் குத்தி கி.பி. 72 ஆம் ஆண்டு கொன்றார். இந்த உருவத்தின் காட்சியை மலையின் உச்சியில் காணலாம். தோமாவுடன் தொடர்புடைய இரண்டு தூய்மையான இடங்கள் சென்னையில் உள்ளன. ஒன்று தூய தோமா மலை. மற்றொன்று சைதாப்பேட்டை மறைமலை பாலத்திற்கு அருகில் உள்ள குகை. அந்த இடம் பாரம்பரியத்தின் செய்தியின்படி தோமா மறைந்து ஜெபித்த இடம் (Santhom cathedral Church, Basilica, Chennai Page 4) தூய தோமாவின் உடல் சாந்தோம் பேராலயத்தின் உள் அடக்கம் செய்யப்பட்டுள்ளதைக் காணலாம். கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் கல்வெட்டு இங்கு உள்ளது.

ஏலேலோ சிங்கருடன் தோமா திருவள்ளுவரைச் சந்தித்தல்

இலங்கையைச் சேர்ந்த ஏலேலோ சிங்கர் மரக்கலங்களில் சென்று கடல் கடந்து வாணிகம் செய்யும் புகழ் பெற்ற வணிகராவார். திருவள்ளு வரை ஆதரித்த வள்ளல் ஆவார். திருவள்ளுவருக்கு மிகவும் விருப்பமுடையவர் ஆனார். திருவள்ளுவரைத் தன் ஆசிரியராக ஏற்றுக் கொண்டார். மயிலாப்பூர் வந்த தோமா ஏலேலோ சிங்கருடன் மயிலாப்பூரில் வாழ்ந்த திருவள்ளுவரைச் சந்தித்திருக்கலாம் என்று கருதப்படுகின்றது. திருவள்ளுவர் தோமாவின் நம்பிக்கையைத் தழுவியவர் என்று கூறப்படுகின்றது. ஏலேலோ சிங்கர் வேண்டிக் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவருடைய மகனுக்குப் பயன்படுமாறு திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார் என்றும் கூறப்படுகிறது (Studies in Tamil Literature and History by V.R.Ramachandra Dikshitar Page 128,129,136).

திருவள்ளுவர் வாழ்ந்த காலம்

இரட்டை காப்பியங்கள் என்று அழைக்கப் படுகின்ற சிலப்பதிகாரம் இளங்கோவடிகளாலும் மணிமேகலை சீத்தலைச் சாத்தனாராலும் எழுதப் பட்டன. இவை இரண்டும் இளங்கோவடிகளின் அண்ணன் செங்குட்டுவன் சேர நாட்டை ஆட்சி செய்த காலத்தில் இயற்றப்பட்டவையாகும். சேரன் செங்குட்டுவன் ஆட்சிக்காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு ஆகும்.

சீத்தலைச் சாத்தனார் தான் இயற்றிய மணிமேகலையில்

'பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றவப்
பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்' என்று

எழுதியுள்ளார். (மணிமேகலை காதை 22 : 3,4 வரி).

'தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யனெப் பெய்யும் மழை' (குறள் 55) என்ற

குறளை மேற்கோளாக ஆண்டுள்ளார்.

இந்த இரட்டைக் காப்பியங்கள் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் சேரன் செங்குட்டுவன் ஆட்சிக் காலத்தில் எழுதப்பட்டவை. எனவே திருக்குறள் கி.பி. முதலாம் நூற்றாண்டில் எழுதப்பட்டது என்று கூறுவதில் தவறு இல்லை.

திருக்குறள் திருமறை மலைப்பொழிவின் எதிரொலி

டாக்டர் ஜி.யூ. போப் அவர்கள் திருக்குறள் மலைப்பொழிவின் எதிரொலி என்கிறார். அருளுரை மலையில் எண்கோண வடிவில் அமைந்த ஓர் ஆலயம் உள்ளது. கலிலேயாக் கடலின் அருகில் அந்த ஆலயம் அழகாகக் காட்சி அளிக்கின்றது. அங்கு இருந்த ஒரு வயது முதிர்ந்த அம்மையார் 'எண்கோண வடிவ இந்த ஆலயம் இயேசு பெருமான் மலைப்பொழிவில் கூறிய எளிமை துயரம் சாந்தம் நீதியின்மேல் பசி தாகம் இரக்கம் இதயத் தூய்மை சமாதானம் செய்தல் நீதியினிமித்தம் துன்பப்படுதல் ஆகிய (மத்தேயு 5:310) எட்டு பண்புகளை எடுத்துக்காட்டுகின்றது' என்றார்.

திருக்குறளில் கடவுள் வாழ்த்து ஒன்பதாவது குறளில்

'கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை' (குறள் 9)

என்று கூறப்பட்டுள்ளது.

எட்டுப் பண்புகளையுடைய இறைவனின் திரு வடிகளை வணங்காவிட்டால் அவருக்கு கொள்கையுமில்லை மெய் வாய் கண் மூக்கு செவி ஆகிய ஐந்து பொறிகள் இருந்தும் பயன் இல்லை. பண்பும் இல்லை என்று திருவள்ளுவர் கூறியுள்ளார்

திருவள்ளுவர் உலகிலுள்ள எல்லாச் சமயத் தவர்களுக்கும் பொதுவான தூய்மையான அற நெறிகளையே கூறியுள்ளார். கல்லாடனார் என்ற புலவர் திருவள்ளுவ மாலையில்

'நன்றென எப்பாலவரும் இயைபவே வள்ளுவனார்
முப்பால் மொழிந்த மொழி'

என்று புகழ்ந்துள்ளார். திருவள்ளுவரின் இயற்பெயர் தெரியவில்லை. திருவள்ளுவரைப் பற்றிய பல கதைகள் வழங்கப்படுகின்றன.

ஆய்வாளர்கள் அவற்றை ஏற்றுக் கொள்வதில்லை. திருவள்ளுவர் பல நூல்களைக் கற்றவர். இல்லற வாழ்க்கையைச் செம்மையாக நடத்தி மகிழ்ந்தவர். அரசியலில் தேர்ந்த அறிவு பெற்றவர். நீண்ட நாள் அமைதியாக வாழ்ந்தவர். பொதுமை நாட்டம் உடையவர். அறத்தில் அசையாத நம்பிக்கை உடையவர். சமய வேடங்களையும் மூட நம்பிக்கைகளையும் புறக்கணித்தவர் முதலான குறிப்புகள் அவருடைய நூலால் தெரிகின்றன' என்று டாக்டர் மு. வரதராசனார் கூறியுள்ளார். ●

அந்தக் கியூ...

முனைவர் **ஸ்வீட்லின் பிரபாகரன்**

தமிழ்ப் பதிப்பாசிரியர் (ஓய்வு), சி.எல்.எஸ்.

கியூவில் நின்றிருந்த கோயில்பிள்ளைக்கு தலை சுற்றியது. வாந்தி வருவது போலுமிருந்தது. முன்னால் பார்த்தார். நீண்ட கியூ இவர் எப்படியும் ஐம்பது அல்லது அறுபதாவதாக நின்று கொண்டிருப்பார் என்பது அவரது கணிப்பு. ஐயோ... இன்னும் பேங்குக்குள் போய் பணம் வாங்க குறைந்தது இரண்டு மணி நேரமாவது ஆகும். காலையிலிருந்து பச்சைத் தண்ணி கூடக் குடிக்கவில்லை சரி அதோ பார்க்கும் தூரத்தில் உள்ள டீக்கடைக்குள் செல்லலாம் என அங்கு பார்த்தபோது அங்கும் கூட்டம். அப்போது டோக்கன் வழங்கப்பட்டது. இவரின் நம்பர் ஐம்பத்தெட்டு. இவர் கணித்த கணிப்பு சரியாகத்தான் இருந்தது. டோக்கனை பத்திரப்படுத்திக்கொண்டு டீக்கடைக்குச் சென்றார் கோயில்பிள்ளை.

அங்கே... பெரிய பெரிய பாட்டிலில் பிஸ்கட் வைக்கப்பட்டிருக்கும். அதில் இரண்டு வாங்கி சாப்பிட்டு சூடா ஒரு காபி குடிக்கலாம் என நினைத்துச் சென்றவருக்கு ஏமாற்றமாயிருந்தது. அத்தனை பாட்டில்களும் காலியாக இருந்தன. ஒருவேளை கடைக்காரன் உள்ளே வைத்திருப்பான் போலும் என்ற நப்பாசையுடன் ரெண்டு பிஸ்கட் கொடுப்பா என்றதும் அவனும் சார் இந்த பாங்கு பிராப்ளம் வந்ததிலிருந்து எத்தனை பிஸ்கட் வாங்கினாலும் சீக்கிரமாக விற்றுவிடுகிறது. நாளையிலிருந்து இன்னும் கூடக் கொஞ்சம் வாங்கி வைக்கணும் என்று சொல்ல சரி சூடா ஒரு கப் காப்பி கொடுப்பா என்று சொல்லி முடிக்கும் முன் அவன் தயாராய் வைத்திருந்த காபியை வாங்கிக் குடித்தார் கோயில்பிள்ளை. அவர் சொன்ன 'சூடா' என்ற வார்த்தைக்கு மாத்திரமே அந்தக் காப்பியில் அர்த்தம் இருந்தது. என்ன செய்ய இந்த நேரத்துக்கு இந்தக் காபியாவது கிடைச்சதே திருப்திபட்டுக் கொண்டு காபிக்கான தொகையைக் கொடுத்துவிட்டு கியூவில் தான் விட்டு வந்த இடத்திற்குச் சென்றார் கோயில்பிள்ளை.

அவர் விட்டு வந்த இடத்தில் அவரை யாரும் நுழைய விடவில்லை. இவ்வளவு நேரமா நாங்க கால்கடுக்க நிற்கிறோம். எங்கேயோ போய்விட்டு வந்து இப்போ வந்தா போங்க பின்னாலே என பிடித்துத் தள்ளாத குறையாகச் சொன்னதும் அவர் இருந்த நிலைமையில் ஒன்றுமே பேசாமல் திரும்ப கடைசியில் போய் நின்று கொண்டார். நாட்டில் கொஞ்சம் நஞ்சம் இருந்த மனிதாபிமானமும் காற்றில் பறந்து கொண்டிருந்தது என அந்நேரத்தில் அவரால் நினைக்கத்தான் முடிந்தது.

பேங்க் வாட்ச்மேன் அன்று டோக்கன்படி உள்ளே விடாமல் வரிசைப்படியே விட்டான். கோயில் பிள்ளையின் முறை வந்தபொழுது மணி இரண்டரை ஆகிவிட்டிருந்தது. உள்ளே சென்று பணம் பட்டுவாடா செய்யும் இடத்திற்கு வந்தார். அங்கே அவரின் கணக்கில் பணம் இல்லை. என்ன சார் நீங்க இருக்கிற வேலையில் பணம் இருப்பு

சார் இந்த பேங்க் பிராப்ளம் வந்ததிலிருந்து எத்தனை பிஸ்கட் வாங்கினாலும் சீக்கிரமாக விற்றுவிடுகிறது. நாளையிலிருந்து இன்னும் கூடக் கொஞ்சம் வாங்கி வைக்கணும்

இல்லாமலேயே எடுக்க வர்றீங்க போங்க சார் அடுத்து யார் வாங்க என்று சொல்ல

சார் சார் பிளீஸ் கொஞ்சம் பார்த்துச் சொல்லுங்களேன் இரண்டு மூணு மாசமா நான் என் பென்சன் பணத்தை எடுக்கவே இல்லை என கெஞ்சாத குறையாக இவர் கேட்க அங்கிருந்தவர்.. இவரின் கணக்கில் மினி பேலன்ஸ் போட்டுப் பார்க்க நேற்று வரைக்கும் பணம் எடுக்கப்பட்டு இவர் கணக்கில் ஆயிரம் ரூபாய் மட்டுமே மீதம் இருந்ததைக் காட்ட துவண்டு போனார் கோயில்பிள்ளை. இவ்வளவு நேரமா காத்திருந்ததற்குப் பயன்தான் என்ன?

இது எப்படி என் பணத்தை யார் எடுத்திருப்பார்கள் மகனா? மகளா..? இவ்விருவருக்கும் மட்டும்தானே என்னோட பாஸ்வேர்டு தெரியும் சே இருக்காது. அவர்கள் என் பிள்ளைகள் என்னிடம் கேட்காமல் என் பணத்தை நிச்சயமாக எடுத்திருக்க மாட்டாங்க.

ஒருவழியாய் பஸ் ஏறி வீடு வந்து சேர்ந்தார். அன்று மகன் ஏனோ அந்த நேரத்தில் வீட்டில் இருந்தார். என்னப்பா நீங்க நேரத்தோடு வந்து சாப்பிட்டுப் போகக்கூடாது உங்களுக்காக இவ்வளவு நேரம் காத்திருக்க வேண்டியதாய்ப் போய்விட்டது. நாங்க வெளியே கிளம்பறோம். இப்பவே இவ்வளவு லேட்டாயிடுச்சி. இனி கடைக்குப் போயி எல்லாவற்றையும் வாங்கி வீடு வந்து சேர மணி பத்தாகிவிடும் போலிருக்கு.

இல்லப்பா நாளைக்கு உங்களுக்கு கல்யாண நாள் வருதுல்ல. அதனால் பேங்குக்குப் போய் பணத்தை எடுத்து பரிசுப் பொருள் வாங்கலான்னு போனேம்பா ஆனா என்னோட அக்கவுண்ட்ல வெறும் ஆயிரம் ரூபாய் மட்டும்தான் இருக்கு எப்படிப்பா....

என்னப்பா நீங்க வீட்ல எவ்வளவு செலவாகுதுன்னு உங்களுக்குத் தெரியுமா? மருந்து மாத்திரை வீட்டு செலவு படிப்புச் செலவுன்னு ஏகமா செலவாகுது. நான்தான் உங்க பணத்தை எடுத்தேன்.

நீ எடுக்க வேண்டான்னு சொல்லலை.. ஆனா என்கிட்ட ஒரு வார்த்தை சொல்லியிருந்தா இப்போ நான் காலையிலிருந்து கியூவில நின்று கஷ்டப்படாம இருந்திருப்பேன். அதற்காகச் சொன்னேன்.

ஒருநாள் நீங்க போய் நின்றதற்கு கஷ்டம் என்கிறீங்க. நான் தினமும் நின்னு பணம் எடுக்கறேன். நான் எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பேன்.

சரிப்பா நேரமாகுது. கடைக்குப் போயிட்டு வாங்க. கதவை வேகமாய்த் தாளிட்டுவிட்டு அவர்கள் கடந்து சென்றதும் டேபிளில் சில்லிட்டுப் போயிருந்த அந்த சாதத்தைப் போட்டு சாப்பிட்டார் கோயில்பிள்ளை. கடந்த காலம் அவரின் மனைவி இவரை உபசரித்ததை நினைத்தால் ஒரு கவளம் சோறு கூட வாய்க்குள் போகாது. கஷ்டப்பட்டு அந்நினைவலைகளிலிருந்து விடுபட்டு வேகமாய் வெளிவந்தார். ஆனாலும் அவரால் சரியாகச் சாப்பிட முடியவில்லை.

நியூஸ் பேப்பரை எடுத்து வாசித்தார். அங்கே கொட்டை எழுத்துக்களில் தமிழ் எழுத்தாளர்களுக்கு விருது என்று பாடப்பட்டிருந்தது. மேலும் படித்தார். எழுத்தாளர் கோயில்பிள்ளை அவர்களை இவ்வாண்டின் பரிசுக்குரியவர் என்று போடப்பட்டிருந்தது. அதைப் படித்தவர் என் பெயரைக் கொண்டு இன்னொரு எழுத்தாளர் இருக்கிறார் போலும். வாங்கட்டும் யாராவது ஒருவருக்கு பரிசு கிடைத்தால் சரி என்று நினைத்து பேப்பரை மடித்து வைத்தார். அப்பொழுது போன் மணி அடித்தது.

போனை எடுத்து காதில் வைத்தார். எதிர்முனையில் ஐயா வாழ்த்துக்கள். என் பெயர் எட்வின். இப்போ நான் அமெரிக்காவில் தமிழ் கலாச்சார மையத்தில் எனக்கொரு தனி இடத்தை தக்க வைத்துக் கொள்ள காரணகர்த்தா நீங்கதான். ஒருநாள் தற்செயலாய் பேப்பர் விளம்பரத்தை ஈ மெயிலில் பார்த்தேன். சிறந்த எழுத்தாளர்களுக்கு பரிசு என்ற தலைப்பில் இதற்காகப் பெயரை பரிந்துரை செய்பவர்களின் விபரம் எழுத்தாளர் பெயரைக் குறிப்பிடும்படியாய் செய்தியை வாசித்தேன். உடனே நீங்கள்தான் என் நினைவிற்கு வந்தீர்கள். உடனே தங்களைப் பற்றிய குறிப்புகளைச் சேகரித்து தங்களுக்குத் தெரியாமலேயே அந்த இடத்திற்கு அனுப்பி வைத்தேன். அவர்களும் தங்களுக்கு முதற் பரிசை அறிவித்திருக்கிறார்கள். அதற்குத் தகுதியானவர் நீங்கள்தான். பரிசு கொடுக்கும் நாளன்று நான் அங்கிருப்பேன். நேரில் சந்திக்கலாம் என்று சொல்லி போனை வைத்துவிட்டார்.

கோயில்பிள்ளைக்கு இன்ப அதிர்ச்சி. எனக்கா எனக்கே எனக்கா நம்ப முடியவில்லையே. என் மனைவி இருக்கும்பொழுது பேப்பரைப் படித்துவிட்டு அடிக்கடி சொல்வா. இந்தப் பரிசுக்குத் தகுதியானவர் நீங்கதான்னு ஆனா அவ இருக்கும்பொழுது நான் இதைப் பற்றி யோசிச்சதே இல்லை. ஆனா இப்போ நினையாத நேரத்தில் இப்பரிசு கிடைத்திருக்கிறது. அவர் கண்கள் கலங்கின. இந்த சந்தோஷமான செய்தியைப் பகிர்ந்து கொள்ள நீ என்னோடே இல்லையேம்மா..

அப்பொழுது வாயில் மணி அடிக்கும் சத்தம் கேட்டு போய்க் கதவைத் திறந்தார். மகனின் குடும்பம். என்னப்பா சீக்கிரமா வந்திட்டீங்க கடைக்குப் போகலை?

இல்லப்பா... மாலை செய்தித்தாளில் உங்களைப் பற்றிய செய்தியைப் பார்த்ததும் நேரே வீட்டுக்கு வந்துட்டோம்ப்பா. இன்னொரு நாள் கடைக்குப் போயிகிடலாம் அப்பா அப்பா உங்களுக்கு ஐந்து லட்சம் பரிசு கிடைக்கப் போகுதப்பா. வாசலில் மகளும் குடும்பமாய் வந்துவிட அனைவர் முகத்திலும் மகிழ்ச்சி. அப்பா அப்பா இந்தப் பரிசு பற்றி உங்களுக்கு முன்னமேயே தெரியுமா? அந்தப் பணத்தை நீங்க என்ன செய்ய போறீங்கப்பா?

எனக்கே இப்போதான் தெரியும்மா. அந்தப் பணம் எல்லாம் உங்களுக்குத்தாம்மா. ஆனா அதை எத்தனை நாள் கியூவில் நின்னு எடுக்கப் போறீங்கன்னுதான் எனக்குத் தெரியல...

“விவிலியமும் ஆத்திசூடியும்”

முனைவர் எஸ்.ஷீலா ஜெயகுமாரி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
ஊரீசு கல்லூரி, வேலூர்-1.

கிறிஸ்தவர்களுக்குப் புனித நூல் விவிலியம். அப்புனித நூல் பழைய ஏற்பாடு புதிய ஏற்பாடு என்னும் இரு பிரிவுகளைக் கொண்டது. பழைய ஏற்பாடு எபிரேய மொழியிலும் புதிய ஏற்பாடு கிரேக்கமொழியிலும் உருவானது.

எபிரேய மொழி வலது பக்கத்திலிருந்து இடதுபக்கமாக எழுதப்படுவது. இம்மொழியில் உயிர் எழுத்துகளின் வடிவம் இல்லை. வெறும் மெய்யெழுத்து வடிவங்களே. எபிரேய மொழியில் 22 மெய்யெழுத்துகள் உள்ளன. பின்னர் மசோரேடீஸ் என்பவரால் உயிரெழுத்து அடையாளங்கள் இடப்பட்டன. கி.பி. 500 – 900 வரையில் இயங்கிவந்த மசோரேடீஸ் குழுவினர் சிறந்த உயிரெழுத்து உச்சரிப்புக் குறியீடுகளைச் சேர்த்தனர். புதியஏற்பாடு இந்தோ ஐரோப்பிய குடும்பத்தைச் சார்ந்தது என்பர் கிரேக்கரை ‘யவனர்’ என்றும் கிரேக்க மொழியை ‘யவனமொழி’ என்றும் தமிழ் இலக்கியம் குறிப்பிடும்.

கிரேக்க மொழியில் 24 எழுத்துக்கள் உண்டு. இவற்றில் உயிர் எழுத்துக்கள் 7 மெய்யெழுத்துக்கள் 17. ஆங்கில மொழி போல பெரிய எழுத்துகளும் சிறிய எழுத்துகளும் உண்டு. முதல் எழுத்தின் உச்சரிப்பு அல்பா கடைசி எழுத்தின் உச்சரிப்பு ஒமெகா என்பதாகும் (இரா. ஆசைத்தம்பி (ப.ஆ.) இணைவசன வேதாகமம் பக். 1280–81)

தமிழ் அரிச்சுவடியின் அ ஆ எனத் தொடங்கும் எழுத்துகளை முதலாகக் கொண்டு வரிசைப்படி “அறசெய விரும்பு” “ஆறுவது சினம்” என ஔவையார் பாடினார். விவிலிய மூல மொழிகளுள் ஒன்று எபிரேய மொழி. அம்மொழி அரிச்சுவடி 22 எழுத்துக்களைக் கொண்டது.

தமிழில் அகரவரிசைப்படி ஔவையார் ஆத்திசூடி

பாடியிருப்பதைப் போலவே எபிரேயக் கவிஞர்களில் சிலர் தங்களது எபிரேய மொழி எழுத்துகளின் வரிசைப்படி கவிதைகளைப் புனைந்துள்ளனர். எடுத்துக்காட்டாக சங்கீதம் 119. இதில் 8 பிரிவுகள் உள்ளன. ஒவ்வொரு பிரிவுக்கும் 8 வசனங்கள். முதற்பிரிவு 18 வசனமும் இரண்டாம் பிரிவு 9–16 வசனம் என 22 பிரிவுகள் உள்ளன. ஒவ்வொரு பிரிவிலும் எபிரேய எழுத்துகளில் ஓர் எழுத்தை முதலாகக் கொண்ட எட்டு வசனங்கள் இருக்கும். அதாவது எபிரேய எழுத்தின் முதல் எழுத்தைக் கொண்டு முதல் எட்டுவசனம். அப்படியே ஒவ்வொரு பிரிவும் வரிசைப்படி ஒவ்வோர் எழுத்தை அகரவரிசைப்படி தொடர்ந்துள்ளன.

தமிழ் ஆத்திசூடி போலவே மேலே குறிப்பிட்ட எபிரேயக் கவிதை அமைப்பைப் பார்க்கும் போது எல்லாக் காலக் கவிஞர்களும் எல்லாநாட்டுக் கவிஞர்களும் ஒன்று போலவே படைப்பு உத்திகளைக் கையாண் டுள்ளனர் என்பது தெளி வாகிறது. மேலேகுறிப்பிட்ட 119 ஆம் சங்கீதம் போலவே சங்கீதங்கள் 25,34 புலம்பல் 1,2,4,5 ஆகிய அதிகாரங்களும் அகரவரிசை அமைப்பினைக் கொண்டுள்ளது.

விவிலியப் பழைய ஏற்பாட்டுப் பகுதிகள் கி.மு. காலத்தில் எழுதப் பட்டவை. ஆத்திசூடி கி.பி. காலத்தில் வாழ்ந்த ஔவையாரால் பாடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

விவிலியத்தைப் பின்பற்றிக் கிறிஸ்தவத் தமிழ் இலக்கியத்தில் ஒரேஒரு ஆத்திசூடி மட்டுமே எழுந்துள்ளது.

அதன் பெயர் 'புத்துலக ஆத்திசூடி'. இதன் ஆசிரியர் தமிழ்க்கனல் தேவராசன் என்பார் வேலூர் ஊரீசு கல்லூரியின் முன்னாள் தமிழ்ப் பேராசிரியர். "நல்வழி காட்டுதல்தான் ஆத்திசூடிகளின் நோக்கம் எனில் நல்வழிகாட்டியோரில் 'நானே வழி'என்ற ஏசுவுக்கு நிகரானவர் யார்? அவர்தம் அமுத மொழிகளைக் கொண்ட ஆத்திசூடி ஏன் இன்னும் எழவில்லை என்று விவிலியம் படித்து விட்டு ஆத்திசூடியையும் படித்தோர் கேட்டு நிற்பார்கள். அவ்வாறு யாருக்கும் கேட்கத் தோன்றாவிடினும் நாம் நம் கடமையுணர்ந்து ஓர் ஆத்திசூடியைப் படைத்து அளிக்கிறோம்" என்பது அந்நூலாசிரியரின் வாக்கு (ப.ச. ஏசுதாசன் (ப.ஆ) தமிழ்க் கிறித்தவ இலக்கிய வகைகள் தொகுதி 1 ப. 149)

ஆத்திசூடி அமைப்பு

ஆத்திசூடி கீழ்க்காணும் அமைப்பினைக் கொண்டது:

அகரவரிசையில் அமைவது
அடிக்கு இரண்டுசீர்களால் ஆனது
கட்டளைப் பொருளில் வருவது
அந்தந்த அடியிலேயே பொருள் முடிப்பைக் கொண்டது.

புத்துலக ஆத்திசூடி அகரவரிசையிலும் குறளடியானும் பெரும்பாலும் கட்டளைப் பொருளினும் அமைந்துள்ளது. விவிலிய வசனங்களும் மொழித்தூய்மையும் கொண்டிருப்பது இதன் தனிச் சிறப்பு. அன்பில் தொடங்கி வையத்தில் நிறைவுபெறுகிறது. இந்த ஆத்திசூடியின் மொத்தத் தொடர்களின் எண்ணிக்கை 86.

அன்பே உயர்வு
ஆற்றல் சேர்த்திடு
இளமாலை விளையாடு
ஈனம் சோர்வு
உண்மைக்குத் திரையிடேல்
ஊமைக்காய்ப் பேசு
எதனினும் பணிதல்மேல்
ஏர்பிடித்தான் பின்னோக்கான்
ஐயம் கேட்டறி
ஒழுங்கமை இருப்பிடம்
ஓவியம்போல் எழுது
ஔவியம் என்புருக்குநோய்

என உயிர் எழுத்துகளால் தொடங்கி உயிர்மெய் எழுத்துகளால் தொடர்ந்துமுடிகிறது.

விவிலிய ஒளியில் புத்துலக ஆத்திசூடி

விவிலியம் கிறிஸ்தவத் தமிழ் இலக்கியத்தின் தாய். விவிலிய வசனங்களால் எழுதப்பட்ட பாடல்களே பக்திப் பாடல்கள் எனப் போற்றப் பட்டன. கிறிஸ்தவக் கீர்த்தனையில் 'தேவப்பிதா என்றன் மேய்ப்பனல்லோ' 'அன்பே பிரதானம்' 'எனக்கொத்தாசை வரும் உயர்பருவதம்' போன்ற பாடல்கள் முழுக்க முழுக்க விவிலிய வசனங்களால் உருவானபாடல்கள். புத்துலக ஆத்திசூடி ஆசிரியரும்

ஊமைக்காய் பேசு (நீதி. 31:5)
ஏர்பிடித்தான் பின்னோக்கான் (லூக.; 9:62)
ஔவியம்என் புருக்குநோய் (நீதி. 14:30)



விவிலியத்தில் இதே அமைப்பு இருப்பது மிகுந்த வியப்புக்கு உரியதாய் உள்ளது. விவிலியத்தின் முதல் நூல் ஆதியாகமம் என்பதாகும். அந்நூல் ஆதியிலே எனத் தொடங்குவதால் அச்சொல் நூலுக்குப் பெயராக இடப்பட்டுள்ளது.

கல்மேல் வீடெடு (மத். 7:24)
கோவுக்கும் வரிகொடு (மத். 22: 21)
சோர்வின்றி நன்மைசெய் (2தெச. 3:13)
நீர்சே தமாக்கேல் (லூக். 6:12)
பழாமரம் வெட்டுறும் (மத். 7:19)
பெறுதலின் தருதல்மேல் (அப். 20:15)
வரப்பிலை மன்னிக்க (மத். 18:22)

ஆகிய 10 தொடர்களில் விவிலிய வசனங்களைக் காட்டுகிறார்.

இவற்றுள் 'நீர்சே தமாக்கேல்'என்பது மிகுந்த சிறப்புக்குரிய தொடராகும். ஏசு கற்பித்த இறை வேண்டலில் எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும் (மத் 6:11) என்பதொரு வேண்டலாகும். இதில் உணவு மட்டுமல்லாது எங்களுக்கு வேண்டிய தண்ணீர் உடல் நலம் பாதுகாப்பு முதலியவற்றைத் தாரும் என்பது முழுமை பெற்ற இறை வேண்டலாகும். அதுபோலத்தான் நீர்சேதமாக்கேல் என்னும் தொடர். ஏசு கிறிஸ்து மக்கள் மீதுமனதுருக்கம் கொண்டு *5* அப்பம் *2* மீனை இறை வேண்டல் வழி பெருகச்செய்தார். *5000* பேர் உண்டு மீதியாயிருந்தவற்றைச் சேதமாக்காமல் சேர்த்துவையுங்கள் என்றார். உணவைச் சேதமாக்காதீர் என்றதனால் நீரையும் சேதமாக்காதீர் என்று புத்துலக ஆத்திசூடி ஆசிரியர் உரையில் கோடலாகும் என்பதனைத் தக்க இடத்தில் பயன்படுத்துகிறார்.

பொதுமை நோக்கில் புத்துலக ஆத்திசூடி

புத்துலக ஆத்திசூடியில் ஆசிரியர் தொடர்கள் பலவற்றைப் பொதுமை நோக்கில் படைக்கிறார். அவற்றுள் ஒருதொடர் நெல்லிக்கு இருசுவை. நெல்லிக் காய் உண்டால் முதலில் துவர்க்கும் பின்னர் தண்ணீர் குடித்தால் இனிக்கும். இதனை மனத்துள் கொண்ட ஆசிரியர் பெற்றோர் பெரியோர் சொல் முதலில் கசக்கலாம் ஆனால் பிறகு நலம் பயக்கும். இது பிறிதுமொழிதல் என்னும் அணியாகும்.

புத்துலக ஆத்திசூடியில் 'தோட்டம் போடு' என்றதொரு தொடர் வருகிறது. 'தோ' என்ற எழுத்தைக் கொண்டு ஒரு தொடர் எழுத வேண்டும் அதற்காக 'தோண்டு குழியை' என்றோ 'தோசை வட்டம்' என்றோ எழுதி அந்த இடத்தை நிரப்பாமல் மாணவன் வளர்ச்சிக்கு ஏற்ப தோட்டம் போடு எனக் கட்டளையிட்டுப் புத்துலகம் உருவாக்கத்திற்கு அழைப்புவிடுக்கிறார் ஆசிரியர்.

தமிழில் ஔவையார் ஆத்திசூடியைப் பாடும் போது கடவுள் வாழ்த்தில் ஆத்திசூடி அமர்ந்த தேவனை என்றும் அதேபோல கொன்றை வேந்தன் பாடும் போதும் கடவுள் வாழ்த்தில் கொன்றை வேந்தன் என்றும் குறிப்பிட்டு அத்தொடர்களையே நூலுக்குப் பெயராக இட்டுள்ளார்.

விவிலியத்தில் இதே அமைப்பு இருப்பது மிகுந்த வியப்புக்கு உரியதாய் உள்ளது. விவிலியத்தின் முதல் நூல் ஆதியாகமம் என்பதாகும். அந்நூல் ஆதியிலே எனத் தொடங்குவதால் அச்சொல்லை நூலுக்குப் பெயராக இடப்பட்டுள்ளது. அவ்வாறே 'புலம்பல்' என்றநூலிலும் 'ஐயோ' என முதல் சொல் அமைந்துள்ளது.

எபிரேயக் கவிஞர் நூலின் முதற் சொல்லையே நூலுக்குப் பெயராக அமைத்துள்ளனர். ஔவையாரும் அவ்வாறே தத்தம் நூலுக்கு முதலிருச் சீர்களையே நூல்களுக்குப் பெயரிட்டுள்ளார். கிறிஸ்தவ ஆத்திசூடிக் கவிஞரும் கடவுட் காப்புச் செய்யுளில் வருகின்ற 'புத்துலக ஆத்திசூடி' என்றத் தொடரையே நூலுக்குப் பெயராக இட்டுள்ளார்

மேற்கண்டவாறு எம்மொழிப் புலவர்களாயினும் எண்ணத்தால் அவர்கள் ஒன்றுபட்டு வாழ்ந்திருப்பது கண்கூடு. ●

அருள் மொழிக் கும்மி

இ.மேரி இமாகுலேட் ராஜ குமாரி

தமிழ்த்துறை

புனித அன்னாள் கலை அறிவியல் கல்லூரி

திண்டிவனம்

அருட்கவி அருள்தந்தை சி. மணி வளன் சே.ச. அவர்களின் நூல்களில் ஒன்று அருள்மொழிக் கும்மி. இதைப் பற்றிக் காண்போம்.

அறிவைப் பயன்படுத்தித் தன் சிந்தனைத் திறனைச் செயலாக்கும் மனிதன், அறிவியல் வழியிலும் இலக்கிய நெறியிலும் வாழ்வைத் தொடர்கின்றான். அவனது வாழ்வோடு ஒன்றறக் கலந்ததாக இலக்கியம் உள்ளது. இந்த இலக்கியம் வாழ்வியல் காட்டும், அறநெறி உணர்த்தும்; இன்ப ரசனைக்கு இடம் கொடுக்கும்; பக்தி என்னும் இறை உணர்வை எழுப்பச் செய்யும்; பண்பாட்டைச் சீர்படுத்தும்; சமயநெறி கற்பிக்கும் என்று பலவாறு விளக்கலாம்.

இந்த இலக்கியம் பேரிலக்கியம், சிற்றிலக்கியம் என இருவகைப்படும். சிற்றிலக்கிய வகை மொத்தம் *96* என்று வீரமாமுனிவர் கூறுகின்றார். தமது சதுரகராதியில் அவற்றின் இலக்கணங்களையும் விளக்குகின்றார். இவற்றுள் கும்மி என்பது ஒரு சிற்றிலக்கியமாகும்.

கும்மி என்பது என்ன?

ஒழுங்குபட வளைந்து நின்று கையொலி எழுப்பி, பாட்டொலியோடு நடைபெறும் ஆட்டத்தைக் 'கும்மி' என்று அழைப்பர். கும்மி என்பது மகளிர் கைகொட்டிப் பாடி ஆடும் விளையாட்டு என்கிறது தமிழ் அகராதி. கும்மி பெரும்பாலும் பெண்களுக்குரியது என்கிறது கலைக்களஞ்சியம். நம் நாட்டுச் சிறு பெண்கள் விரும்புவது கும்மி ஆட்டம் என்று கூறுகிறார் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்.

கிறித்தவக் கும்மிகள்:

அதிசயக் கும்மி, அந்தோணியார் ஏலேலக் கும்மி, அன்னம்மாள் கும்மி, அற்புதக் கும்மி, ஞானக்கும்மி, திருச்சபைக் கும்மி, தேவசகாயம் பிள்ளை ஏலேலக் கும்மி, மாதர் கும்மி, மாமரியின் மைந்தர் கும்மி, சாஸ்திரக் கும்மி, அன்னையைப் போற்றும் ஆனந்தக் கும்மி, வேதக்கும்மி, வேதோபதேசக் கும்மி என்பன கிறித்தவக் கும்மிகள் ஆகும்.

அருள்மொழிக் கும்மி:

மேற்குறிக்கப் பெற்ற கிறித்தவக் கும்மிகளின் வரிசையில் அருள்மொழிக் கும்மி இடம் பெறுகின்றது. *131* பாடல்களைப் கொண்ட இக்கும்மி கவிஞர் அருள்தந்தை முனைவர் சி. மணி வளன் அவர்களால் எழுதப்பட்டது. திருவிவிலியச் செய்திகளைக் குழந்தைகளின் மனங்களில் பதிப்பதற்கு இந்நூலாசிரியர் திருவிவிலியக் குறிப்புகளைக் கொண்டே இக்கும்மியை இயற்றியுள்ளார். திருவிழாக் காலங்களிலும், மகிழ்ச்சியான நேரங்களிலும் கும்மி ஆடப்பெறுதல் வழக்கம். சிறு பெண்கள்

கும்மியைப் பாடி ஆடும் போது, இராகத்தோடு பொதிந்துரைக்கப்படும் திருவிவிலியக் குறிப்புகளை இளைஞர்கள், இளம்பெண்கள், பெரியோர்கள் எனக் கூடியுள்ள பார்வையாளர்கள், தமது உள்ளங் களில் ஏற்பதற்கு நல்வாய்ப்பாக அச்சூழல் அமை கின்றது.

அருள்மொழிக் கும்மியின் குறிப்புகள்:

கடவுள் அன்பானவர்; அவர் வானகத்தில் இருப்பதால் வானவர் எனப்படுகின்றார். ஆனால் அவர் எங்கும் இருக்கிறார். நம்மில் அவர் வாழ்கிறார். ஆனந்த மயமான அவரை இன்பத்தில் கும்மியடித்துக் கொண்டாடுவோம்; இதனால் நம் இதயம் பூரிக் கட்டும். தந்தை, மகன், தூய ஆவி ஆகிய மூவொரு கடவுளை நம் இதயத்தில் போற்றுவோம் என்று உணர்த்திக் கவிஞர் சி. மணி வளன் கீழ்க் கண்டவாறு பாடுகின்றார்.

அன்புருவான ஆண்டவனை நம்
அகத்தில் இருக்கும் வானவனை
இன்பத்தில் ஏத்திக் கும்மியடி இப்ப
இதயம் பூரிக்கக் கும்மியடி (பா.1)

ஆதிப் பரம்பொருள் ஆனவனை என்றும்
அண்ட சராசரத்தில் வாழ்பவனை
ஆவி மகன் தந்தை என்று நீ
அகத்தில் போற்றிக் கும்மியடி (பா.2)

திருவிவிலியத்தின் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு ஆகிய இரு பகுதிகளிலிருந்தும் முக்கியச்செய்திகள் அருள்மொழிக் கும்மியில் பாடப் பெற்றுள்ளன.

பழைய ஏற்பாடு கடவுளின் படைப்புகள்:

கடவுள் விண்ணையும் மண்ணையும் படைத்தார் (தொடக்க நூல்1:1; 2:1); அவர் வியப்பான செயல்கள் செய்பவர் என்பதை ஏழாம் பாடலில் காணலாம்.

விண்ணும் மண்ணும் படைத்தவனை எங்கும்
வியப்புறு செயல்கள் செய்பவனை
வண்ணப் பூவின் மென்மையனை இங்கு
வளைக்கரங் கொட்டிக் கும்மியடி (பா.7)

மோசே வழி பத்துக்கட்டளைகள்:

பத்துக் கட்டளைகள் கடவுள் மோசே வழியாகக் கொடுத்த வாழ்வு நெறிக் கோட்பாடுகள். மக்களை நன்னெறியில் வாழ்ந்திடக் கடவுள் அழைத்தார். இச் சிந்தனைகளைக் கவிஞர்,

மோசேயைத் தேர்ந்து யாவேயுந்தான் அங்கு
முன்வைத்திருந்த பாதையுந்தான்
மாசு அகற்றி வாழ்ந்திடத் தான் அவர்
மக்களை அழைத்தார் கும்மியடி (பா.17)

எரியும் முட்புதர் நடுவினிலே நின்று
கட்டளை பத்துக் கொடுத்தவரை
நேரியவரைப் போற்றிக் கும்மியடி என்றும்
நேர்மை வாழ்ந்திடும் கும்மியடி (பா.27)

என்று பாடுகின்றார்.

இந்தியாவில் கிறித்தவம்:

எஸ்தர் நூலில் 8:9 பகுதியில் இந்தியாவைப் பற்றிய குறிப்பு உள்ளது. தூய தோமா கிறித்தவ மறை பரப்பும் பொருட்டு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்தியா வந்தார். இந்தியாவின் ஏதாவது ஒரு பகுதியில் கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாகக் கிறித்தவம் இருந்து கொண்டேதான் இருந்திருக்கும். இக்கருத்தை முன் வைக்கும் கவிஞர்,

சிந்து தேசமாம் இந்தியாவை இறை
வார்த்தை விவிலியம் கூறிடுதே
இந்த நாட்டிலுள்ள கிறித்தவம் இப்ப
இரண்டாயிரம் ஆண்டெனக் கும்மியடி (ப.38)

என்கிறார்.

இறைவாக்கினர்:

இறைவாக்கினர்கள் பெரிய இறைவாக்கினர், சிறிய இறைவாக்கினர் என்று இருநிலைகளில் கூறலாம். எசாயா, எரேமியா போன்றோர் பெரிய இறைவாக்கினர். ஆமோஸ் போன்றோர் சிறிய இறைவாக்கினர் ஆவர்.

எம்மானுவேல் என்னும் பெயரினைப் பின்னர்
இயேசு பெறவே இருப்பதனை
அம்மாவாம் கன்னி மரியினை முன்னே
அறிவித்தார் எசாயா கும்மியடி (பா. 41)

என்ற பாடல் எசாயாவின் முன்னறிவுப்புக் குறித்ததாக உள்ளது (எசாயா 7:14).

பழைய ஏற்பாட்டில் பெண்கள்:

பழைய ஏற்பாட்டுக் காலத்திலும் புரட்சிப் பெண்கள் இருக்கத்தான் செய்தனர். ரூத்து, எஸ்தர், யூதித்து போன்றவர்களைச் சான்றாகக் கூறலாம். தன் இனமக்களைக் கடவுள் பெயரால் காக்கத் துணிந்த யூதித்தைப் பற்றி அருள்மொழிக் கும்மி கீழ் உள்ளவாறு கூறுகின்றது.

தாளங்கள் தட்டுங்கள் மேளங்கள் கொட்டுங்கள்
கடவுள் மக்களைக் காத்தாரே
வாளெடுத்தவனை வாளாலே வீழ்த்திய
யூதித்தின் சாமிக்குக் கும்மியடி (பா. 51)

புதிய ஏற்பாட்டில் சில குறிப்புகள்:

திருவிவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் சில குறிப்புகள் காணப்படுகின்றன. கன்னி மரியாவிடம் கபிரியேல் தூதர் மீட்பரின் பிறப்புப் பற்றிய செய்தியைக் கூறச் செல்கின்றார். லூக்கா 1:2631 இல் உள்ள இச்செய்தியை

அருள்நிறைந்த மாமரியே நீர்

கடவுள் அன்பானவர்; அவர் வானகத்தில் இருப்பதால் வானவர் எனப்படுகின்றார். ஆனால் அவர் எங்கும் இருக்கிறார். நம்மில் அவர் வாழ்கிறார். ஆனந்த மயமான அவரை இன்பத்தில் கும்மியடித்துக் கொண்டாடுவோம்;

ஆண்டவன் ஆசி பெற்றவரே
கருவுற்று நீர் பெறும் குழந்தை
கடவுள் மகனே கும்மியடி (பா.57)
என்று கவிஞர் பாடுகின்றார்.

இயேசுவின் பிறப்பு:

மானிடர்க்கு வாழ்வு கொடுக்கும் பிறப்பு ஆண்டவர் இயேசுவின் பிறப்பு. ஏழைகள் கொண்டாடும் பிறப்பு அவரது பிறப்பு. கடவுள் தன்மையை விட்டு மனித வடிவில் மாட்டுத் தொழுவத்தில் அவர் பிறந்தார். லூக்கா 2:8 இல் உள்ள இக்குறிப்பைக் கொண்டு கவிஞர் அவர்கள் தம் நூலில்,

மாட்டுத்தொழுவத்துத் தீவனத் தொட்டியில்
மழலை ஆனார் இயேசுவே
பாட்டுடன் வந்தனர் ஆயர்கள், வான்
தூதர் குரல் கேட்டு, கும்மியடி (பா. 69)
என்று பாடுவதைக் காண்க.

இயேசுவின் பணி வாழ்வு:

அன்புருவான இயேசு நோயுற்றோரைக் குணமாக்கினார். பேய்களை அவர் ஓட்டினார், நன்மையே எங்கும் செய்தார். அருள்மொழிக் கும்மி 87ஆம் பாடலில் மாற்கு நற்செய்தியாளர் 1:34 இல் கூறும் கிறிஸ்துவின் பணிவாழ்வு பற்றிக் கூறப்படுவதை இவண் காண்க.

நோய்கள் குணமாக்கும் மருத்துவனை நலம்
நாளும் வழங்கும் அன்புருவை
பேய்கள் ஓட்டிடும் பெருமானை, வரும்
பேதங்கள் நீங்கிடக் கும்மியடி (பா.87)

கானாவூரில் முதற் புதுமை:

இயேசு தமது முதற் புதுமையைக் கானாவூரில் செய்ததாக யோவான் நற்செய்தியாளர் இயல் 2:12 இல் குறிப்பிடுகின்றார். கடவுள் மக்களுக்கு உணவாக 'மன்னா' பொழிந்ததாக விடுதலைப் பயணம் நூல் 16:14,15 இல் காணலாம். இதனைக் கூறவந்த கவிஞர் அவர்கள்,

கானாவூர்த் திருமணம் சிறந்திட அங்கு
கணத்தில் புதுமை செய்தாரே
மானத்தைக் காக்கும் ஆண்டவரை அன்று
மன்னா பொழிந்தவர்க்குக் கும்மியடி (பா.92)
என்று பாடுவதோடு இலக்கிய நயம் பொதிந்த செய்தியையும் தொடர்ந்து அடுத்த பாடலில் கூறுகின்றார்.

இயேசு தமது தெய்வீகத் தன்மையால் தண்ணீரை இரசமாக மாற்றினார். இந்தத் தண்ணீர், தன் தலைவர் உற்று நோக்கியதால் வெட்கமடைந்து சிவந்ததாம் அதுவே இரசமாயிற்று என்று கீழ்க்கண்டவாறு பாடுகின்றார்.

தன் தலைவர் உற்று நோக்கிட தண்ணீர்
வெட்கித்து இரசம் ஆனதே
உன்னைப் படைத்தவர் சொன்னவுடன் நீ
உள்ளத்தில் மாறிடக் கும்மியடி (பா.93)

இந்தப் பாடலில், இயற்கை இறைவனுக்குக் கீழ்ப்படிகின்றது, மானிடா நீ உள்ளத்தில் அவர் குரல் கேட்டு மாறுவாயா? என்ற அறநெறி உணர்த்தும் கருத்தைக் கவிஞர் உடன் வைப்பதையும் உற்று நோக்குக.

கட்டளைகள் இரண்டு:

கடவுள் மோசே வழியாகப் பத்துக் கட்டளைகள் கொடுத்தார். அவற்றை இரண்டு கட்டளைகளில் உள்ளடக்கி, இறையன்பு பிறரன்பு ஆகியன அடிப்படை என்று இயேசு வலியுறுத்தினார். இதனைக் கூறும் நூலாசிரியர், மத்தேயு 22:40 இல் உள்ள செய்தியைக் கீழ் உள்ளவாறு பாடுகின்றார்.

கட்டளை இரண்டும் கடவுள் வகுத்த
கருத்துக்களின் சுருக்கமென்று
திட்டமாய் அறிந்து தெளிந்து செய்க
தேவன் துணை கும்மியடி (பா. 102)

இறுதியாக.....

இந்நூலாசிரியர், 131 என்ற எண்ணில் முடியுமாறு பாடல்களை இயற்றியுள்ளார். ஒரே கடவுள் மூன்று ஆளாக உள்ளார். அந்த மூன்று ஆட்கள் ஒரே கடவுள் என்ற செய்தியைக் கூற வந்த கவிஞர், தம் பிறப்பின் தேதியையும் உள் வைத்துப் பாடியுள்ளார்.

முப்பத்திஒன்று பதிமூனுலே உடன்
மூன்று வந்ததென் பிறப்பிலே
எப்போதும் கடவுள் மூனுலே ஆனால்
இருப்பது ஒன்னுலே கும்மியடி (பா.131)

இவ்வாறாக, அருள்மொழிக் கும்மி என்ற தலைப்பில் கவிஞர் சி. மணி வளன் அவர்களின் இலக்கியப் படைப்பு காணப்பெற்றது. ●

சீராக்கும் நாலடியாரும் காண்பிக்கும் சமுதாயமும் பொருளாதாரமும்

அருள்பணி. முனைவர்
இரா.செ.டென்சன் எக்டர்
தமிழ்நாடு இறையியல் கல்லூரி
அரசரடி, மதுரை

முன்னுரை: சீராக் என்கின்ற நூல் எபிரேய ஞான இலக்கிய வகையைச் சேர்ந்தது. நாலடியார் தமிழின் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. சீராக் நூல் திருச்சபையின் பயன்பாட்டில் இன்று திருப்பாடல்கள் இருப்பது போன்று அன்று மிகப் பெரிய ஏற்பு நிலையைப் பெற்றிருந்தது.[1] ஆலும் வேலும் பல்லுக்குறுதி நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி என்ற பழமொழியில் இடம்பெற்ற நூல். சீராக் நூலின் ஆசிரியர் கிறிஸ்துவுக்குமுன் (பொ.ஊ.மு) நூற்றியெண்பதாம் ஆண்டு போல் எழுதியதை இவர் பெயரர் பொது ஊழிக்கு முன் நூற்று முப்பத்தியிரண்டாம் ஆண்டு போல் கிரேக்கத்தில் மொழிபெயர்த்தார் என்பர்.[2] சீராக் நூலின் ஆசிரியர் பெயர் 'ஷிமியொன் பென் எலியேசர் பென்சீரா'. இவர் பெயரர் பெயர் 'பென் சீரா'. நாலடியார் சமணமும் பௌத்தமும் தமிழகத்தில் செல்வாக்குடன் திகழ்ந்த கிறிஸ்துவுக்குப்பின் (பொ.ஊ.) ஐந்தாம் நூற்றாண்டு போல் எழுதப்பெற்றது[3]. பொதுவூழியின் ஏழாம் நூற்றாண்டில் தொகுக்கப் பெற்றது4 என்பர். இவ்வாறாக சமயத்தாலும் மொழியாலும் காலத்தாலும் வேறுபட்ட இருவேறு நூல்கள் எவ்வாறு தம்முள் ஒத்தமைந்த செய்திகளைக் கொண்டுள்ளன என்பதைக் காண்பது இக்கட்டுரையின் நோக்கமாகின்றது.

சீராக் நாலடியாரின் சமுதாயம்

எபிரேயச் சமுதாயம் இறை மையச் சமுதாயம். இந்தச் சமுதாயத்தை வழிநடத்திச் செல்ல வேண்டிய பொறுப்பு சமயத் தலைவருக்கு உண்டு. ஆனால் சமயத் தலைமையோ சமய வாழ்வில் உயர் பொறுப்புகளைப் பெற்றிட அவற்றை விலை கொடுத்து வாங்கும் ஆர்வத்தைப் பெற்றிருந்தது. இதற்காக கிரேக்க ஆட்சியாளர் முன்னின்று நடத்திய பண்பாட்டுப் படையெடுப்பைக் கண்டுகொள்ளவில்லை. மக்கள் மனத்தளவில் சோர்ந்து போயிருந்தனர். இந்தப் பண்பாட்டுத் தாக்கத்தால் கிரேக்க மெய்ப்பொருளியல் இலக்கியம் விளையாட்டு பல்லிறைக் கோட்பாடு ஆகியவை யூத சமுதாயத்தைப் பெரிய அளவில் தாக்கின[5].

தமிழகம் இக்காலத்தில் பல்லவராட்சியின் கீழிருந்தது. பல்லவர் வேத நெறியைப் பாராட்டினர். வேதம் சாதியத்தைப் புனிதப்படுத்தியது. இது சமுதாயத்தில் பல்வேறு ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்தியிருந்தது[6]. உயர் குடியினருக்கே கல்வி கிட்டியது. மற்ற மக்கள் உரிமைகளிழந்து வாழ்ந்தனர்.

சீராக் நாலடியார் ஆகிய இரு நூல்களின் செய்திகளையும் பார்க்கும்போது இந்த இரு நூல்களும் அறச் செய்திகளைப் பதிவு செய்வதை மட்டுமே நோக்கமாகக் கொள்ளாமல் மக்களை அடிமைப்படுத்தி வந்த மதிப்பீடுகளை எதிர்த்து வாழ்வதற்குரிய அறைகூவலைத் தருவதையும் நோக்கமாகக் கொண்டிருந்ததை அறிய முடிகின்றது.

சாதாரண மக்களைக் குடிகள் என்றழைத்தனர். குடிசைகளில் வாழ்ந்தனர். சமுதாயத்தின் அடித்தளங்களில் வலுவிழந்து வாழ்ந்தோரை ஆளோட்டி முறைப்படி அடிமைப்படுத்தினர். உழைப்புக்கு மதிப்பளிக்காத சமுதாயமாக அது அமைந்திருந்தது[7].

சீராக் நாலடியார் ஆகிய நூல்கள் முறையே மொழி பெயர்க்கப்பெற்ற காலத்திலும் தொகுக்கப் பெற்ற காலத்திலும் மக்கள் மாண்பிழந்தோராக சமுதாயத்தில் நடைபிணங்களாக வாழ்ந்திருந்தமை தெரிகின்றது.

சீராக் நாலடியாரின் பொருளாதாரம்

சீராக் நூலின் காலத்தில் யூத சமுதாயத்தின் பொருளாதார வாழ்வில் மிகப்பெரிய மாற்றங்கள் ஏற்பட்டன. பலஸ்தீனாப் பகுதி உரோமையின் ஆட்சியின்கீழ் வந்ததால் வரி செலுத்திட மக்கள் கட்டாயப்படுத்தப் பெற்றனர். எருசலேம் கோயிலிருந்த பணம் மிகப் பெரிய அளவில் எடுத்துக் கொள்ளப்பெற்றது. வரிச்சுமையோடு யூத மண்ணிலே நெடுங்காலமாக இருந்து வந்த பொருளாதார அமைப்பு முறைகள் பாதிப்புக் குள்ளாயின. குடும்ப உறவுகள் பாதிப்படைந்தன. சமுதாய ஆதரவு அமைப்புகள் நலிந்தன[8].

தமிழகத்தில் மக்கள் மீது வரிகள் மிகப்பெரிய அளவில் சுமத்தப் பெற்றிருந்தன. நாட்டின் எல்லையை விரிவுபடுத்த வேண்டும் என்ற வேட்கை ஆட்சி செய்தோரிடம் இருந்ததால் போர்ச்சூழல் நிலவியது. தமிழகத்தின் ஏதாவது ஒரு பகுதியை எப்போதுமே பஞ்சம் பாதித்து வந்தது. பெண்களுக்குப் போதுமான காவல் இல்லை. தோட்டங்களும் மரங்களும் அழிக்கப் பெற்றன. பெரிய அளவில் கட்டடங்கள் கட்டினர். போருக்காகவும் உயர் குடியினர் வள வாழ்வுக்காகவும் அடித்தள மக்களிடமிருந்தே வரிவிதிப்பின் வாயிலாக பணத்தைப் பெற்றனர்[9].

பலஸ்தீனாவிலும் தமிழகத்திலும் அரசின் புதிய பொருளாதாரக் கொள்கைகளினால் செல்வந்தர் மேலும் செல்வந்தராயினர். ஏழையர் மேலும் ஏழையராக்கப் பெற்றனர். சமச்சீரற்ற ஒரு சமுதாயமாக அமைந்திட அரசுகளின் பொருளாதாரக் கொள்கைகள் வழிவகுத்திருந்தன. இந்தச் சமுதாய பொருளாதாரப் பின்னணிகளில் தாம் சீராக் நாலடியார் ஆகிய இரு நூல்களின் செய்திகளையும் பார்க்கும்போது இந்த இரு நூல்களும் அறச் செய்திகளைப் பதிவு செய்வதை மட்டுமே நோக்கமாகக் கொள்ளாமல் மக்களை அடிமைப்படுத்தி வந்த மதிப்பீடுகளை எதிர்த்து வாழ்வதற்குரிய அறைகூவலைத் தருவதையும் நோக்கமாகக் கொண்டிருந்ததை அறிய முடிகின்றது. எடுத்துக்காட்டாக கற்றார் கல்லாதவர் பற்றி சீராக் நாலடியார் கூறுவதை மிகச் சுருக்கமாகக் காணலாம்.

சீராக் நாலடியாரில் கற்றார் கல்லாதவர்

சீராக் நாலடியார் ஆகிய இரு நூல்களுமே கல்வி என்று சொல்ல வருவது முறையே ஞானம் பற்றிய அறிவையும் அறவாழ்வு பற்றிய அறிவையுமே. இவை வாழ்க்கைக் கல்வி மானுடம் எவ்வாறு ஒரு சமுதாயத்தில் இயங்க வேண்டும் என்பது பற்றியது. சீராக் கூறும் ஞானம் இறையச்சத்தையும்

ஆண்டவரிடம் அச்சம் கொள்ளுதலே ஞானத்தின் நிறைவு. அது தன் கனிகளால் மனிதருக்குக் களிப்பூட்டுகிறது' (சீராக் 1:16). இந்த ஞானம் எப்படிப்பட்டது என்பதை விளக்கும்போது 'ஞானமுள்ள அடிமைக்கு உரிமைக் குடிமக்கள் பணிபுரிவார்கள். இது கண்டு அறிவாற்றல் நிறைந்தவர்கள் முறையிட மாட்டார்கள்' (சீராக் 10:25) என்பது உண்மையான ஞானம் தரும் நிறைவான அறிவைப் பற்றியது.

நாலடியார் கூறும் அறம் நிலையாமை பற்றிய தெளிவையும் ஏற்படுத்தும். இந்தக் கல்வி பிறர் நலத்தை நாடச் செய்யும் தன்னலத்தை மறுக்கும் தாழ்மையைத் தரும். இறுமாப்பை ஒழிக்கும்.

பலஸ்தீனம் கிரேக்க ஆதிக்கத்தின் கீழும் தமிழகம் பல்லவர் ஆதிக்கத்தின் கீழும் இருந்த நிலையில் ஞானமும் அறமும் பின்னுக்குத் தள்ளப்பெற்றுக் கல்வியென்பது நிருவாகத் திறமையை நிலைநிறுத்தக் கூடிய தேவையைப் பற்றிப் பயிற்றுவிப்பதாக இருந்திருக்க வேண்டும்.

ஞானம் பற்றி சீராக் கூறுவது 'ஆண்டவரிடம் அச்சம் கொள்ளுதலே ஞானத்தின் நிறைவு. அது தன் கனிகளால் மனிதருக்குக் களிப்பூட்டுகிறது' *(சீராக் 1:16)*. இந்த ஞானம் எப்படிப்பட்டது என்பதை விளக்கும்போது 'ஞானமுள்ள அடிமைக்கு உரிமைக் குடிமக்கள் பணிபுரிவார்கள். இது கண்டு அறிவாற்றல் நிறைந்தவர்கள் முறையிட மாட்டார்கள்' *(சீராக் 10:25)* என்பது உண்மையான ஞானம் தரும் நிறைவான அறிவைப் பற்றியது. ஆளும் நிலையிலிருக்கும் ஒருவர் ஞானம் அற்றவராயின் இறைஞானம் பெற்றாரே அவருக்கு மேலானவர் என்பதை இது விளக்குகின்றது.

நாலடியாரும்

இற்பிறப்பில்லார் எனைத்து நூல் கற்பினும்
சொற்பிறரைக் காக்கும் கருவியரோ இற்பிறந்த
நல்லறிவாளர் நவின்ற நூல் தேற்றாதார்
புல்லறிவு தாம் அறிவது இல் (32:320)

'நற்குடிப்பிறப்பு இல்லாதவர் எவ்வளவு சாத்திரங்களைப் படித்தாலும் கல்லாத பிறருடைய சொற்களை இகழாமல் காக்கும்படியான அடக்கம் முதலான பண்புகளை உடையாராக இரார். நற்குடிப் பிறந்த அறிவாளர் பெரியோர் செய்த நூல்களில் தெரியாதவருடைய குறைந்த அறிவைத் தாம் சார்ந்து அறிந்து கொள்வதில்லை' என்பது பொருள்.

கற்றவர் கல்லாதவர் நிலை இரண்டு சமுதாயங்களிலுமே நிலவியது. இதனுடன் ஏற்றத்தாழ்வுகளும் நிலவின. இச்சூழலில் உண்மையான கல்வி இறையச்சம் என்பதும் உண்மையான கல்வி பணிவைத் தருவதாக இருக்க வேண்டுமென்பதும் அன்று நிலவிய நிலைமைக்கு எதிர்க்கருத்தாக அமைகின்றன.

முடிவுரை

பல்வேறு சூழல்களில் நூல்கள் எழுதப்பெற்றிருப்பினும் அவை கூற வரும் செய்தியை மேலோட்டமாகப் படித்துப் பொருள் கொள்ளாமல் அவை எழுதப்பெற்றக் காலத்தின் சூழலைக் கருத்தில் கொள்ளும்போது அந்த நூல்கள் தொகுக்கப்பெற்ற அல்லது எழுதப்பெற்ற நோக்கத்தை அறிந்து கொள்ள அது உதவியாகும் என்பதை இதனால் மீண்டும் உறுதி செய்ய முடிகின்றது. நாம் வாழும் காலமும் இந்நூல்களின் காலத்தையொத்ததாகவேயிருப்பின் அதற்குரிய செய்தியையும் தம்மிடம் கொண்டு இறவா இலக்கியங்களாக இறைத் திருமொழிகளாக செயலாற்றும் தன்மையை இந்நூல்கள் பெறுகின்றன.

துணைநின்ற நூல்கள்

1. Theodore Bachmann, ed. Luther's Works, Word and Sacrament, p.357.
2. K. Luke, Companion to the Bible, Vol. 1, p. 162.
3. சீனி வேங்கடசாமி, மயிலை, களப்பிரர் ஆட்சியில் தமிழகம், பக்.14,15.
4. அறவாணன் க.ப. அற இலக்கியக் களஞ்சியம் ப.54.
5. Victor H. Matthews, James C Motor and Handricson, The Old Testament Text, p.233.
6. தமிழ்நாட்டு வரலாற்றுக்குழு, தமிழ்நாட்டு வரலாறு முதற்பகுதி ப.33.
7. வே.தி. செல்வம் தமிழக வரலாறும் பண்பாடும் பக்.328-340.
8. Anthony R. Ceresko, Introduction to Old Testament Wisdom, p.162.

முன்னது, ப.240.

கவிஞர் அனந்தம்மாளின் இலக்கியக் கொடைகள்

முனைவர்
தாயம்மாள் அறவாணன்
தமிழ்த்துறைத் தலைவர் (ஓய்வு)
அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்
கொடைக்கானல்.

திருமதி. அனந்தம்மாள் 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கத்தோலிக்கக் கிறித்துவப் பெண் கவிஞர். தசை பெரும்பண்ணையூரில் கனவான் சின்னுடையார் மகளாகப் பிறந்து இலந்தவனசேரி திரு. அப்பாசாமி உடையார் மனைவியாக வாழ்ந்து வட இந்தியா அசாமில் முசபர்ப்பூரில் மரணமானவர். அவர் எழுதிய கவிதைகள் மிகப்பல. கவிஞர் அனந் தம்மாள் 1863 சனவரியில் பிறந்தார். 1923 ஏப்ரல் 17 ஆம் நாள் சாதனைகள் பல செய்து தம் வாழ்வில் நிறைந்தார்.

கவிஞர் அனந்தம்மாள் இயற்கையாகவே கவிதை இயற்றும் ஆற்றலும் சரமாரியாக எழுதிக் குவிக்கும் திறனும் வாய்க்கப் பெற்றிருந்தார். தம் வாழ்நாள் முழுமையும் எழுதிய கவிதைகள் பல கேட்போரைப் பிணிக்கும் பாடும் குரல் வளமும் இசை நுணுக்கத்துடன் பாடும் பேராற்றலும் உடையவராக இருந்தார்.

அனந்தம்மாள் எழுதிய பாடல்கள் பல பதிவு செய்யப் பெறாமலேயே போயின. பல காற்றில் கலந்தன. பல படி எடுக்காமல் அழிந்தன. நண்பர்கள் கைவசம் சென்று மீளாமல் முடிந்தன. எஞ்சிய பாடல்கள் மட்டும் (சுமார் 396 கவிதைகள்) தொகுக்கப்பெற்று வகைப்படுத்தப் பெற்று 'ஸ்ரீமதி அனந்தம்மாள் பாடல்கள்" என்று பெயர் சூட்டப்பெற்று (562 பக்கங்கள்) 1933 ஆம் ஆண்டு வெளியிடப்பெற்றன. கவிஞர் இறப்பை ஒட்டி 10 ஆம் ஆண்டு நினைவாக அச்சிடப் பெற்றன. அப்பாடல்கள் பத்துப் பிரிவுகளாக வகைப்படுத்தப் பெற்றுள்ளன. அவை வருமாறு:

முதல் பிரிவு குழந்தை இயேசுவின் பேரில் பாடல்கள் 17 தலைப்புகள்

இரண்டாம் பிரிவு தேவன் பேரில் பாடல்கள் 30 தலைப்புகள்

மூன்றாம் பிரிவு தேவமாதா பேரில் பாடல்கள் 33 தலைப்புகள்

நான்காம் பிரிவு சில அரியோர் பெரியோர்களைப் பற்றிய பாடல்கள் 22 தலைப்புகள்

ஐந்தாம் பிரிவு ஹிதோப தேசப் பாடல்கள் 47 தலைப்புகள்

ஆறாம் பிரிவு பிரலாபப் பாடல்கள் 148 தலைப்புகள்

ஏழாம் பிரிவு தனநாசன் என்னும் சந்திரகாசன் விலாசம் பாடல்கள் பிரிவு

எட்டாம் பிரிவு நோவா பேழையும் வேடிக்கைப் பாடல்களும்

ஒன்பதாம் பிரிவு மெய்ஞானக் கும்மிப் பாடல்கள்

பத்தாம் பிரிவு பழமொழி மாலை

கவிஞர் அனந்தம்மாள் கவிதையின் யாப்பு அமைப்பு:

கவிஞர் இலக்கிய இலக்கண நூற்புலமை மிக்கவர். யாப்பிலக்கணம் நன்றாகக் கற்றுத் துறை போயவர். அவரது பாடல்கள் வெண்பா ஆசிரியப்பா விருத்தப்பா கலிப்பா வஞ்சிப்பா மற்றும் கண்ணிகள். இயைபுத் தொடை நயம் நிறைந்தவையாகக் காணப்படுகின்றன. கல்வி கற்ற புலமை நலம் நிரம்பிய கவிதைகளாகவும் சொல்லாளுமை மிக்கனவாயும் உயர்ந்த செந்தமிழ் மொழிப்புலமை மிக்கனவாயும் காணப்படுகின்றன.

இராகம் தாளம் பல்லவி சரணம்

கவிஞர் கவிதைகளை இயற்றியும் அவற்றிற்கு இன்ன தாளம் இன்ன ராகம் என்று பெயரிட்டும் பல்லவி அனுபல்லவி சரணம் என அமைத்தும் தாமே இசைத்தவர் என்பது தெரிய வருகின்றது. காம்போதி கல்யாணி செஞ்சுருட்டி தோடி சங்கராபரணம் சுருட்டி ஆரபி பியாகு இந்துஸ்தானி கமாஸ் தோடி எதுக்குல காம்போதி கவாய்தோடி அமீர்கல்யாணி மோகனம் துசாவந்தி ஆனந்தபைரவி புன்னாகவராளி காவேரி நாதநாமக்கிரிகை உசேனி காப்பி கரகரப்பிரியா கனடா முகாரி பந்துவராளி பைரவி கமால் சாமா என்று பல ராகங்களை ஒவ்வொரு கவிதையின் முகப்பில் குறிப்பிட்டுள்ளார். அதேபோல் தாளங்களின் பெயர்களாக ஆதி சாப்பு பிசரம் சதுரசாதி ஏகம் மிசர ஏகம் திசரம் எனப் பல பெயர்களை எழுதி இராகம் தாளம் பல்லவி அனுபல்லவி சரணம் என்று அமைத்தமையால் இவர் இசைத்துறையில் வல்லவர் என அறியப்படுகிறது.

மெட்டு

ஒவ்வொரு பாடலின் மேலே இது இன்ன மெட்டு என்று சுட்டியிருப்பார். சான்று: வண்டுவார்குழலி என்னும் வர்ணமெட்டு நேத்து ராத்திரி வந்த பெண் வீடு என்னும் வர்ணமெட்டு சத்தி பரா சத்தி முத்தி காந்திய சொரூபி என்னும் வர்ண மெட்டு என்று மெட்டுப் போட்டு எழுதிய கவிஞரின் இசை மேதமைத்தன்மை நன்றாகப் புலப்படுகிறது.

சான்று: சங். அலோசியூஸ் சுவாமிகளால் இயற்றப்பட்டு அனந்தம்மாளால் மேற்றிராணியார் முன் பாடப்பட்டது.

அனந்தம்மாள் உறுதிப்பூசுதல் பெற்றபோது 1873 ஆம் ஆண்டு மிகவும் சங்கைக்குரிய லவுயேனான் மேற்றிராணியார் பேரில் இசையாகப் பாடின பாடல் சுட்டத்தக்கது.

முத்தமிழ்ப் புலமை மிக்கவர் கவிஞர்:

கவிதை எழுதி உருவாக்கும் ஆற்றலும் மெட்டு அமைத்துப் பாடும் இசைத்துறை நுணுக்கமும் கொண்டதோடு நாடக நயம் தோன்றும் வண்ணம் உரையாடல் பாணியில் கவிதைகளைப் படைக்கும் ஆற்றலும் பெற்றவர் அனந்தம்மாள்.

சான்று:

ஆதாம் ஏவாள் விலாசம்

லூசிபேய்:

ஏவை எனும் பெண்ணரசே இந்த மரக்கனி வெகு
இலங்கி மிகத் துலங்கியிருக்க ஏன் புசிப்பதில்லை
நாவுக்கேற்ற ருசிகரமான நல்ல கனியிதே இது
நன்மையுள்ள சீவகனி தின்னும் பெண்ணரசே ஏவை
தின்பீரானால் சாவீரென்று தேவன் நீக்கி வைத்தார் அதை
தீண்ட வொண்ணாதென்று எங்கள் தேவன் சொன்னாரே
இன்று வரையில் நாங்கள் இருபேரும் தின்னோம் எங்கள்
ஏசுநாதன் புசிக்க விடை தரவு மில்லையே

கத்தோலிக்க அடிகளாரைப் போற்றுதல்:

சில அரியோர் பெரியோர்களைப் பற்றிய பாடல்களை அனந்தம்மாள் இயற்றியுள்ளார். அவர் பல குருமார்களைக் கவிதையில் போற்றியுள்ளார்.

ரிப்பன் பிரபு பேரில் பாடல்:

நம் நாட்டை ஆண்ட வெள்ளைக்காரர்களில் இராஜப் பிரதிநிதியாக இருந்து இந்திய அரசை ஆண்ட கவர்னர் ஜெனரல் ரிப்பன் பிரபுவைக் கவிதையால் போற்றியுள்ளார்.

பல்லவி:

ரிப்பன் ரிப்பன் கவர்னர்தனை நினைத்தால்
எவர்க்கும் ஆனந்தமே
ஒப்பில்லாத திரு மரியருளால் உதித்த
ரிப்பன் வதனமதைச்
சொப்பனத்திலும் காண்போமானால்
சொல்லரிதான நன்மையுறும்

சரணங்கள்:

பாலர் பாடசாலைகளும் பலவித பாஷை அச்சுக்கூடங்களும்
வாலர்க் கல்விச் சாலைகளும் வைத்திய சாஸ்திரக்கூடங்களும்
சீலமுடன் நடத்திவந்த செல்வச் சீமான் துரையவரை
ஞாலமதனில் புகழ்ந் தேற்ற நாடி வாருங்கள் நண்பர்களே

வாக்குவாத உரையாடல்:

நாட்டாருக்கும் நகரத்தாருக்கும் வாக்குவாத உரையாடல் கிராமத்திலுள்ளாரும் நகரத்தில் உள்ளாரும் உரையாடுவதைப்போல் பெரிய கவிதை எழுதிய அனந்தம்மாளின் திறன் வியக்க வைக்கிறது. பாடல் பகுதி வருமாறு:

நாட்டாரே நட்டாரே நாகரிகம் உமக்குண்டோ
மாட்டை கட்டியடித்து மண்ணை உழுதுண்பீர்
கோட்டு வாசல் அறியீர் கோமானார் வீடறியீர்
ஆட்ட பாட்டம் அறியீர் அங்காடி வீதி அறியீர்
பாட்டுக் கச்சேரி வைத்துப் பாடமாட்டீர் ஆடமாட்டீர்
வீட்டுக்கு வீடு விருந்துண்டு வெறிஏறி
மாட்டை அடித்து மகத்தான விருந்துண்பீர்
நகரவாசியே கேளும் நாட்டார்க்கென்ன தெரியும்
எத்தொழிலுக்கும் ஆதி ஏரின் தொழிலாக
அத்தன் கொடுத்திருக்க அறியாமல் பேசுவதேன்
ஏருழவு தொழில்தான் எல்லோருக்கும் அன்னமிடும்
ஏராளமான இறை வரிகள் தான் கொடுக்கும்.
எள்ளு விளைந்து வரும் எழிலான எண்ணெய் ஆகும்
கொள்ளு விளைந்து வரும் குதிரைக்குத் தீனியாகும்
அவரை விளைந்து வரும் அமுத கறியாகும்
துவரை விளைந்து வரும் தூய கறியாகும்
முட்டாள் குணவாதம் கட்டையோடுதான் போகும்
கெட்டு நலிந்தாலும் பட்டணத்துப் போக்கிரிகள்
முட்டாள் கேள்வி கேட்க முன்னே வந்து நிற்பார்கள்
பட்டணத்துக் கருவ மெல்லாம் பதமற்ற கருமம் ஆச்சே

சங்க இலக்கியப் பத்துப் பாட்டான குறிஞ் சிப்பாட்டில் கவிஞர் 96 வகைப் பூக்களை அடுக்கடுக்காகக் கூறுவார். அதன் சாயலை அனந்தம்மாள் கவிதையில் காண முடிகிறது. ஆற்றலும் இலக்கியப் பயிற்சியும் புலமையும் மிக்கோராலேயே இவ்வகையில் எழுத இயலும். அந்த வகையில் அனந்தம்மாள் மாபெருங் கவிஞர் என்பதில் ஐயமில்லை. திருவள்ளுவர் ஔவை கம்பர் என்று இலக்கிய முன்னோர்களைப் பொன்னே போல் தம் கவிதைகளில் போற்றியுள்ளார் அனந்தம்மாள்.

சாற்றுக்கவி:

ஒரு கவிஞர் எழுதிய கவிதையைப் பாராட்டி ஆண் கவிஞர்கள் பலர் எழுதிய அணிந்துரைக் கவிதைகள் பல தமிழிலக்கியங்களில் உள்ளன. பெண்கள் ஆண்கள் எழுதிய நூலைப் போற்றுவது ஒன்று மற்றொன்று பெண்கள் பெண்கள் எழுதிய கவிதையைப் போற்றிப் பாடுவது.

20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அனந்தம்மாள் திரு. பாப்பு நாயுடுகார் நூலுக்கும் செண்பகக்கொல்லை திரு. சௌந்திரராஜ உடையார் நூலுக்கும் போற்றி ஏற்றிய சாற்றுக் கவிதைகள் போற்றத்தக்கவை.

பண்டிதை மனோன்மணி அம்மையார் அசலாம்பிகை அம்மையார் எழுதிய திருவாமாத்தூர் திரிபு அந்தாதி என்ற நூலைப் போற்றிப் பாடிய கவிதை அந்நூலுள் காணப்படுகிறது. அசலாம்பிகையின் அக்கா உருக்குமணி தம் தங்கையின் நூலான திருவிடையூர்த் தல புராணம் என்ற நூலுக்குச் சாற்றுக்கவி தந்துரைத்துள்ளார்.

25.09.1913 ஆம் பாப்பு நாயுடுகாருக்கு அனந்தம்மாள் சாற்றிய சாற்றுக்கவி விருத்தம்:

நாவலர் புகழும் பாப்பு நாயுடுகாரு ரைத்த
பாவளம் சீர்கற்கண்டு பதஉரை அதிரசந்தேன்
கேவலம் கல்லாநாரி கேட்டகமகிழா வண்ணம்
மேலவன் போல்பரிதி மேற்றிசைக் கேகினானே.

இப்பாடல்போல் மொத்தம் நான்கு விருத்தப் பாடல்களில் சாற்றுக்கவி பாடியுள்ளார்.

பழமொழிமாலை:

பழமொழிமாலை என்ற தலைப்பில் 94 பக்கங்களில் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட அறக்கருத்துக்களைப் பழமொழி வடிவில் அடுக்கி எழுதியுள்ளார் கவிஞர். இப்பழமொழிகள் எங்குமே காணப்படாதவை. கவிஞரே புனைந்த மொழிகள் எனலாம். வார்த்தைகள் ஏவல் கேட்டு வந்து விழுந்துள்ளன. அவரின் பழமொழிகளைக் கீழ்க்கண்டவாறு அமைக்கலாம்.

சமுதாயத்தை நோக்கிய பழமொழிகள்

ஆண்களுக்கான பழமொழிகள்

பெண்களுக்கான பழமொழிகள்

பொதுவான பழமொழிகள்

என்ற நிலையில் இவற்றை வகைப்படுத்தலாம். சமுதாயத்தை நன்னிலைப்படுத்த வேண்டும் என்று கருதி கவிஞர் எழுதிய பழமொழிகளே மிகுதி.

ஊசல் பாட்டு:

கவிஞர் அனந்தம்மாள் ஊசல் பாட்டு என்ற

தலைப்பில் ஒரு பாடல் எழுதியுள்ளார். ஊசல் என்பது ஆசிரிய விருத்தத்தானாதல் கலித்தாழிசையான் ஆதல் யாப்பு அமைதி பெற்று 'சுற்றத்தோடும் பொலிவதாக ஆடீரூசல் ஆடாமோவூசல்" என முடியப்பாடுவது என்று அபிதான சிந்தாமணி சுட்டும்.

இவர் நோவா பேழையும் வேடிக்கைப் பாடல்களும் என்ற தலைப்பில் இயற்கைப் பொருள்களைக் கவிதை வடிவில் விளக்குகிறார். பைபிளில் ஊர்வன நடப்பன பறப்பன ஆகியவற்றில் ஆணும் பெண்ணுமாக இரண்டு ஜோடிகளைப் பேழையில் பத்திரமாகக் கொண்டு வர வேண்டும் என்று இறைவன் கூறியதாக பைபிள் கூறும். ஆனால் அனந்தம்மாள் நோவா பேழையில் கப்பல் தமிழ் விருத்தம் என்ற பகுதியில் கற்பனைக் கவிதைகளில் உரைக்கும் பொருள்கள் வருமாறு:

1. மர வகைகள் 2. விலங்கினங்கள் 3.பறவை இனங்கள் 4. பூச்சி இனங்கள் 5. மீன் வகைகள் 6. நவதானிய வகைகள் 7. வித்து வகைகள் 8. பூ வகைகள் 9. கனி வகைகள் 10. ஆடை ஆபரண வகைகள் 11. வாத்திய வகைகள் 12. மருந்து வகைகள் 13. ஏனைய சரக்கு வகைகளைப் பட்டியலிடுவது அருமையாக உள்ளது.

ஆக இயற்கையோடு இயைந்த வாழ்க்கை நடத்தியவர் ஆசிரியர் என்பதும் எத்தனையோ வகைகளான மரம் பழம் நெல் மீன் கனி போன்றவற்றை கவிதையில் வடிக்கும் ஆற்றல் பெற்றவர் ஆசிரியர் என்பதும் இக்கவிதைகளால் விளங்குகின்றன.

வரப்பெற்றோம்



ஜெர்மானிய இறைத்தொண்டர் ரிங்கல்தௌபே
ஆசிரியர்: ஞானச் சந்திர ஜாண்சன்
கீர்த்தனா பதிப்பகம், சென்னை, 2016
விலை ₹250/

தமிழ் இலக்கணக் கூறுகள்
ஆசிரியர்: செ.யாக்கோபு
மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2016
விலை ₹125/

வாழ்வியல் விழுமியங்கள் (இலக்கிய ஆய்வுகள்)
ஆசிரியர்: த. அருள் பத்மராசன்
டுடே பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2016
விலை ₹90/

மதியின் சுவடுகள்
ஆசிரியர்: ம.ஜோயல் டேவிட்சன்
மோரியா ஊழியங்கள், சென்னை, 2016
விலை ₹40/

சுருள்கள் (கிறித்தவ இலக்கியக் கட்டுரைகள்)
ஆசிரியர்: து.மேஷாக்
கோர்த்லின் பதிப்பகம், சென்னை, 2016
விலை ₹80/

கற்போம் சாதிப்போம் (தன் முன்னேற்ற நூல்)
ஆசிரியர்: பி.வனத்தையன்
அம்பிகா பதிப்பகம், சென்னை, 2016
விலை ₹40/

கி.பி.2015 கிறிஸ்துமசில் இவர்களைச் சந்தித்தால்
(கவியரங்கக் கவிதைகள் தொகுப்பு,
டிசம்பர் 2016, விலை ₹50)



Christianity and Hinduism,
Rt. Rev. Dr. Robert Caldwell,
April 2016, Price: ₹50/-

செருமானியத் தமிழர் சீகன்பால்கு,
அருள்திரு.தா. ரேனியஸ் தேவப்பிரசாத்,
மார்ச் 2016, விலை ₹75
கடைசி மூன்று நூல்களும் பதிப்பிட்டோர்
கிருபா பதிப்பகம், சென்னை 600 073.



விடுவிக்கும் திருவிவிலியம்
ஆசிரியர்: ந.மனோவா சந்தோஷம்
நத்தானியேல் பதிப்பகம், சென்னை,
2016 விலை இல்லை.

விண்ணவர் மொழி ஏழு விண்ணப்பங்கள் ஏழு
ஆசிரியர்: B.J.பிரேமையா
ஜெஸ்ரேல் பதிப்பகம், சென்னை 600 023.
2016 விலை ₹60/-

திருமறைத் தேன் துளிகள்
அருள்திரு. Dr. T.சம்பத் பகவன்தாஸ்
தயா பதிப்பகம், சென்னை 600 113.
2016, விலை ₹75

சீர்திருத்தச் செம்மல் மார்ட்டின் லூதர்

முனைவர் எஸ்.மாணிக்கம்

முன்னுரை

மறைந்தும் பேசுகின்ற மாவீரர் ஒரு சிலரே. அன்னார் நிரலில் நிற்பவர்கள்தான் ஜெர்மானிய சீர்திருத்தச் செம்மல் மார்ட்டின் லூதர். தற்கால எலியா (Modern Elijah) என்று அழைக்கப்பெறும் மார்ட்டின் லூதரின் வாழ்வும் செயலும் பொதுவாகச் சமய வாதிகளுக்கும் குறிப்பாகக் கிறிஸ்தவத் திருச்சபைக்கும் ஒரு பெரிய அறைகூவலாக அமைகின்றன. மூடப் பழக்கவழக்கங்களினாலும் தவறான போதனைகளினாலும் அலைக்கழிக்கப்பட்டிருந்த ஐரோப்பியத் திருச்சபையை நெறிமுறைப்படுத்திய பெருமை மார்ட்டின் லூதர் அவர்களுக்கு உண்டு. 'இறைப் பற்றுறுதியின் மூலமே ஒருவன் ஆன்ம ஈடேற்றமடைகின்றானே தவிர தன் சுய செயல்களினாலன்று' என்ற பேருண்மைப் பொருளை விவிலியத் திருமறையின் ஆதாரத்தோடு விளம்பியவர் லூதர். கிறிஸ்தவ வாழ்க்கையின் வளர்ச்சிக்கும் வளத்திற்கும் திருமறை அறிவு இன்றியமையாதது. அதனை மக்கள் புரியாத இலத்தீன் போன்ற அன்னிய மொழியில் பயிலாமல் தத்தம் தாய் மொழியிலேயே பயின்று பயனுற வேண்டும் எனப் போதித்தவர். தாய்மொழியாம் ஜெர்மானியத்தில் தூய விவிலியத் திருமறையை ஆக்கம் செய்து அனைத்து மக்களும் பயிலக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தியவர். தன்னாட்டு மயமாக்குதல் என்ற பணியைச் சீரிய முறையில் செய்து காட்டியவர்.

திருச்சபை சந்திக்கும் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாணவும் குழம்பியிருக்கும் மக்களுக்குத் தெளிவு உண்டாக்கவும் மார்ட்டின் லூதர் தனது சொல்லையும் எழுத்தையும் பயன்படுத்தினார். பன்முக வைரம் போன்ற லூதரின்

ஒருசில அருட்பணிகள் குறித்தே இக்கட்டுரையில் எழுதியுள்ளேன்.



மார்ட்டின் லூதர் சீர்திருத்த வரலாறு: இக்கால நோக்கில் மார்ட்டின் லூதரின் சீர்திருத்த வரலாறு சொல்லும் முதல் செய்தி திருச்சபைக்குச் சீர்திருத்தம் எப்பொழுதும் தேவை என்பதே. திருச்சபை கிறிஸ்துவின் உடல் அல்லது விசுவாசிகளின் திருக்கூட்டம் எனக்கருதினாலும் திருச்சபையும் தவறு செய்யக்கூடிய மனிதர்களைக் கொண்ட ஓர் அமைப்புத்தான் என்ற உண்மையை நாம் மறுப்பதற்கில்லை. தவறு செய்யாத மனிதர் எவரும் இலர் எனத் திருமறையும் கூறுகின்றது. ஆதலால் திருச்சபையோ திருச்சபை மாமன்றங்களோ திருச்சபை சார்ந்த நிறுவனங்களோ தவறே செய்வதில்லை எனக் கூறவியலாது (Neither the Church nor Church Councils nor Church based bodies are infallible). எனவே குற்றங்கள் நிகழ்கின்றபொழுது சீர்கேடுகள் திருச்சபையில் தோன்றும்பொழுது சீர்திருத்தம் தேவைப்படுகின்றது. அவ்வப்பொழுது திருச்சபை தூய்மைப்படுத்தப் பெறுவது தேவை என்ற உண்மையை மார்ட்டின் லூதர் 500 ஆண்டுகளுக்கு முன்னரே சொல்லிச் சென்றுள்ளார். அவர் கூற்று இக்காலத்திற்கும் எல்லாவகைத் திருச்சபைப் பிரிவினருக்கும் பொருந்தும் என்பது தெளிவு. சீர்கேடுகள் நேரும் பொழுதெல்லாம் திருச்சபைத் தலைவர்கள் தாமே முன்வந்து சீர்திருத்தப் பணிகளைச் செய்திட வேண்டும்; அது சாலச் சிறந்தது. அவ்வாறு செய்யாவிடில் சீர்திருத்தம் ஒரு புரட்சியாக வெடிக்கும்; திருச்சபை வாழ்வில் அக்கறையும் ஈடுபாடும் கொண்ட திருத்தொண்டர்கள் சீர்திருத்தவாதிகளாக மாறிப் போர்க்கொடியும் ஏந்துவர்; அத்தகைய செயல் தவிர்க்கமுடியாத ஒரு வரலாற்று நிர்ப்பந்தமாக மாறிவிடும் என்பதையும் மார்ட்டின் லூதரின் சீர்திருத்த வரலாறு நமக்குக் கூறுகின்றது. கடலில் அழுத்தம் ஏற்படும்பொழுது புயல் தோன்றுகிறது. அதேபோல் சமுதாயத்தில் கேடுகள் நேரும்பொழுது சீர்திருத்தக்காரர்கள் தோன்றுவார்கள் என்பதும் நியதி.

மார்டின் லூதரின் சீர்திருத்த வரலாறு கூறும் இரண்டாவது செய்தி என்னவெனில் காலத்தின் முடிவுகளைச் சந்திக்கக்கூடிய இறையியலை திருமறை விளக்கங்களைத் தரவேண்டும் என்பதே. வேதாகமம அடிப்படையில் திருச்சபைப் பிரச்சனைகளை அணுகக்கூடிய செயல்முறை இறையியல் தேவை என்பதே. காலத்தின் மாற்றங்களுக்கு ஏற்ப வாழ்க்கைப் பிரச்சனைகளோடு ஒன்றி நிற்கும் இறையியல் (Contexual Theology) வேதாகம

விளக்கங்கள் தாம் இன்றும் தேவைப்படுகிறது என்பதை சீர்திருத்த வரலாறு தெளிவுபடுத்துகிறது. 'நற்செயல்களினால் (கர்ம யோகா) ஒருவன் பாவ மன்னிப்பு – பாவ விமோசனம் பெறலாம்; பாவங்களை மன்னிக்க போப்பரசருக்கும் திருச்சபை மாமன்றங்களுக்கும் அதிகாரம் உண்டு' எனத் தவறாகப் போதித்து சமயத்தை ஒரு சந்தைப் பொருளாக மாற்றிய காலகட்டத்தில்தான் மார்ட்டின் லூதர் தமது விசுவாச திண்மையினாலும் வேதசாத்திரப் புலமையினாலும் நுண்மாண் நுழைபுலனாலும் தவறான போதனைகளை வன்மையாகச் சாடினார். விவிலியத் திருமறையின் அடிப்படையில் சரியான விளக்கங்களைத் தந்தார்.

தன்னாட்டு மயமாக்குதல் (Indigenization)

இடைக்கால ஐரோப்பியத் திருச்சபையின் தவறான போதனைகளைக் கடுமையாகச் சாடியும் திருச்சபைத் தலைவர்களின் வரம்பற்ற அதிகார முறைகேடுகளைக் கண்டித்தும் ஜெர்மானிய தேசிய உணர்வைத் தட்டியெழுப்பியும் இலத்தீன் மொழி ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டுத் தாய்மொழியாம் ஜெர்மானியத்தில் இறைவனை இயல்பாகவும் இதயபூர்வமாகவும் அறிவுபூர்வமாகவும் வணங்கவும் வழிபாடுகளை நடத்தவும் தூய விவிலியத் திருமறையை யாவரும் எவ்விதக் கட்டுபாடுமின்றிக் கற்றுணரவும் லூதர் மேற்கொண்ட செயல்களெல்லாம் இத்தன்னாட்டு மயமாக்கத்திற்குச் சான்றுகளாகும். இவ்விளைவுகள் மூன்று துறைகளில் வெளிப்படுவதைக் காணலாம்.

தூய விவிலியத் திருமறையை இலத்தீன் மொழியிலிருந்து தாய்மொழியாம் ஜெர்மானியத்திற்கு ஆக்கம் செய்தது.

வழிபாட்டு ஒழுங்கு முறையை (Liturgical order) இலத்தீனிலிருந்து ஜெர்மானிய மொழிக்கு மாற்றி அமைத்தது.

நற்செய்திக் கிறிஸ்தவ இலக்கியம் படைத்தது. இந்த மூன்று பிரிவின்கீழ் லூதர் தன்னாட்டு மயமாக்கும் சீரிய செயலைச் செம்மையாகச் செய்து ஒரு சீர்திருத்தத்தை மட்டுமன்று ஒரு பெரிய தேசியப் புரட்சியையே உண்டு பண்ணிவிட்டார். தனிமனித அடிப்படை வாழ்வுரிமை கோரி ஒரு போர்க்கொடியையே உயர்த்திவிட்டார்.

முடிவுரை

இத்தகைய இறைமக்கள் திருச்சபைத் தலைவர்கள் இறையியல் வல்லுனர்கள் இன்றைய திருச்சபைக்கும் நாட்டிற்கும் மிகவும் தேவை என்பதை மார்ட்டின் லூதரின் சீர்திருத்த வரலாறு கூறுகின்றது. இழிவான ஆதாயத்தைத் தேடாமல் மலிவான விளம்பரத்தை விரும்பாமல் எதிர்ப்பின் மத்தியில் ஏளனத்தின் மத்தியில் தனிமனிதராய் இறுதிவரை உறுதிகுலையாமல் நின்ற சத்திய சாட்சிதான் மார்ட்டின் லூதர். அத்தகைய ஊழியக்காரர்களின் மூலமே இறையரசு நிறுவப்படும். இறைநாமம் புகழப்படும் என்ற உண்மையையும் மார்ட்டின் லூதரின் சீர்திருத்த வரலாறு கூறுகின்றது. ஆகவேதான் அய்நூறு ஆண்டுகளுக்குப் பிறகும்கூட மார்ட்டின் லூதரின் வாழ்க்கையும் செயலும் நமக்கு இன்றும் பயன்தருவனவாகத் திகழுகின்றன. உற்சாகத்தை ஊட்டும் ஒரு நல்ல முன்மாதிரியாகவும் அமைகின்றன.

கிறிஸ்தவ இலக்கிய சங்கம் 1992இல் "மார்ட்டின் லூதர் சீர்திருத்த வரலாறு: இக்கால நோக்கில்" என்ற தலைப்பில் வெளியிட்ட சிறு நூலிலிருந்து தொகுக்கப்பட்டது.

– அருள்பணி **பெஞ்சமின் இன்பராசா.**



வியத்தகு மேதை வீரமாமுனிவர்

உலகெங்கும் கிறித்தவ சமயம் மானிடர் தம் நலனுக்காகப் பல்வேறு ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளைச் செய்து வந்துள்ளது. ஆன்மீகத்தில் அக ஒளி ஏற்றுவதற்கு அறிவுசார்ந்த தெளிவைக் கொடுக்கக் கிறித்தவ இறையடியார்கள் மொழி வழிப் பணி செய்து வந்துள்ளனர்.

தத்துவப் போதகர் என்ற இராபர்ட் தெ நோபிலி வீரமாமுனிவர் சீகன்பால்கு கால்டுவெல் ஜி.யு. போப் போன்ற சில அறிஞர் பெருமக்களைச் சான்றாகக் கூறலாம். இவர்கள் மேனாட்டவர் எனினும் அருட்பணியை முன்னிட்டுத் தமிழ் மொழியைத் தம் மொழியாகக் கொண்டு பணியாற்றியவர்கள்.

இத்தாலி நாட்டில் பிறந்த வீரமாமுனிவர் கி.பி. 18 ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டிற்கு வந்து ஆன்மீகப் பணியும் தமிழ்ப் பணியும் செய்து வந்தார். பெயர் பெற்ற பெருந்துறவியாக வாழ்ந்த முனிவர் பல இடங்களில் பரமனின் தொண்டாற்றி வந்தார். இவர் இத்தாலியத் தமிழ் வித்தகர் எனப் போற்றப்பட்டார். இவர் இயற்றிய தேம்பாவணிக் காப்பியம் தமிழ் அறிஞர்களால் போற்றப்பெறும் சிறந்த இலக்கியம். இவரது திருக்காவலூர்க் கலம்பகம் கித்தேரியம்மாள் அம்மானை அன்னை அழுங்கல் அந்தாதி போன்ற சிற்றிலக்கியங்கள் கிறித்தவத்திற்குப் பெருமை சேர்ப்பவை. தமிழில் முதல் அகராதியை 'சதுரகராதி' என்ற பெயரில் உருவாக்கியவர் இவரே. தமிழில் இலக்கண நூல்கள் உரைநடை நூல்கள் எழுதியுள்ளார். தமிழ் எழுத்துக்களில் சீர்திருத்தம் செய்துள்ளார். அச்சீர்திருத்தம் இன்றும் தமிழ் இலக்கணத்தில் போற்றப்படுகின்றது. திருக்குறளை இலத்தீன் மொழியில் மொழியாக்கம் செய்து திருக்குறளின் மேன்மையை முதன் முதல் உலகுக்கு உணர்த்தியவர் வீரமாமுனிவரே. இவர் மருத்துவ நூல்கள் எழுதியதோடு மருத்துவராகவும் விளங்கியுள்ளார். இவரது ஆன்மீகப் பணி தமிழ்ப் பணி குறித்தத் தெளிவான செய்திகளை இந்த 'வியத்தகு மேதை வீரமாமுனிவர்' என்னும் நூல் நன்கு பதிவு செய்துள்ளதாக விளங்குகின்றது.

வியத்தகு மேதை வீரமாமுனிவர்

ஆசிரியர்: அருள்தந்தை முனைவர் **சி.மணிவளன் சே.ச.**

தென் பொதிகைத் தமிழ்ச் சங்கம்

86 மேலரதி வீதி, எட்டையபுரம்– 628 902.

இலக்கண மணித்திரள் – ஒரு மதிப்பீடு

தொல்காப்பியனை வருடாமல் இலக்கண ஆக்கத்தை விளக்குவது முழுமையளிக்காது என்பதனைத் தமிழ் உலகம் நன்கறியும். நூலாசிரியரும் தொல்காப்பியக் காலத்திலிருந்தே தொடங்குகின்றார். தொல் தமிழரின் வாழ்வியல் தளத்தில் இலக்கண ஆக்கத்தைப் பற்றிப் பேசுகிறார். தமிழ் வளர்ச்சிக்கு நீங்காப் பங்கினை அளித்துள்ள கிறித்தவ அருட்தொண்டர்களுள் அதிகம் அறியப்படாத ஆன்றோரையும் இந்நூல் வழியே வெளிக் கொணர்ந்துள்ளமை பாராட்டத்தக்கது. சிறப்பாக சூ.இன்னாசியின் அன்றிக் அடிகளையும், கா. மீனாட்சி சுந்தரத்தின் பிலிப் பத்தேயுஸ் அவர்களையும் மீண்டும் வெளிக் கொணர்ந்துள்ளமையும் அவர்தம் கடல் கடந்த தமிழ் இலக்கணப் பணியை நினைவு படுத்தியுள்ளமையும் நூலின் சிறப்பம்சமாகும்.

பரிணாம வளர்ச்சி கொண்ட தமிழ் இலக்கணத்தை இலக்கியப் பின்புலத்தோடு மட்டுமின்றி வரலாற்றுத் தளத்திலும் வைத்து நுண்ணாய்வு செய்திருக்கிறார் ஆசிரியர். அவ்வாறே தொல்காப்பியம் காலந்தோறும் எவ்வித அதிர்வலைகளை இலக்கணத்தின்பால் ஏற்படுத்துகின்றது என்பதனை மீ. காசுமானின் தமிழ்க் காப்புஇயம் வழியே புலப்படுத்துகின்றார். தொடர்ந்து சிலம்பில் நிறைந்திருக்கும் இலக்கணக் குறைபாடுகளைச் சிந்தனை வெளியில் சிதற விடுகிறார். அயலகத்து கிறித்தவரே அன்றி நம்மகத்து கிறித்தவரும் ஆற்றியுள்ள பங்களிப்பு ஆசிரியரால் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. அதன்படி சுழங்கைத் தம்பிரானின் வாழ்க்கைக் குறிப்போடு நன்னூல் உரையின் தனிச்சிறப்பு பற்றிய குறிப்புகள் போற்றத்தக்கது. அவ்வாறே நூல் முழுமையும் யாப்பிலக்கண வளர்ச்சிதனை விளக்குங்கால் முனைவரின் யாப்பிலக்கணப் புலமை தெறித்தோடுகிறது. தொடர்ந்து எல்லிஸ் துரையின் மொழிப்பணித் தொடங்கி சூ.இன்னாசி அவர்களின் கிறித்தவத் தமிழ்க் களஞ்சியம் பற்றிய பதிவுகளும் இன்றைய கிறித்தவ தமிழ் உலகத்திற்கு மட்டுமிலாது தமிழ் கூறும் நல்லுலகம் முழுமைக்கும் இந்நூலின் தேவையைக் காட்டுகின்றது.

தமிழிலக்கிய உலகில் ஆழ்ந்த புலமையும் எளிமையும் நிறைந்த எங்கள் ஆசான் முனைவர் பாரதிபுத்திரன், புதுமையும் பழமையும் கலந்த மொழியியல் வல்லோன் எங்கள் ஆசான் முனைவர். ப. டேவிட் பிரபாகர் ஆகியோரின் அணிந்துரை ஒளியில், சென்னைக் கிறித்தவக் கல்லூரி முதல்வர். முனைவர். இர.வி. அலெக்சாண்டர் ஜேசுதாசன் வாழ்த்துரையில் எழில் மிகு செழுமை கண்டுள்ளது. இந்நூல் அளவில் சிறியது, எனினும் அரிய பல செய்திகளை உள்ளடக்கியுள்ளமையால் இந்த இலக்கண மணித்திரள் நவீன தமிழ் உலகின் உயர் மதிப்புடைய நவமணித்திரளாக விளங்குகிறது.

– அருள்பணி ம.மகிமைநாத் வினோத்



இலக்கண மணித்திரள்

ஆசிரியர்: முனைவர் **த.அருள்பத்மராசன்**

டுடே பப்ளிகேஷன்ஸ்,

(முதற்பதிப்பு) 2016 விலை ரூ.80/–

இயேசு அந்தாதி

உலகில் இன்று வாழும் தமிழ்க் கவிஞர்களில் இலக்கியப் பயணமாகவும் தமிழ்த் தொண்டுக்காகவும் உலக நாடுகளை மிக அதிகமாகச் சுற்றி வந்த சுற்றி வந்து கொண்டிருக்கிற ஒருவர் உண்டெனில் அது 'பெருங்கவிக்கோ" என்ற பட்டப் பெயராலேயே பெரிதும் அறியப் பெறும் முதுபெருங் கவிஞர் வா.மு. சேதுராமன் அவர்கள். எண்பதைத் தாண்டிய அகவையிலும் இருபது வயது இளைஞரைப்போல தமிழின விடுதலைக்காகவும் மேம்பாட்டுக் காகவும் படைப்பு பதிப்பு இலக்கிய நிகழ்வுகள் சமுதாயப் போராட்டங்கள் நடைப் பயணங்கள் எனப் பல்வேறு நிகழ்வுகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுவரும் இக்கவிக்கோமான் அண்மையில் தமது இலக்கிய வாழ்வுப் பயணத்தையும் தமிழினத்தின் வரலாற்றையும் பின்னிப் பிணைந்து புனைந்து தந்திருக்கும் 'சேது காப்பியம்" என்ற காவியத்தின் எட்டாம் தொகுதியைத் தலைநகர் சென்னையில் இனமானப் பேராசிரியர் க.அன்பழகனார் தலைமையில் வெளியிட்டது குறிப்பிடத்தக்கதோர் இலக்கிய நிகழ்வு. சுமார் பத்தாயிரம் மரபுக் கவிதைகளை உள்ளடக்கியது இக்காப்பியத்தின் எட்டு தொகுதிகள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இத்தகு நீண்ட கவிதைப் பயணத்தக்குச் சொந்தக்காரரான பெருங்கவிக்கோவின் அற்புதமான இன்னொரு அண்மைப் படைப்புதான் 'இயேசு அந்தாதி". மலேசிய மண்ணில் வாழும் கவிஞர் முரசுராசன் என்ற கிறித்தவ அருள்தொண்டரின் தூண்டு தலால் இந்நூலைப் படைத்ததாக நெஞ்சு நெகிழும் நூலாசிரியர் கடினமான கட்டளைக் கலித்துறை யாப்பில் அமைந்த நூறு பாக்களால் கிறித்து பெருமானின் வாழ்வையும் வாக்குகளையும் வண்டமிழ்க் கவிதைகளாக வடித்துள்ளார்.

ஆதியும் அந்தமுமாக விளங்கும் ஆண்டவர் இயேசுவை அந்தாதிப் பாக்களால் பாவலர் பாடியது பொருத்தமே என பாராட்டுரையில் அருட்கவிஞர் ஞான. ஆனந்தராஜ் அழகுறக் குறித்துள்ளார்.

இயேசுவின் மலைப்பொழிவு அருஞ்செயல்கள் அருளுரைகள் சிலுவைத் திருப்பாடுகள் எனப் பெருமானின் முழு வாழ்வையும் தழுவி முழு நிறைவளிக்கும் வகையில் முத்தமிழ்க் கவிதைகள் அமைந்துள்ளன. செறிவான மரபுக் கவிதைகள் ஆதலின் ஆரம்ப நிலையினர் சற்று சிரமப்படும் அளவு சில இடங்களில் கவி நடையும் வாக்கிய அமைப்புகளும் அமைந்திருப்பினும் முயன்று படிப்பார்க்கு பலாச்சுளைகளாய் இனிக்க வல்ல இப்பைந்தமிழ்ப் பாவியத்தை கிறித்தவ தமிழ்ப் பெரியார்கள் பலரும் போற்றிப் பாராட்டியுள்ளனர். கிறித்து நெறியின் சாரத்தைச் சந்தத் தமிழில் சுவைக்க விழைவாருக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதம் இந்நூல் எனில் மிகையன்று.

– மோ.மை.பா



'இயேசு அந்தாதி'

பெருங்கவிக்கோ **வா.மு.சேதுராமன்**

கவி அரசன் பதிப்பகம், சென்னை–92.

[முதற்பதிப்பு] 2016. விலை ரூ.100/–

இந்திய விடுதலைப் போராட்டமும் கிறித்தவர்களும்

இன்றைய அரசியல் சமுதாயச் சூழலில் வெகுவாகத் திரித்துக் கூறப்படும் இந்திய வரலாறு குறிப்பாக இந்திய விடுதலைப் போராட்ட வரலாறு பற்றி பலரும் அறியாத பலருக்கும் அறிவிக்கப்படாத அல்லது மக்கள் மறந்த அல்லது மக்களுக்கு மறைக்கப்பட்ட பல்வேறு அரிய செய்திகளை உள்ளடக்கி அண்மையில் வெளிவந்துள்ள அற்புதமான ஒரு வரலாற்றுப் பேழைதான் தற்போது புகழ்மிகு சென்னை இலயோலா கல்லூரியின் முதல்வராகத் திகழும் வரலாற்றுத் துறைப் பேராசான் அருள்தந்தை முனைவர் எம்.ஏ. சேவியர் சே.ச. அவர்கள் எழுதி திண்டுக்கல் வைகறைப் பதிப்பகம் வெளியிட்டுள்ள 'இந்திய விடுதலைப் போராட்டமும் கிறித்தவர்களும்" என்ற பொன்னூல்.

இந்தியக் கிறித்தவர்களுக்கும் நாட்டுப் பற்றுக்கும் தொலைதூரம் என்பது போலவும் தாய்நாட்டுக்காகப் போராடுவதில் அவர்கள் பெரும்பங்காற்றுவதில்லை என்பது போலவும் பல பொய்யான பரப்புரைகளைத் திட்டமிட்டுத் தொடர்ந்து பரப்பி வரும் மதவாத சக்திகளின் முயற்சிகளை முறியடிக்கும் ஆதாரபூர்வமான அறிவுபூர்வமான வரலாற்று ஆவணமாக வெளிவந்துள்ளது இந்நூல். இந்திய விடுதலைப் போராட்டத்தில் தொடக்க காலம் தொட்டே கிறித்தவத்தின் பல்பிரிவினரும் எவ்வாறு தனி மனிதர்களாகவும் அமைப்பு ரீதியிலும் முனைப்புடன் ஈடுபட்டு வந்துள்ளனர் என்பதைப் பற்றிய பல அரிய தகவல்களை இந்நூல் நிரல்பட எடுத்தியம்புகிறது.

'சிப்பாய்க் கலகத்துக்கும் (1857) முன்னெழுந்த கிறித்தவர்களின் 'பிண்டோ புரட்சியையும்" (1787) கிறித்தவ ஆதிவாசி மக்களின் 'முண்டா புரட்சியையும்" பற்றிய செய்திகள் நம் விழிகளை வியப்பால் விரிய வைக்கின்றன. கேரளப் பகுதியில் நடந்த 'வைக்கம் புரட்சியில்கூட ஈ.வெ.ரா. பெரியாருக்கு முன்னமே தலைமையேற்க இருந்தவர் ஜார்ஜ் ஜோசப் என்ற மதுரைத் தமிழர்தான் என்பதும் தற்போது தாம்பரத்தில் இயங்கும் சென்னை கிறித்தவக் கல்லூரியும் ஐரோப்பியர்களான மெக்னிக்கல் பாயிட் ஹாக் முதலிய அக்கல்லூரி முதல்வர்களும் இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு எவ்வளவு ஊக்கமும் ஆக்கமும் ஊட்டினர் என்பதும் காங்கிரஸ் இயக்கப் பெருந்தலைவர் தீரர் சத்தியமூர்த்தியின் விடுதலைப் போராட்ட ஈடுபாட்டிற்கே அவர்கள்தான் காரணர் என்பதும் இந்நூல் தரும் மலைப்பூட்டும் செய்திகள். இத்தகு அறிதற்கரிய

அறிதற்குரிய பல வரலாற்றுண்மைகளின் களசியமாய்த் திகழும் இந்நூல் சரியான இந்திய வரலாற்றை அறிய அவாவும் அனைவரும் கற்றுணரவேண்டிய நன்னூல் என்பதில் எள்ளவும் ஐயமில்லை.

மோ.மை.பா



'இந்திய விடுதலைப் போராட்டமும் கிறித்தவர்களும்"

முனைவர் **எம்.ஏ.சேவியர் சே.ச.**

திண்டுக்கல் வைகறைப் பதிப்பகம்,

[முதற்பதிப்பு] செப்.2016. விலை ரூ.150/–

திருச்சபை ஒன்றிணைய வேண்டும்

கு.ஞானவில்சன்
தமிழ்த்துறை
பிஷப் நியூபிகின் கல்வியியல் கல்லூரி,
சென்னை

திருத்தம் வேண்டும்
திருச்சபைகளில் சீர்திருத்தம் வேண்டும்
சீர்திருத்த திருச்சபைகள் பெயரில் மட்டுமா வேண்டும்?
மனந்திருந்திய மக்களுள்ள சீர்திருச்சபைகள்தான் வேண்டும்.

திருச்சபை ஒன்றிணைய

அதிகாரம் செலுத்தும் அரக்கர்கள் வேண்டாம்
அன்புகாட்டி அரவணைக்கும் ஆளுமைகள் வேண்டும்

திருச்சபை ஒன்றிணைய

இருப்பதில் கொடுப்பவர் வேண்டாம்
இருப்பதையே பகிர்பவர் வேண்டும்

திருச்சபை ஒன்றிணைய

காசைமட்டும் கணக்கு பார்க்கும் ஆயக்காரர்கள் வேண்டாம்
கசக்காமல் மக்கள் கசங்காமல் கனிவுகாட்டும் மேய்ப்பர்கள் வேண்டும்

திருச்சபை ஒன்றிணைய

சாதியம் பேசும் திருச் சபைகள் வேண்டாம்
மக்கள் அனை வரும் சமமென நினைக்க வேண்டும்

திருச்சபை ஒன்றிணைய

தலை வணங்கும் தலைவர்கள் வேண்டாம்
திருச்சபைக்கு மக்கள் மனம் வணங்கும் தலைவர்கள் வேண்டும்

திருச்சபை ஒன்றிணைய

திருமுழுக்கு யோவானின் தலைக்கேட்ட ஏரோதியாள் வேண்டாம்
தன் தலைசீரால் பாதம் பணிந்த மரியாள் வேண்டும்.

திருச்சபை ஒன்றிணைய

பணம் கொடுக்கும் மக்கள் மட்டுமா வேண்டும்?
நல்ல குணம் கொண்ட மக்கள்தான் வேண்டும்

திருச்சபை ஒன்றிணைய

பிரித்தாளும் வாக்கெடுப்பு வேண்டாம்
மனமொத்து தேர்ந்தெடுக்கும் பழக்கமிங்கு வேண்டும்

திருச்சபை ஒன்றிணைய

ஆண்டவர் வேண்டுவது வேண்டும்
அனைவரும் ஒன்றாயிருப்பது வேண்டும்

திருச்சபை ஒன்றிணைய

இறைவா உம் அருள் இங்கு வேண்டும்.

‘தரு’ அன்பர்களின் கவனத்திற்கு...

தரு மறுமலர்ச்சி வரிசையில் இது 27ஆவது இதழ் சிறப்பிதழ். தருவின் வளர்ச்சிக்கும் உலகக் கிறித்தவத் தமிழ்ப் பேரவையின் முயற்சிகளுக்கும் தாங்கள் அளித்து வரும் ஆதரவைத் தொடர்ந்து நல்க வேண்டுகிறோம். தருவுக்கான கொடைகள் வரவேற்கப்படுகின்றன.

ஆண்டுக்கொடை	ரூ.100/
வாழ்நாள் கொடை	ரூ.500/

‘உலகக் கிறித்தவத் தமிழ்ப் பேரவை’ கிறிஸ்துவின் அன்பை முத்தமிழால் உலகுக்குப் பகரும் நோக்கில், கிறித்தவத் தமிழ் அறிஞர்களால் உருவாக்கப்பெற்ற இயக்கமாகும். கிறித்தவ இலக்கியங்கள், தமிழ்த் திருச்சபை வரலாறு ஆகியவற்றை மின்பதிவுகளாக்குதல், , கிறித்தவக் கலைகளுக்குப் புத்துயிர் அளித்தல், கிறித்தவத் தமிழியல் தொடர்பான ஆய்வுகளுக்கான ஆதாரவள மையங்களை உருவாக்குதல் போன்ற இன்றியமையாத பணிகளைப் பேரவை முன்னெடுத்து வருகிறது.

தங்கள் கொடைகளைக் காசோலை, வரைவோலை அல்லது பணவிடை வாயிலாக அனுப்ப வேண்டிய முகவரிகள்:

Dr .P.David Prabhakar (WCTA - General Secaratary)
Dept. of Tamil, Madras Christian College, Chennai-59

Dr. J.samuel Cornelius (WCTA - Treasurer),
12, Ramachandran Street, Shanthi Avenue, Selaiyur PO., Chennai-73

காசோலையாயின் ’WORLD CHRISTIAN TAMIL ACADEMY’ என்ற பெயரில் வழங்குக.
நேரடி வங்கிப் பரிமாற்றத்திற்கு, ’WORLD CHRISTIAN TAMIL ACADEMY’
A/c no. 019101000033815 Indian Overseas bank,
MCC Campus Branch, Chennai-600059 MICR 600020052, IFSC IOBA0000191

‘தரு’ இதழ்க் குழாம்

புரவலர்: அருள்திரு.சுந்தர் தேவபிரசாது,
நிறுவன ஆசிரியர்: மறைந்த பேரா. பொன்னு.ஆ.சத்தியசாட்சி

ஆசிரியர்கள்

முனைவர்.மோசசு மைக்கேல் பாரடே
9003197577
mmftamizh@gmail.com

முனைவர் ப.டேவிட் பிரபாகர்
9444024855
tamilprofessor@gmail.com

வேலூரில் படைப்பிலக்கியப் பயிலரங்கம்

படைப்பாளர்களே ஆய்வாளர்களாக மாறினர்

உலகக் கிறித்தவத் தமிழ்ப் பேரவையின் சார்பாக வேலூர் ஊரீசு மேனிலைப்பள்ளியில் படைப்பிலக்கியப் பயிலரங்கம் 24.11.2016 இல் நடைபெற்றது.

இப்பயிலரங்கில் தமிழ் ஆசிரியர்கள் ஆய்வாளர்கள் படைப்பாளர்கள் என 28 பேர் பங்கேற்றனர். மரபுக் கவிதை எழுதும் பயிற்சியை உலகக் கிறித்தவத் தமிழ்ப் பேரவைத் தலைவர் முனைவர் தே. செல்லையா அளித்தார். முதற்கண் ஆசிரியப்பா எழுதுவதற்கான இலக்கணம் கற்பிக்கப்பட்டது. தேநீர் இடைவேளைக்குப் பிறகு பங்கேற்றோர் ஆசிரியப்பா படைத்தனர். ஒவ்வொருவரின் படைப்பும் வெண் பலகையில் அரங்கேறியது. அப்பாக்களில் உள்ள உருவம் உள்ளடக்கம் உத்தி விவாதிக்கப்பட்டது. இம்முறை பங்கேற்றோர்களை வெகுவாகக் கவர்ந்தது. படைப்பாளர்களே ஆய்வாளர்களாகவும் மாறினார். தொடர்ந்து வெண்பா சிறுகதை போன்றவற்றை எழுதும் பயிற்சியும் அளிக்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோள் விடுக்கப்பட்டது. பயிற்சி அளித்தவர் அதற்கு இசைவு தெரிவித்தார்.

இப்பயிலரங்கில் பேரவைச் செயற்குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர். முனைவர் திருஇன்ப எழிலன் வரவேற்புரை நிகழ்த்தினார். பேரா.பி.எ. டேவிட் பயிலரங்க நிகழ்வினை மதிப்பீடு செய்தார். அருள்திரு. லாசரஸ் செல்வநாதன் கீர்த்தனை சிலவற்றைச் சுட்டிக்காட்டி அதில் பொதிந்துள்ள இலக்கண நயத்தினை எடுத்துரைத்து இறை வேண்டல் ஏறெடுத்தார்.

பள்ளித் தலைமை ஆசிரியர் திரு.த. இராபர்ட் ராஜசேகரன் பயனுரை வழங்கினார். பள்ளிப் பட்டதாரித் தமிழ் ஆசிரியர் திரு.A.S.இன்பநாதன் பயிலரங்க ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

—தே.செல்லையா





‘தரு’ தழைத்து ஆலாய்...அரசாய்... வானுயர வாழ்த்துகிறோம்

திருமதி & முனைவர் யோ.டென்னிசன்
மேனாள் தமிழ்த் துறைத் தலைவர்
பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி
துணைத் தலைவர்
உலகக் கிறித்தவத் தமிழ்ப் பேரவை.

வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்;
அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டே.
யோவான் 5:39



‘தரு ஆய்விதழ் தழைத்தோங்க என் நல்வாழ்த்துகள்!

அருள்திரு. **J.P.யேசுபாதம்**
(துணைத்தலைவர், உ.கி.த. பேரவை)
20B 11 ஆவது தெரு, ஜெயச்சந்திரன் நகர்
ஜல்லடையன்பேட்டை, சென்னை 600 100.
கைபேசி: 9445404300



முத்தமிழால்
கிறித்துவின்
நற்செய்தியைப்
பகர்ந்துவரும்
‘தரு’
செழிக்க
வாழ்த்துகள்.

முனைவர் பி.சாமுவேல் ஆசீர்வாதம்
எம். எஸ்.சி., எம். ஃபில்., பிஎச்.டி
அறிவியல் புல முதன்மையர் & இயற்பியல் துறைத்தலைவர்
சென்னைக் கிறித்தவக் கல்லூரி

செயலர்,
தமிழ் சுவிசேஷ லுத்தரன் திருச்சபை, தாம்பரம்



RUBY BUILDERS

Call **044 - 3009 3009**

ruby
Building Future

4500+ HAPPY families

180+ COMPLETED projects

20+ years of EXPERIENCE

CREDAI

MEMBER

ONE name that has always stood for consistent quality - Ruby Builders

marketing@rubybuilderschennai.com www.rubybuilders.in

247/B, Velachery Main Road, Selaiyur, Chennai-73 Ph: 9042 666 444, 9042 666 555

CSI CORLEY HIGHER SECONDARY SCHOOL
EAST TAMBARAM



Mr.S.ARUL NATHAN
Diocesan Education Officer

Mr.A.E.SACHIDHANANDHAM
Correspondent

Dr.V.RAJU
Headmaster